விரைவில் வருகிறது!

பார்த்திபன் ப்ரொடக்ஷன்ஸ்
அளிக்கும்

அருணா பிலிம்ஸ்

அபலை அஞ்சுகம்

தயாரிப்பு & டைரக்ஷன்
R.M. கிருஷ்ண சாமி

மூலக்கதை: கி.ரா.கோபாலன் · திரைக்கதை வசனம்: A.L.நாராயணன்

சங்கீதம்: K.V. மஹாதேவன்

பாடல்கள்: உடுமலை நாராயணகவி · கண்ணதாசன் · மருதகாசி

விரைவில்
வருகிறது
பானு பிலிம்ஸ் அளிக்கும்
ராஜ்ஸ்ரீயின்
சபாஷ் ராமு
தமிழ்
N.T.ராமாராவ் - M.N.ராஜம்
மற்றும் பலர் நடித்தது
வசனம்: உதயகுமார்
பாடல்கள்: கு.சா.கிருஷ்ணமூர்த்தி
சங்கீதம்: T.M.இப்ராஹீம்
டைரக்ஷன் C.S.ராவ்
விபரங்களுக்கு: PHONE
3254
பானு பிலிம்ஸ், 247-பைகிருப்ட்ஸ் ரோட் சென்னை-14

இம்மாத
வெளியீடு
சேகர் ஆர்ட் பிலிம்
என்டர்பிரைசஸ்...
மணிமேகலை
சங்கீதம் · G. ராமனாதன்
திரைக்கதை · வசனம் · இளங்கோவ
டைரக்ஷன் · V.S. ராகவ
ALL RIGHTS OWNED BY...
ஸ்ரீ ராமா பிலிம்ஸ்
சென்னை-2.

விரைவில்
வருகிறது
பானு பிலிம்ஸ் அளிக்கும்
ராஜ்ஸ்ரீயின்
சபாஷ்
ராமு
தமிழ்
N.T.ராமாராவ் - M.N.ராஜம்
மற்றும் பலர் நடித்தது
வசனம்: உதயகுமார்
பாடல்கள்: கு.சா.கிருஷ்ணமூர்த்தி
சங்கீதம்: T.M.இப்ராஹீம்
டைரக்‌ஷன் C.S.ராவ்
விபரங்களுக்கு: PHONE 83254
பானு பிலிம்ஸ், 247-பைகிராப்ட்ஸ் ரோட் சென்னை-14

89694

சேவாஸ்கிரீன்ஸ்
நாலு வேலி நிலம்
கதை, வசனம்: தி. ஜானகிராமன்
டைரக்ஷன் வி. ஸ்ரீநிவாஸன்
செப்டம்பர் 2உ முதல் தென்னாடெங்கும்
L R SWAMI

படம் 18

காட்சி 1

பேசும் படம்

★ செப்டம்பர்-1959 ★

பொருளடக்கம்

பக்கம்

1. கலையுலகில் ... 6
2. நான் பெற்ற செல்வம் ... 12
3. பி. எஸ். வி. யின் 'வீரக்கனல்'லில் எம். என். ராஜம் ... 18
4. விநாயகா பிக்சர்ஸ் 'ரத்னபுரி இளவரசி'யில் குசலகுமாரி ... 19
5. பி. எஸ். வி. யின் 'வீரக்கனல்'லில் எம். என். நம்பியார் ... 20
6. நரசுவின் 'ஸ்ரீ வள்ளி'யில் சிவாஜி கணேசன்-பத்மினி ... 21
7. சௌகார் ஜானகி ... 22
8. கே. ஏ. தங்கவேலு ... 23
9. ராஜ ஸ்ரீ (வர்ண போட்டோக்கள்) ... 24
10. புதிய வெளியீடுகள் ... 25
11. செய்திச் சுருள் ... 26
12. 'பேசும் படம்' போட்டோ ஆல்பம் ... 33
13. ஸ்டுடியோ விஜயம் ... 41
14. நான் ரசித்த காட்சி ... 49
15. பண்டரி கூறுகிறார் ... 54
16. பாத்திரம் பிறந்தது ... 57
17. வெட்டுங்கள் வெட்டுங்கள் ... 65
18. என் டைரியில் எழுபது நாட்கள் ... 68
19. யானை வளர்த்த வானம்பாடி (படக்காட்சிகள்) ... 81
20. காவேரியின் கணவன் (படக்காட்சிகள்)... 85
21. துரை ராஜா — (அறிமுகம்) ... 89
22. கேள்வி-பதில் ... 91
23. தபால் பெட்டி ... 100
24. மரகதம் (படக்காட்சிகள்) ... 105
25. மரகதம் (திரைக்கதை, வசனம்) ... 113
26. பாகவதர் வருகிறார் ... 123
27. நக்ஷத்திர மண்டலத்தில் நாலு வாரங்கள்... 124

★ EIGHTEENTH YEAR OF PUBLICATION ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

★ கலையுலகில் ★

நடிகர் திலகத்தின் நன்கொடை

தமிழகமே கண்டிராத அளவில், நடிப்புலகின் சரித்திரத்திலே இது வரை கேட்டிராத செய்தியாக, 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் ஒரு மாபெரும் சாதனையைச் செய்ய முன்வந்திருக்கிறார். முன்னமே நாம் வெளியிட்டிருந்தபடி அவர் தனது தர்மஸ்தாபன நிதிக்காக ஒதுக்கப் போகும் தொகை ஒரு கோடி ரூபாய்களாகும்! கணேசனின் தாயார் ராஜாமணி அம்மாள் பெயரில் ஏற்படுத்தப்படவிருக்கும் இந்த டிரஸ்டில் சிவாஜி கணேசனின் சகோதரர்களான ஷண்முகம், தங்கவேல் ஆகியோருடன் விஞ்ஞான, சட்ட நுணுக்க மேதைகளும், சென்னை மந்திரிகள் சிலரும் அங்கம் வகிப்பார்கள்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் இத்தொகை பயன்படுத்தப்படும். பௌதிகம், ரசாயனம், விஞ்ஞானம் மற்றும் பலதரப்பட்ட கல்விகளுக்கு மாணவர்களுக்கு மான்யம் அளித்து, மேனாடு அனுப்பவும் இதன் ஒரு பகுதி பயன்படுத்தப் படும்.

தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கும் பணியை மேற்கொண்டிருக்கும் நடிகர் திலகத்தை தமிழன் ஒவ்வொருவனும் வாழ்த்தி வணங்குவான் என்பது நிச்சயம்.

ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரும் தியாகராஜ் புரொடக்ஷன்ஸ் ''அமரதேவி''யில் ஜோடியாக நடித்து வருகிறார்கள்.

வேலனின் பரிசு

அருணசலம் பிக்சர்ஸ் உரிமையாளரான கதாசிரியர், டைரக்டர் வேலன் ஆயிரம் ரூபாய் மதிப்பில் இலககியப் பரிசு ஒன்றை ஆண்டுதோறும் அளிக்க முன் வந்திருக்கிருர். இது தவிர, சென்னையில் ஒரு உயர்நிலைப்பள்ளியையும், மருத்துவ மனையையும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டித்தரவும் அவர் ஏற்பாடுகள் செய்து வருகிருர். 'காவேரியின் கணவன்' வெளியீட்டின் போது இதை அறிவிப்பார்

கோவையில் ''மரகதம்' படப்பிடிப்பு முடிந்ததும். சென்னைக்குத் திரும்பிய பத்மினி படவுலகில் நுழைய முதன் முதலில் தனக்கு சந்தர்ப்ப மளித்த நாட்டிய மேதை உதய சங்கரை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

இந்திரா பிலிப்ஸ் ''கலீர் கலீர்'' படத்தில், பல ஆண்டுகளுக்குப் பின் பகாலிங்கமும் அஞ்சலிதேவியும் ஜோடியாக நடிககிருர்கள.

மெஜஸ்டிக்கின் அடுத்தது

'நாட்டுக்கொரு நல்லவளை' வெளியிட்டிருக்கும் மெஜஸ்டிக் பிக்சர்ஸார் அடுத்ததாக சாண்டில்யன் எழுதியிருக்கும் கிராமியக் கதை ஒன்றைப் படமாக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள், விரைவில் இப்படம் ஆரம்பமாகும்.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும்

'குவெய்தி-911' என்ற ஹிந்திப் படத்தின் உரிமைகளை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார் வாங்கியிருக்கிறார்கள். இப்படத்தை அவர்கள் தமிழில் தயாரித்து வெளியிட ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

பத்மினியின் நன்கொடை

திருச்சியிலுள்ள ராஜாஜி க்ஷயரோக மருத்துவமனைக்காக பத்மினி தன் நடனத்தின் மூலம் ஒன்றேகால் லட்சம் ரூபாயைத் திரட்டி நன்கொடையாக அளித்திருக்கிறார். இதற்கான நடனத்தின் செலவை பத்மினியே பூராவும் ஏற்றுக் கொண்டதுடன், அவரே தனிப்பட நடனமும் ஆடியுள்ளார். பத்மினி, தன் கோஷ்டியுடனின்றி ஆடியது இதுவே முதல் தடவையாகும்.

ராஜ சேவை

ஸ்வஸ்தி ஸ்ரீ பிக்சர்ஸார் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரித்து வந்த படத்தின் தமிழ்ப் பதிப்பிற்கு 'ராஜ சேவை' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. விஜயா வாஹினி ஸ்டூடியோக்களில் வளர்ந்துள்ள இதில் என். டி. ராமராவ், டி. எஸ். பாலய்யா, டி ஆர். ராமச்சந்திரன், பி. எஸ் வீரப்பா, எஸ். வரலக்ஷ்மி, சௌகார் ஜானகி, கிரிஜா, கண்ணாம்பா முதலியோர் நடித்திருக்கிறார்கள். கே. காமேஸ்வரராவ் இதன் டைரக்டர்.

குலமகள் ராதை

பிரபல நாவலாசிரியர் 'அகிலன்' எழுதிய 'வாழ்வு எங்கே?' என்ற கதையை ஸ்பைடர் பிலிம்ஸார் தயாரித்து வருகிறார்கள். இந்தப் படத்திற்கு 'குலமகள் ராதை' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. கே. சோமு டைரக்ட் செய்யும் இதன் வசனங்களை ஏ. பி. நாகராஜன் அமைத்து வருகிறார். 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன், மனோகர், கே. சாரங்கபாணி, வி. கே. ராமசாமி, சிவதாணு, பி. சரோஜாதேவி, கண்ணாம்பா, சந்தியா முதலியோர் இதில் நடித்து வருகிறார்கள்,

---

வாணி தமிழ்–இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம். விலை ரூ. 5. வி. பி. செலவு ரூ. 1-4-0.

வாணி தமிழ்-இந்தி ஆசான் : தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றி தானே சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம் விலை ரூ. 2-4-0. வி. பி. செலவு 0-12-0.

தையல் கலை : இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவி இல்லாமல் தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3. வி. பி. செலவு ரூ. 1.

வாணி புக் டிப்போ, தபால் பெட்டி 239, சென்னை-1.

தமிழ் நாடு டாக்கீஸ் வெள்ளி விழா

படவுலகில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சேவை செய்து வரும் தமிழ் நாடு டாக்கீஸ் ஸ்தாபனத்தின் வெள்ளி விழா, சென்ற மாதம் வெகு விமரிசையாக நடைபெற்றது. சென்னை தியாகராய நகர வாணி மகாலில் நடைபெற்ற இவ்விழா ஏ. ராமய்யா தலைமையில் நடைபெற்றது. விழாவில் ஒளிப்பதிவாளர் ஜித்தன் பானர்ஜி, மற்றும் கிருஷ்ணய்யர், பிரேம்ஜி ஆகியோரின் சேவையைப் பாராட்டும் வகையில் பொன்னாடைப் போர்த்தப்பட்டது. கலைஞர் சுந்தர்லாலுக்கு ஒரு வெள்ளிப் பெட்டி பரிசளிக்கப்பட்டது. முடிவில் ஒரு விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நகரசபை கொடுத்தது

சேலம் பொருட்காட்சியில் நடைபெற்று வரும் கலை நிகழ்ச்சி ஒன்றில் தலைமை வகிக்க வந்த ஜெமினி கணேசன், சாவித்திரி இருவருக்கும் சேலம் நகரசபை வெள்ளிக் கேடயங்களைத் தந்து கௌரவித்தது. இவர்களிருவருக்கும் வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது.

கலெக்டர் கொடுத்தார்

கோவை அரசாங்க மருத்துவமனையின் பொன்விழாவையொட்டி நடிகை பத்மினியின் நாட்டியம் சென்ற மாதம் நடந்தது. நாட்டிய நிகிழ்ச்சிக்காக சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய்கள் வசூலாயின. ஆஸ்பத்திரி நிதிக்காக நடத்தப்பட்ட இந்த நாட்டிய நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட பத்மினிக்கு ஒரு வெள்ளி கூஜாவை கோவை மாவட்ட கலெக்டர் பரிசாகக் கொடுத்தார்.

வரவேற்பு கொடுத்தது

பாரீஸ், லண்டன் நகரங்களுக்கு இந்திய சர்க்காரின் சார்பில் விஜயம் செய்துவிட்டு சென்னை திரும்பிய டைரக்டர் கே. சுப்ரமண்யத்திற்கு சென்ற மாதம் 11-ம் தேதியன்று தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர்கள் சங்கத்தினர் ஒரு வரவேற்பு கொடுத்தார்கள்.



இந்தியக் குடியரசின் விஞ்ஞான மேதைகளில் ஒருவரும் 'நோபல் பரிசு' பெற்றவருமான டாக்டர் ஸர் ஸி. வி ராமன் சென்ற மாத மத்தியில் ஏவி. எம் ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்தார். அவரை காரியாலயத்தின் மானேஜர் ஜி ரங்கனாதனும் ஏவி. எம் மின் குமாரர்களான முருகன், சரவணன், மற்றும் கலைஞர்களும் வரவேற்றனர்.

திரு ராமன் ஸ்டுடியோவின் ஒவ்வொரு பிரிவும் வேலை செய்யும் முறையை ஊன்றிக் கவனித்தார். பிலிம் கழுவும் ரசாயனச் சாலையைப் பார்த்த ராமன், தியேட்டரில் அமர்ந்து படத்தையும் பார்த்தார். கலைக்கூடத்தில் அறிவுச்சுடர் விஜயம் செய்த காட்சிகளை இங்கே படத்தில் காணலாம். படம் 1. விஞ்ஞான மேதை ஊன்றிக் கவனிக்கிறார். 2. ரசாயனச் சாலையில். 3. ஏவி. எம் மின் குமாரர்களான முருகன்-சரவணன், ஸ்டுடியோ மானேஜர் ஜி. ஆருடன் ராமன் அளவளாவுகிறார்.





தயாரிப்பாளர் பி. நாகிரெட்டி அவர்களது குமாரன் சிர
வேணுகோபாலுக்கும், சௌ. பத்மாவதிக்கும் விஜயா கார்ட
னில் மிகச் சிறப்பாக சென்ற மாதம் திருமணம் நடந்தேறி
யது: 1. தம்பதிகள் 2 ராஜாஜி 3. மந்திய அமைச்சர்
கோபால்ரெட்டி 4 நடிகர் டேவிட்–அஞ்சலி 5 சாவித்திரி
ஜெமினி கணேஷ், ஈஸ்வர். 6. சென்னை கவர்னருடன்.



7. ராகினி-சுகுமாரி 8 தாம்பூலம் வழங்குகிருர் சாவித்திரி 9 ஆந்திர முதலமைச்சருடன் நாகிரெட்டி. 10. ம.பொ.சி.யும் ஏ பி நாகராஜனும். 11. கிரிஜா, கமலா லக்ஷ்மண் 12 எம். என். ராஜம் பரிசு கொடுக்கிருர்.

NARAN

13

சிவாஜி கணேசனின்
தாயார் ராஜாமணி
அம்மையார்
சொல்லுகிறார்.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய் - குறள்

பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் ''1945—46-ம் ஆண்டில் நடைபெற்ற ஏழாவது சுயமரியாதை மகாநாட்டில் நடைபெற்ற சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்'' நாடகத்தில். சிவாஜியாகத் தோன்றி அற்புதமாக நடித்த வி. சி. கணேசனுக்கு 'சிவாஜி' என்ற பட்டமளித்துக் கௌரவித்தார். வி. சி. கணேசன் இன்று முதல் ''சிவாஜி கணேசன்'' என்று அழைக்கப்படுவார்'' - ஒரு செய்தி.

''பராசக்தியில் அற்புதமாக நடித்த சிவாஜி கணேசனை 1952-ன் சிறந்த நடிகர் எனத் தேர்ந்தெடுத்துக் கௌரவிக்கிறோம்'' — 'பேசும்-படம்' மலர்.

சிவாஜி கணேசன் சிறந்த நடிகர்-ரசிகர்கள், பத்திரிகைகள், சங்கங்களில் பாராட்டுக்கள்.

சிவாஜி கணேசனுக்கு "நடிகர் திலகம்" என்று பட்டம் கொடுக்கப் பட்டது. தனது ரசிகர் ஒருவரின் விருப்பப்படி 'பேசும் படம்' கொடுத்த பெயர் இது.

'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் குழந்தைகள் பிற்பகல் உணவு நிதிக்காக பாரதப் பிரதம மந்திரி நேருஜியிடம் ஒரு லக்ஷம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தார். பாரதப் பிரதமர் கணேசனைப்பெரிதும் பாராட்டினார்.

கட்டபொம்மன் நர்டகத்தில் கட்டபொம்மனுகத் தோன்றிவந்த கணேசன், அதைப் படமாக்கும் முயற்சியில் நண்பர்களுடன் ஈடுபட்டு வண்ணப் படமாகத் தயாரித்தார். அந்தப்படம்—வெள்ளையனை எதிர்த்த வீரனின் வரலாற்றுப் படம்—வெள்ளையனின் தலை நகரிலேயே முதலில் திரையிடப்பட்டது.

அடுக்கடுக்காக என் மகனைப் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளில் பிரசுரமாகி வருகின்றன.

நான் பாக்கியசாலி. தலைமுறை தலைமுறையாக வரும் பெண்ணினத்தில், தன் மகன் சான்ருேன் எனக் கேட்டதாயின் நிலை எல்லோருக்குமே ஏற்பட்டு விடுகிறதா? நான் புண்ணியம் செய்தவள்.

பிள்ளை பிறக்கும்போது இருக்கிறதைவிட அவன் நல்லவன் என்று கேட்பதில்தான் அதிக மகிழ்ச்சி. ஒரு தாய்க்கு ஏற்படும், என்கிறது தெய்வப் புலவரின் வாக்கு. இந்த நிலைக்கு நான் வர, பட்ட கஷ்டங்கள்...! என் நினைவு பின்னுேக்கிச் சென்றது.

இன்று வீரபாண்டிய கட்டபொம்மனுக நடித்துப் புகழ் பெற்றிருக்கும் என் மகன் கலையுலகில் புகக் காரணமாயிருந்ததே, கம்பளத்தார் நடத்திய கட்டபொம்மன் கூத்துத் தான்.

எனக்கு அப்போது வயது இருபத்தி ஆறு இருக்கும், நான் நிறை கர்ப்பிணியாக இருக்கும்போது அந்தத் துயரச் செய்தி என் காது

களுக்கு எட்டியது. ரயில்வேத் தொழிலாளியான என் கணவர் வெள்ளையனை எதிர்த்துப் போராடும் கூட்டத்தில் சேர்ந்து சிறை சென்றார் என்ற செய்திதான் அது.

கணவன் சிறையிலே இருக்கும் போது எனக்கு கணேசன் பிறந்தான். குழந்தை பிறந்தவுடன் அவனைப் பார்த்தேன் கணவன் சிறையிலே இருக்கும்போதும் கூட எனக்கு மகன் பிறந்ததும் அளவிட முடியாத மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. நான்கு மாதம் சென்றதும் குழந்தை கணேசனுடன் நான் திருச்சி சென்றேன்.

அப்போதெல்லாம் திருச்சிக்கு வடபண்டரிபுரம் பஜனை கோஷ்டி வரும். அந்தப் பஜனை கோஷ்டியுடன் கிளம்பிப் போய்விட்டுத் திரும்புவான் கணேசன்.

ஒரு நாள்—அன்று ஏதோ கொஞ்சம் பண வசதியிருந்ததால் சுமாரான சமையல் வீட்டில் செய்திருந்தேன். எட்டயபுரத்திலிருந்து கம்பளத்தார் வந்திருந்தனர். அவர்கள் 'கட்டபொம்மன்' கூத்து நடத்தினார்கள். கணேசன் முதன் முதலாகப் பார்த்தது "கட்டபொம்மன்" நாடகம். அன்று அதைப் பார்க்கவேண்டுமென்பதற்காக அவன் என்னைப் பாடாய்ப் படுத்தி விட்டான்.

மதுரை ஸ்ரீ பாலகான சபா என்ற பெயரில் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை நடத்திய நாடகக் கம்பெனியில் கணேசன் சேர்ந்தபோது நாங்கள் யாரும் தடை செய்யவில்லை. கணேசன் அங்கே சேர்ந்த பின், விரைவில் எம். ஆர். ராதா, அதிலிருந்து விலகினார்.

எம். ஆர். ராதா, யதார்த்தம் கம்பெனியிலிருந்து விலகியதும் 'சரஸ்வதி கான நடிக சபா' என்ற பெயரில் ஒரு கம்பெனியை ஆரம்பித்தார் அப்போது கணேசனும் யதார்த்தம் கம்பெனியை விட்டு விட்டு ராதா கம்பெனியில் சேர்ந்தும் விட்டான். அங்கிருந்து விலகி விட்டான்.

வீடு திரும்பும்போது கணேசன் மனது வைராக்கிய மடைந்திருந்தது. நான்கு ஆண்டுகள் பணி



சிரஞ்சீவி எழுதிய மர்ம நாவல்கள் எதுவும் தேவையா? எமக்கு எழுதுங்கள்.

★

சிரஞ்சீவியின்

இரு புதிய நாவல்கள்

லீலா விநோதன்

காட்டுப்பாக்கம் கண்ணம்மா

ஒவ்வொன்றும் ரூ. 1.50

★

வியாபாரிகளே!

எமது புதிய ஏஜன்ஸி திட்டம் ரூ. 20 முதலீட்டில் 200 கூட சம்பாதிக்கலாம்.

★

விபரங்களுக்கு எழுதுக:

அமர நிலையம்

113, ஆற்காடு ரோடு

சென்னை - 24.

யாற்றிப் பலனில்லை. ஆகவே குடும்பத்தைக் காப்பாற்ற ஏதாவது தொழில் செய்ய முடிவு செய்தான். ஒரு மோட்டார் மெக்கானிக்கிடம் அமர்ந்தான். ஏழு மாதம் வேலைகற்றான். எட்டாவது மாதம் அவனுக்கு சம்பளம் போடப்பட்டது.

அப்போது மங்கள பாலகான சபா திருச்சியிலிருந்து கும்பகோணத்திற்குக் கிளம்பிச் சென்றது. டி. கே. சம்பங்கி, எம். ஈ. மாதவன் முதலியோர் அதன் நிர்வாகிகள். கணேசன் அந்தக் கம்பெனி நடிகர்களுக்கு நண்பனாதலால் அடிக்கடி சென்று வருவதுண்டு.

ஒரு நாள் கணேசன் வீடு திரும்பியதும் விபூதி பிரசாதங்களை என்னிடம் கொடுத்தான். ''அம்மா நான் வாழப் போகிறேனம்மா. எனக்கு மெக்கானிக் உத்தியோகம் பிடிக்கவில்லையம்மா. இன்னைக்கி வாங்கின சம்பளத்திலே துணிச்சட்டை வாங்கிக்கிட்டேன். உச்சிப் பிள்ளையார் கோயிலில் அர்ச்சனை செய்தேன், அப்பாவுக்குத் தெரிந்தால் 'நாடக கம்பெனிக்குப் போகக்கூடாது என்று திட்டுவார். என்னை ஆசீர்வாதம் செய்து அனுப்புங்கம்மா. நான் போய் நல்லபடி சம்பாதிப்பேனம்மா. என்னை அனுப்பி வையுங்கம்மா'' என்று கெஞ்சினான்; கொஞ்சினான்.

என் மனம் நெகிழ்ந்து விட்டது. கணேசன் நாடக உலகை வெறுத்து விட்டுத் தொழில் செய்து சம்பளமும் பெற்றிருக்கிறான். ஆகவே இனிக் குடும்பம் வறுமையில் வாட வேண்டாம் என்று நினைத்தேன். அந்த ஆசை நிராசையாகியது. ஆனால் அவன், ''நான் வாழப் போகிறேன் அம்மா'' என்றான். அதற்குப்பெற்ற தாய் தடையாக இருக்க முடியுமா? ஆசிகூறி அனுப்பினேன்.

கும்பகோணம் சென்று அந்தக் கம்பெனியில் கணேசு சேர்ந்தான். யதார்த்தமும் அதிலிருந்தார். கம்பெனி சென்னை வந்து நொடிந்தது அப்போது கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அதை வாங்கி எல்லா நடிகர்களுக்கும் வாழ்வளித்தார். பிறகு கலைவாணர் சிறைசெல்ல நேரிடவே, கே. ஆர். ராமசாமியுடன் கிளம்பி விட்டான் கணேசன். அதற்குச் சில காலத்திற்கு முன்தான் ''சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்'' நாடகத்தில் கணேசன் நடித்தான். அதன் பிறகு அறிஞர் அண்ணா அவர்களுடன் அவர் வீட்டிலேயே தங்கி யிருந்தான். பிறகு கே. ஆர். ராமசாமி கம்பெனியில் நடித்து வந்தான்.

அங்கிருந்து விலகி 10-8-46-ல் சக்தி நாடக சபாவில் சேர்ந்தான். 1950-ல் சக்தி நாடக சபா திருச்சியில் நடக்கும்போது நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் உடனே சென்னை வருமாறு தந்தி யடித்தார். சென்னை வந்து மேக்-அப் டெஸ்ட் முடிந்து திரும்பினான். சிறிது நாளில் சென்னை வந்து நிரந்தரமாகத் தங்கிவிட்டான்.

அந்த வருடம், அதாவது 1952-ம் ஆண்டு தீபாவளியன்று 'பராசக்தி' படம் பார்த்தேன். என் மனம் பூரித்தது. ''என்மகனை எல்லோரும் பாராட்டுகிறார்கள் நல்ல நடிகன் என்று'' இதுதான் என் உள்ளத்தில் ஏற்பட்ட முதல் பெருமகிழ்ச்சி. அதன்பின் நடந்தவை என்னைவிட உங்களுக்கு அதிகம் தெரியும்.

கணேசன் நாடகக் கம்பெனிகளில் இருக்கும்போதே, கிடைக்கிற காசை யெல்லாம் தர்மம் பண்ணி விடுவான். சாப்பாட்டுக்கு இல்லை என்ற கவலை அவனுக்கு எப்போதும் கிடையாது. சாப்பாடே இல்லாமல் அவன் தண்ணீர் குடித்து வயிறை நிரப்பிய நாட்கள் பலவுண்டு. இன்று அவன் பலருக்கு வாழ்வளிக்கிறான். தான் பெற முடியாத கல்வி பயில பலருக்கு வசதி செய்து தருகிறான். தான் நேரத்தோடு உணவு உண்ண முடியாத நிலையிலிருந்தவன் பலருக்குச் சாப்பாடு போடுகிறான். அந்தப் பணியில் நான் பெற்ற செல்வங்களான தங்கவேலுவும் ஷண்முகமும் சேர்ந்து உழைக்கிறார்கள்.

கலைஞனால் பலருக்கு உணவு கிடைக்கிறது, தொழில் கிடைக்கிறது, நிதிஉதவி கிடைக்கிறது. இவை எல்லாம் என் மகன் மூலம் எனக்குப் பெருமை தரும் செய்திகள்.

எம்.என். ராஜம்

கூறுகிறார்: 'நான் உபயோகிப்பது தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்'

LTS. 15-543 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு



சிவாஜி கணேசன்-பத்மினி காதல் ஜோடியை நரசுவின் முழுநீள வர்ணப்படமான ஸ்ரீவள்ளியில் சந்திக்கலாம்.

வலது கையை மேலே தூக்கி இடது கையைக் கீழே தாழ்த்தி
'அபயம்' என்று 'சௌகார்' ஜானகி சொல்லாமல் சொல்வது,
ஸி. பி. புரொடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பில்

'நானிருக்க பயமேன்?' என்று பார்வையிலேயே ஹாஸ்ய
நடிகர் கே. ஏ. தங்கவேலு ஆறுதல் சொல்வதும், ஸி. பி
புரொடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பில்தான்.

சாஹினி ஆர்ட் புரொடக்ஷன்ஸின் 'பண்ட ராமுடு'வில் ராஜஸ்ரீயின் தோற்றம் இது. இவர் 'கடவுள் எங்கே?', 'பக்த சபரி', 'பக்த ராமதாஸ்' படங்களிலும் நடித்து வருகிறார்.

புதிய வெளியீடுகள்

அல்லிபெற்ற பிள்ளை

தயாரிப்பு : எம். எம். புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன் : கே. சோமு
திரைக்கதை வசனம் : ஏ. பி. நாகராஜன்
நீளம் : 15,881 அடி
வெளியிட்டதேதி : 31-7-59
நடிகர்கள் : எஸ். எஸ். ராஜேந்திரன், சகஸ்ரநாமம், வி. கே. ராமசாமி, பண்டரிபாய், எம். என். ராஜம், டி. பி. முத்துலக்ஷ்மி.

குதிரை வண்டிக்காரனான விஜயன், அய்யாச்சாமியின் மகள் அல்லியைக் காதலித்து, அய்யாச்சாமி கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டு, அவளை மணக்கிறான். ஆனால் அல்லி அந்தப் பணத்தைத் திருடித் தன் கணவரிடமே கொடுத்து விடுகிறாள். அல்லியின் தகப்பனாரும், அவளது அத்தை மகன் பாவாடையும் சேர்ந்து கொண்டு விஜயனைப் பழிவாங்கத் திட்டமிடுகின்றனர். இதற்கிடையில் அய்யாச்சாமியும் விஜயனும் இறந்து விடுகின்றனர். அல்லி தனது ஒரே மகன் கண்ணனை வளர்க்க அரும்பாடு படுகிறாள். பாவாடையின் எதிர்ப்புக்களையும் தொந்தரவுகளையும் தனது தைரியத்தினாலும், சாமர்த்தியத்தினாலும் ஒருவாறு சமாளிக்கிறாள்.

கண்ணன் வளர்ந்து பெரியவனாகித் தன் தகப்பனாரின் குதிரை வண்டியையே ஓட்டித் தாயைக் காப்பாற்ற ஆரம்பிக்கிறான். பாவாடையின் சூழ்ச்சி கண்ணன்மேல் திரும்புகிறது. உடனே குடிப்பது சூதாடுவது, பெண்களைக் கெடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டுத் தன் தாயாரையும் கொடுமைப் படுத்துகிறான் கண்ணன்.

கடைசியில் ஒருநாள் தன் வண்டியில் வந்த ஒரு பெண்ணை வீட்டிற்குக் கடத்தி வருகிறான் கண்ணன். அவளைக் காப்பாற்றும் முயற்சியில் அல்லி அந்தப் பெண்ணுடன் குதிரை வண்டியில் ஏறி, தானே ஓட்டுகிறாள். கண்ணன் தடுக்கிறான். குதிரை அவனைத்தள்ளி விட்டுப் போகிறது. வண்டி அவன் மீது ஏறி விடுகிறது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்தான் கண்ணன் மனம் மாறுகிறது. அல்லியின் குடும்பத்தில் மீண்டும் அமைதி நிலவுகிறது.

பண்டிட் முக்ரம் சர்மா எழுதிய 'டோங்காவாலி' என்ற கதையைத்தான் அல்லிபெற்ற பிள்ளையாகத் தமிழில் தயாரித்திருக்கிறார்கள். ஹிந்திப் படத்தை ரஸித்த அளவுக்கு இதை ரஸிக்க முடியவில்லை. சில கதைகள் அந்தந்தப் பிராந்திய சூழ்நிலைகளுக்கு ஏற்றபடித்தான் அமையும் என்பதற்கு இக்கதை ஒரு நல்ல உதாரணம்.

மனைவியே மனிதனின் மாணிக்கம்



தயாரிப்பு : கேஎம்டிவிஎன்
டைரக்ஷன் : கே. வேம்பு
வசனம் : மக்களன்பன்
நீளம் : 15,052 அடி
வெளியிட்ட தேதி : 7-8-59
நடிகர்கள் : பாலாஜி, தங்கவேலு, சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், பண்டரிபாய், விஜயகுமாரி, எம். சரோஜா.

சுந்தரும் லக்ஷ்மியும் அன்புத் தம்பதிகள். கலிவரதன் என்ற வஞ்சகனின் வலையில் சிக்கியசுந்தர் மனைவி மக்களைப் புறக்கணித்து மேனகா என்பவளிடம் அடிமையாகிறான். அவனது சொத்து சுகம் அனைத்தும் பறிபோகின்றன.

கலிவரதனும் மேனகாவும் பர்மாவிலிருந்து தப்பிவந்த குற்றவாளிகள். சுந்தரின் தம்பி மணியும், மணியின் காதலி கமலாவும் பர்மாவிலிருந்து வந்த ஸி. ஐ. டி. யின் உதவியால் கலிவரதனும் மேனகாவும் செய்த குற்றங்களைக் கண்டு பிடிக்கின்றனர்.

இதற்கிடையில் சுந்தரின் குழந்தை ரவியைக் கடத்திச் சென்று, அதன் காரணமாக லக்ஷ்மியைத் தனதிருப்பிடம் வரவழைத்துத் துன்புறுத்தும்போது, மணியும் மற்றவர்களும் போலீஸுடன் வந்து அவனைப் பிடிக்கின்றனர். அதே சமயம் மேனகாவை கலிவரதனே சுட்டு விடுகிறான். அவனும் போலீஸாரிடம் கைதாகிறான்.

இக்கதையிலுள்ள எந்த அம்சத்தைப் புதுமையென்று கருதி, இதைத் தயாரிப்பாளர்கள் படமாக்கினார்கள் என்பதுதான் நமக்குப் புரியாத புதிராக இருக்கிறது!

பச்சைமலைக் குறத்தி

சம்பா என்ற சிறுமியைக் கொள்ளைக் கூட்டத்தினரான குறவர்கள் தூக்கிவந்து வளர்த்து ராணி என்று பெயரிடுகின்றனர். சம்பாவின் மாமாவுக்கு ராஜா என்ற ஒரு பையன் இருக்கிறான். ஒரு தடவை அவன் ராணியைப் பார்த்துவிடவே அவளைக் காதலிக்கிறான். அவளும் காதலிக்கிறாள். ஆனால்

தயாரிப்பு : பொன்னலூரி பிரதர்ஸ்
டைரக்ஷன் : கே. காமேஸ்வரராவ்
நீளம் : 14,072 அடி
வெளியிட்ட தேதி : 14-8-59
வசனம் : உதயகுமார்
நடிகர்கள் : என். டி. ராமராவ், ரேலங்கி, முக்காமல, ரமணரெட்டி, அஞ்சலிதேவி, ராஜசுலோசனா.

குறவர் தலைவனான லாலா என்பவன் ராணியைத் தானே அடைய விரும்புகிறான். இதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ராஜாவின் தகப்பனார் அவனை வீட்டைவிட்டுத் துரத்துகிறார். முகாம் மாற்றிப் போயிருந்த ராணியைக் கடத்தி வந்து அத்தை வீட்டில் விடுகிறான் ராஜா. ஆனால் அன்றிரவே ராணியை லாலா தூக்கிப்போய் விடுகிறான். ராஜாவின் நண்பர் மூலம் விஷயமறிந்த அவன் தந்தை போலீஸாருடன் வருகிறார். முடிவில் லாலா கைதாகிறான். ராணிதான் சம்பா என்று தெரிந்து விடுகிறது.

'துலாரி' என்ற ஹிந்திக் கதையைத் தழுவித் தமிழில் "ஆசை" தயாரிக்கப்பட்டது. அதைத் தெலுங்கில் ஒரு தழுவலாகத் தயாரித்தார்கள் பொன்னலூரி பிரதர்ஸார். அதன் தமிழ் ஒட்டுமொழிப் படம்தான் இது. டைரக்ஷனிலும் வசனத்திலும் சில குறைகள் இருக்கின்றன. புதுமையும் சிறப்பும் இல்லாத ஒரு சர்வசாதாரணப் படம்.

மரகதம்

தயாரிப்பு : பக்ஷிராஜா
டைரக்ஷன் : எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு
நீளம் : 18,327 அடி
வெளியிட்ட தேதி : 21-8-59
வசனம் : மாறன்
நடிகர்கள் : சிவாஜி கணேசன் பாலய்யா, சந்திரபாபு, எஸ். பாலசந்தர், பத்மினி, சந்தியா முத்துலக்ஷ்மி, லக்ஷ்மிராஜம்.

கருங்குயில் குன்றத்துக் கொலை என்ற துப்பறியும் பெருங் கதையை மரகதம் என்ற பெயரில் பிரபல நக்ஷத்திரங்களைக் கொண்டு திரைப் படமாக்கி யிருக்கிறார் ஸ்ரீராமுலு நாயுடு. சில பாடல்கள் இனிமையாயிருக்கின்றன. பத்மினியின் நடனம்

நன்றாகவும் பொருத்தமான இடத்திலும் அமைந்திருக்கிறது. இப் படத்தை ஜனரஞ்சகமாக அமைக்க இதன் தயாரிப்பாளர் எடுத்துக் கொண்ட முயற்சியால் கதையில் சிக்கலில்லாமல் தெளிவான கதைப் போக்கு காணப்படுகிறது. சிவாஜி கணேசன்-பத்மினி ஜோடியின் நடிப்பு இப்படத்தின் சிறப்பான அம்சம்.

காஷ்மீர் சால்வை

ரூ. 2/50-தான்!

ரூ. 2/50-க்கு, 96" × 54" அளவுள்ள எம்ப்ராய்டு காஷ்மீர் சால்வையை நீங்கள் அடையலாம். தபால் செலவு தனி. பூரண திருப்திக்கும் உத்திரவாதம். இல்லையேல்பணம்வாபஸ். குறைந்த சரக்குகளே இருக்கின்றன. ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனே எழுதுக.

KASHMIR
SHAWL HOUSE (PM)
AMRITSAR.

செய்திச் சுருள்

'மரகதம்' வந்தாள்

மலைக்கள்ளனைத் தொடர்ந்து மரகதம் வந்திருக்கிறாள். கோவை பக்ஷிராஜா ஸ்தாபனத்தார் நீண்ட கால இடைவெளிக்குப் பின் மரகதத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ரசிகப் பெருமக்களின் பேரபிமானத்தைப் பெற்றிருக்கும் சிவாஜி கணேசன்—பத்மினி ஜோடி இதில் பிரதம பாகத்தில் நடித்திருக்கிறது. மற்றும் டி. எஸ். பாலய்யா, சந்திரபாபு, டி. எஸ். துரைராஜ், ஒ. ஏ. கே. தேவர், பக்கிரிசாமி, சந்தியா, முத்துலக்ஷ்மி முதலியோர் இதில் நடித்துள்ளனர். மாறன் வசனம் எழுதியுள்ள இப்படம் 'கருங்குயில் குன்றத்துக் கொலை' நவீனத்தை அடிப்படையாகக் கொண்டது. படத்தை எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு டைரக்ட் செய்திருக்கிறார்.

சேகர் ஆர்ட் எண்டர்பிரைசஸின் தயாரிப்பான 'மணிமேகலை' தமிழ்ப் படத்தில் பி. பானுமதி.

யானை வளர்த்த வானம்பாடி

வட இந்தியாவிலிருந்து வந்த 'ஜிம்போ' வனப்படத்திற்கு தமிழ் நாட்டில் கிடைத்த பேராதரவைக் கண்டு, அதே பாணியில், திருவனந்தபுரம் மெர்ரிலாண்ட் ஸ்டூடியோவில் 'யானை வளர்த்த வானம்பாடி' என்ற படத்தை நீலா புரொடக்ஷன்ஸார் தயாரித்து வருகிறார்கள். நீலா கதை எழுதியிருக்கும் இதன் வசனங்களை 'மனிதன்' புகழ் சோமசுந்தரம் அமைத்திருக்கிறார். ஸ்ரீராம் 'பிரண்ட்' ராமசாமி, நம்பியார், குமாரி, முத்துலக்ஷ்மி முதலியோருடன் பெட்ரோ என்ற மனிதக் குரங்கும் இதில் நடித்திருக்கிறது. தயாரிப்பாளர் சுப்ரமண்யமே படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.

சக்தி புரொடக்ஷன்ஸ்

ராதாமணாளன் கதை, வசனம் எழுதியுள்ள படமொன்றை சக்தி புரொடக்ஷன்ஸார் தங்களது முதல் தயாரிப்பாக உருவாக்கப் போகிறார்கள். காமிரா ஜி. கே. ராமு டைரக்ட் செய்யும் இதில் சிவாஜி கணேசன், பி. சரோஜாதேவி, பி.

எஸ். வீரப்பா, ஜி. வரலக்ஷ்மி முதலியோர் ஒப்பந்தமாகியிருக்கிறார்கள்.

முக்தா பிலிம்ஸ் படம்

வி. ஸ்ரீநிவாசன் டைரக்ஷனில், கே. அப்பன்ராஜ் கதை, வசனம் எழுதியுள்ள படத்தை முக்தா பிலிம்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். இதற்கான ஆரம்ப பூஜை சமீபத்தில் பிலிம் செண்டர் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

தாரா என் தங்கை

எம். கே. ராதா, எஸ். ஏ. நடராஜன், காகா ராதாகிருஷ்ணன், ஜி. சகுந்தலா, புதுமுகம் நிர்மலா முதலியோர் நடிக்கும் 'தாரா என் தங்கை' என்ற படத்தை ஈஸ்டர்ன் பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள். நயீம் டைரக்ட் செய்யும் இதன் கதை, வசனங்களை வெண்மதி எழுதியிருக்கிறார்.

சாதனா தயாரிக்கும்

டைக்டர் ஸி. வி. ரங்கநாத தாஸின் சாதனா பிக்சர்ஸார் தமிழ், தெலுங்கு இருபாஷைகளிலும் ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். உதயகுமார் வசனம் எழுதியுள்ள தமிழ்ப் படத்தில் ஜெமினி கணேசன், ரங்காராவ், வி. ஆர். ராஜகோபால், சாவித்திரி, சுந்தரிபாய் முதலியோர் நடிப்பார்கள்.

நடராஜனின் காலை கருப்பையா ஏன் பிடிக்கிறார் என்பதறிய ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' படத்தைப் பார்க்க வேண்டும்.

அசோசியேடட் புரொட்யூசர்ஸின் படம்

ஏ. நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி பிரதம பாகத்தில் நடிக்கும் குடும்பச் சித்திரத்தை அசோசியேடட் புரொட்யூசர்ஸார் தமிழில் தயாரித்து வருகிறார்கள். முரசொலி மாறன் வசனம் அமைத்துள்ள இதன் டைரக்ஷன் பொறுப்பை யோகானந்த் ஏற்றுள்ளார்.



சாந்தினி பிலிம்ஸ் ''புனிதா புண்ணியவதி'' யில் டி. கே. சம்பங்கி.



''பேசும் படம்'' புதுமுக அறிமுகத்திட்ட நடிகர் என். ஆறுமுகம் ''வீரமங்கை வேலுநாச்சியா''ரில் நடிக்கிறார்.

மல்லியம் மங்களம்

தமிழ் நாடு டாக்கீஸ் ஸ்தாபனத்தார் தங்களது வெள்ளி விழா வெளியீடாக 'மல்லியம் மங்களம்' படத்தைத் தயாரித்து வருகிறார்கள். எஸ். வி. சஹஸ்ரநாமம் குழுவினர் நாடகமாக நடித்துள்ள இதன் கதை, வசனங்களை பி. எஸ். ராமய்யா எழுதியிருக்கிறார். நாடகத்தில் நடித்து வரும் தேவிகா, 'குலதெய்வம்' ராஜகோபால், எஸ். வி. சஹஸ்ரநாமம், ஆகியயோருடன் எஸ். வி. சுப்பய்யா, பண்டரிபாய், மைனாவதி முதலியோரும் நடித்து வருகிறார்கள். சிட்டடெல் ஸ்டுடியோவில் வளரும் இப்படத்தை எஸ். சௌந்தர ராஜன் டைரக்ட் செய்து வருகிறார்.

என்னைப் பார்

ஜி. ஆர் நாதன் டைரக்ஷனில் 'என்னைப்பார்' என்ற படத்தை பழனியப்பா புரொடக்ஷன்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். எஸ். அய்யாபிள்ளை இதன் கதை, வசனங்களை எழுதியிருக்கிறார்.

காவேரியின் கணவன்

கதாசிரியர், டைரக்டர் ஏ. கே. வேலன், தனது சொந்த ஸ்டுடியோவில் தயாரித்து வந்த 'டாக்டர்' என்ற படத்திற்கு 'காவேரியின் கணவன்' என்ற புதிய பெயரைத் தந்திருக்கிறார். சௌகார் ஜானகி, வளையாபதி முத்துகிருஷ்ணன் இருவரும் பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை ஏ. கே. வேலன் ஏற்றிருக்கிறார். கே. வி. மகாதேவன் இசை அமைத்து வரும் இப்படத்தில் சூர்யகலா, வி. ஆர். ராஜகோபால் மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள்.

மாசற்ற மங்கை

மனோகர், பக்கிரிசாமி, பண்டரி பாய், எஸ். என். லட்சுமி முதலியோர் முக்கிய பாகத்தில் நடிக்கும் 'மாசற்ற மங்கை' என்ற படத்தின் ஆரம்பவிழா சென்ற 18-ம் தேதியன்று நடைபெற்றது. நீல.



இசை நிகழ்ச்சிகளில் பாடி வரும் இளைஞர் இ. ஆர். சுந்தரம் இரண்டொரு படங்களுக்கும் பின்னணியில் பாடியிருக்கிறார்.

நீங்கள்
கஷ்டப்படுகிறீர்களா?
அந்த நோவைத்தரும் இருமலை
நிச்சயமாக சமிப்பிக்க
உபயோகியுங்கள்
டஸ்ஸனால்
கப் சிறப்
TUSSANOL

துரைக்கண்ணன், ராஜமோகன் இருவரும் கூட்டாக கதை, வசனம் அமைத்திருக்கும் இப்படத்தை கனகதாரா பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள். தயாரிப்பாளர்களுள் ஒருவரான வி. எஸ். ஜெகன்னாதன் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

மாடி வீட்டு ஏழை

மு. கருணாநிதி கதை, வசனம் எழுதியிருக்கும் 'மாடி வீட்டு ஏழை' என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்க 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் ஒப்பந்தமாகியிருக்கிறார். ஏ. காசிலிங்கம் டைரக்ட் செய்யும் இப்படத்தை வானம்பாடி பிக்சர்ஸார் தயாரித்து வருகிறார்கள்.

சிங்களப் படத்தில் பாபு

தமிழகத்தின் சிறந்த ஹாஸ்ய நடிகர்களுள் ஒருவரான சந்திர பாபு சிங்களப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். எம். ஜே. எல். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கும் இப்படம் இலங்கை ஸ்டுடியோவிலேயே உருவாக்கப் படும்.

இது தவிர. க்ஷயரோக தடுப்பு நிவாரண நிதிக்காக இலங்கைக்கு தனது கோஷ்டியுடன் விஜயம் செய்து, பல நிகழ்ச்சிகளை நடத்தித் தரவும் சந்திரபாபு சம்மதித்திருக்கிறார்.

ஸாரதியின் அடுத்தது

முடிவடைந்துவிட்ட 'பாக்ய தேவதை' படத்தை வெளியிட்ட பின் ஸாரதி ஸ்டுடியோஸார் தமிழ், தெலுங்கு இருபாஷைகளிலும் மற்றொரு படத்தைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். பி. ஆர். சோப்ரா தயாரித்த 'ஏக்-ஹி-ரஸ்தா' என்ற ஹிந்திப் படத்தைத் தழுவி இப்படம் எடுக்கப்படும். தாபி சாணக்கியா படத்தை டைரக்ட் செய்வார்.

ஹிந்தியில் 'பாண்டித்தேவன்'

'பாண்டித்தேவன்' கதையை ஹிந்தியில் தனிப்படமாகத் தயாரித்து வெளியிட டைரக்டர் கே. சுப்ரமண்யம் ஏற்பாடுகளைச்செய்து வருகிறார். இதில் ஹிந்தி நடிகர்களுடன், பாண்டித்தேவனில் நடித்த சில நடிகைகளும் தோன்றுவார்கள்.

ஏவி. எம்.மில் உருவாகும்

டைரக்டர் பீம்சிங், முன்பு அறிவித்திருந்த 'அப்துல்லா' என்ற கதையை ஏவி. எம்.மின் கூட்டுறவில் தயாரித்து வெளியிடப் போகிறார். ஜெமினிகணேசன், சாவித்திரி, சந்திரபாபு முதலியோர் இதில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கின்றனர். சந்திரபாபு எழுதிய கதையை அடிப்படையாகக்கொண்டது இது.

என்னை வாழ விடு

டி. ஆர். கோபு டைரக்ஷனில் 'என்னை வாழ விடு' என்ற படத்தை ஆர். எஸ். பிலிம்ஸார் தயாரித்து வருகிறார்கள். 'நடிகவேள்' எம். ஆர். ராதா கதாநாயகனாக நடிக்கும் இப்படத்திற்கு ஆத்மநாதன் இசை அமைத்து வருகிறார்.

சேரமான் காதலி

ஜெமினி கணேசன்-பத்மினி இருவரும் பிரதம பாகத்தில் நடிக்கும் 'சேரமான் காதலி' என்ற படத்தை ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸார் தயாரிக்கப் போகிறார்கள். கண்ணதாசன் கதை, வசனம் எழுதும் இப்படம் சரித்திரச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. ஈஸ்ட்மென் கலரில் உருவாகப் போகும் இதை கே. சங்கர் டைரக்ட் செய்வார்.

நந்தி தயாரிக்கும்

தமிழ், தெலுங்கு, கன்னடம் மூன்று மொழிகளிலும் நந்தி பிக்சர்ஸார் ஒரு புராணப்படத்தைத் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். ஒய். வி. ராவ் டைரக்ஷனில் வளரவிருக்கும் இதில் ஜி. வரலக்ஷ்மி, சந்தியா. கிருஷ்ணஜோதி, குமாரி மீனா முதலியோர் இதில் நடிப்பார்கள். 'நாகார்ஜுனா' என்ற கதையைத் தழுவியது இது.

பேசும் படம்
★
போட்டோ ஆல்பம்

"ஒரு விநாடியில் காரியத்தை முடித்துக்கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொடுக்குப் போட்டுக் கிளம்புவது போலில்லையா, இவளைப் பார்த்தால்?—பி. எஸ். வி. பிக்சர்ஸாரின் "வீரக்கனல்" படத்தில் அஞ்சலிதேவி.

கவர்ச்சிகரமாகத் தோன்றுவது எப்படி என்பதை இந்த "அதிரூப அமராவதி" எடுத்துக் கூறுவது போலிருக்கிறதல்லவா? - நீண்ட காலமாகத் தயாரிப்பிலிருக்கும் 'அதிரூப அமராவதி' தமிழ்ப் படத்தில் ராஜசுலோசனா.

காமிரா கோணம் என்கிறார்களே, அதன் சிறப்பை வெளிப்படுத்துகிறதல்லவா இந்தப் படம்? வேகமாக வளர்ந்துவரும் 'உத்தமி பெற்ற ரத்தினம்' தமிழ்ப் படத்தில் என். என். ராஜம் இப்படித் தோன்றுகிறார்.

"என்னைக் 'காதல் மன்னன்' என்கிறார்களே, அது தெரியுமா உனக்கு?" என்கிறாரா இந்த ஆணழகர்? பி. எஸ். வி. பிக்சர்ஸார் வேகமாகத் தயாரித்து வரும் "வீரக் கனல்" படத்தில் ஜெமினி கணேசன் - அஞ்சலிதேவி.



"இதோ பார், படுக்கை அறையிலே கண்ணீர் விடக் கூடாது. அதை ஆனந்தக் கண்ணீராக மாற்றிக் கொள்" – சியாமளா பிக்சர்ஸ் "சிலம்புக் குகை" படத்தில் எம். என். ராஜம் - எம். ஜி. ராமச்சந்திரன்.

கூரிய ஆயுதங்களிருந்தால்தான் ஆண்களை வீழ்த்த முடியுமென்பதில்லை. பெண்ணொருத்தியின் பார்வைதான் அதைவிடக் கொடியது. இவள் (கமலா லக்ஷ்மண்) யாரை வீழ்த்துகிறாள் என்பதை 'வீரக்கனல்' விளக்கும்.

பெண்கள் கோபமாகப் பார்த்தால் எதிரே இருப்பவன் நடுங்கிப் போவான். பக்கவாட்டில் பார்த்தால் படையே நடுங்கும். இவள் (மாதுரிதேவி) எந்தப் படையை வெல்கிறள் என்பதை "அதிருப அமராவதி" விளக்குவாள்.

"இந்தக் குல்லாயெ ஒரு மவராசரு குடுத்தாருங்க
எனக்கு நல்லா இருக்குதுங்களா?" - எம். ஆர். எஸ்.
பிக்சர்ஸ் "சந்திப்பு" தமிழ்ப் படத்தில் அழகி ஜமுனு
ஜிப்ஸி வேடத்தில் அருமையாக நடித்து வருகிறார்.

ஸ்டுடியோ விஜயம்

உலகத்தில் எந்த ஓர் ஆசையையும் பாசத்தையும் துறந்து விடலாம். ஆனால் குழந்தைப் பாசத்தை மட்டிலும் எப்பேர்ப்பட்ட அறிஞனாலும் அகற்றிவிட முடியாது. ஏனெனில் இந்த உலகம் அழிந்து விடாமலிருக்க இயற்கை ஏற்படுத்திவிட்ட அஸ்திவாரம்தான் குழந்தைப் பாசம். உயிரற்ற தன் கன்றின் தோலைக்கண்டு பால் சுரக்கும் வாயற்ற பசுவைப் பார்க்காதவர்கள் பட்டணங்களில் இருக்கமாட்டார்கள். பரம சாதுவான பிராணிகள் கூடத் தம் குட்டிக்குத் தீங்கென்றால் புலியாகச் சீறி வரும்.

இந்த இயற்கைக்கு மனிதன் மட்டும் புறம்பாக முடியுமா? அதைத்தான் அன்று பாரமவுண்ட் ஸ்டுடியோவில் ஒரு

டி. எஸ் துரைராஜ் 'மலைக்கள்ள'னுக்குப் பின் போலீஸ் காரராக அரவிந்த் பிக்சர்ஸ் தயாரித்து வரும் 'அருமை மகள் அபிராமி'யில் தோன்றுகிறார்.

மஹேந்திரா புரொடக்ஷன்ஸ் படத்திற்குப் பாடல் ஒலிப்பதிவாகிறது.

ஆஸ்பத்திரி அறையில் பார்த்தேன். ராமசாமி ஒரு ராணுவத்தினன். அவன் திரும்பும்போது ஏதோ விபத்துக்காளாகி ஆஸ்பத்திரியில் அடைக்கலம் புகுகிறான். அங்கிருந்தபடியே தனது மனைவி மக்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு பதிலுக்காக ஏக்கத்துடன் காத்திருக்கிறான். ஒவ்வொரு நாளும் ஏமாற்றம்தான். உடனே அவனுக்கு நர்ஸிடம் சந்தேகம் ஏற்படுகிறது.

"ஏன் ஸிஸ்டர்! நான் சொன்ன விலாசத்தைச் சரியாகத்தானே எழுதினீர்கள்?" என்று கேட்கிறான்.

"ஆமாம்" என்கிறாள் நர்ஸ்.



சர்வாணி பிலிம்ஸ் "வெண்ணிலாவே நீ வாராய்" செட்டில் இளம் நடிகர் கே. கண்ணனும் நண்பர்களும்.



தேவர் பிலிம்ஸ் "வாழ வைத்த தெய்வம்" செட்டில் தேவருடன் சரோஜாதேவி, டைரக்டர் திருமுகம், ஹீராலாலும்.

அவளிடம் தன் உள்ளத்தைத் திறந்து, "குழந்தைகளைப் பார்க்கவேண்டும்போல இருக்கிறது" என்கிறான். அவனது உள்ளத்தில் தோன்றிய பாசத்தின் எதிரொலி முகத்திலும் வார்த்தைகளிலும் தெரிகிறது.

பிரண்ட் பிக்சர்சார் தயாரிக்கும் "தங்கம் மனசு தங்கம்" படத்திலே வரும் இக்காட்சியில் வில்லன் டி. கே. ராமச்சந்திரன் நல்லவனாக நடித்து வருகிறார். ஈ. ஆர். சாந்தகுமாரி நர்ஸாக நடிக்கிறார். "இந்தப் பெண்ணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது" என்று தனது அபிப்பிராயத்தை என்னிடம் வெளியிட்டார் டைரக்டர் ஆர். எம். கிருஷ்ணசாமி. இப்படத்திற்கான கதை வசனத்தை ஏ. எல். நாராயணன் எழுதியிருக்கிறார்.

பயனீர் "கேப்டன் ரஞ்ச"னில் ஸ்ரீரஞ்சனியும் டி. பி. எஸ். ராஜாவும்



சிட்டடெல் பிலிம் கார்ப்பொரேஷனின் ''விஜயபுரி வீரன்'' படத்தில் அசோகனும் படக் கலைஞர்களும்.

குழந்தைப் பாசத்தை எப்படி உயிரினத்திடமிருந்து பிரிக்க முடியாதோ, ஏறக்குறைய அதேபோல ஒரு மனைவி தன் கணவனிடம் கொள்ளும் சந்தேகத்தையும் தவிர்க்க முடியாது. கணவன் எவ்வளவுதான் நல்லவனுக இருக்கட்டுமே, அவன் மனைவி அவனை எப்போதும் சந்தேகக் கண் கொண்டுதான் பார்ப்பாள்.

அவர் ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள்; திருடர்களையும் குற்றவாளிகளையும் பிடிப்பதற்காக அவர் அடிக்கடி மாறு வேடங்கள் அணிந்துகொண்டு போவது வழக்கம். இப்படி அவர் செய்வது மனைவிக்குக் கூடத் தெரியாத பரம ரகசியம். இதனுல் ஒருமுறை அந்த ஏட்டய்யா சில புடவை துணிகளை எடுத்துப் போகும்போது, மனைவியிடம் மாட்டிக்கொண்டு விடுகிருர். கேட்க வேண்டுமா? உடனே யுத்த களம்தான்.

''இப்போது புடவை ரவிக்கையெல்லாம் கொண்டு போய் கொடுப்பே. நாளைக்கு அவளையே வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்திடுவே!'' என்று கத்த ஆரம்பித்து விட்டாள் திருமதி ஏட்டய்யா.

அவர் பதில் பேசினுரா? இல்லை. அவுட்டுச் சிரிப்பு ஒன்றை வீசினுர்!



ஏவி. எம். ஸ்டுடியோவில் ''களத்தூர் கண்ணம்மா'' படத்திற்குப் பூஜை போடப்பட்டபோது வந்திருந்த பிரதம நடிகர்களும் கலைஞர்களும்.

இதற்கு முன்புகூட ஒரு தடவை அவர் "சராயக் கேஸ்" பிடிக்க சாமியாராகி "மஞ்சக் குப்பத்தில் ஓராண்டி" என்று பாடிக்கொண்டு போயிருக்கிருர்.

அரவிந்த் பிக்சர்ஸ் தயாரிக்கும் "அருமை மகள் அபிராமி"யில் இப்படிப்பட்ட ஹாஸ்யக் காட்சிகள் வருகின்றன. பராமவுண்டு ஸ்டூடியோவில் படமாக்கப்பட்ட இதில் ஏட்டய்யாவாக டி. எஸ். துரைராஜும், மனேவியாக டி. பி. முத்துலக்ஷ்மியும் நடித்தனர். கவிஞர் கிளென் சுந்தரம் இவர்களுக்கான தமாஷ் பாடல்களை எழுதியிருக்கிருர். வி. கிருஷ்ணன் டைரக்ட் செய்யும் இப்படத்திற்கான கதையை தேனீ என்பவரும், வசனத்தை வி. கலைமணி என்பவரும் எழுதியிருக்கிருர்கள். சர்க்காரின் பிரசாரத் திட்டங்களுக்கு அனுசரணையான படம் இது.

* * *

பாரமவுண்ட் ஸ்டூடியோவிலிருந்து எனது ஸ்புட்னிக் கோல்டன் ஸ்டூடியோ சென்று தங்கிய போது அங்கே பூங்காவனத்தில் தனித்து நின்ற அறைதைப் பெண் ஒருத்தியின அபயக்குரல் கேட்டது.

யாரோ பாவம்! தலைவிரிகோலமாகப் பூங்காவின் பெஞ்சின் மேல் அமர்ந்திருந்தாள். அவளிடம் குடிகாரன் ஒருவன் வந்து ரகளை செய்துகொண்டிருந்தான்.

எப்போதும் குடிப்பதிலும் கேளிக்கைகளிலும் ஈடுபாடு கொண்ட அவனிடம் தரகு வேலை செய்பவர்கள் நிறையப் பணத்தை வாங்கிக்கொண்டு, கடைத்தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போல, இந்தப் பெண்ணைக் காட்டிவிட்டுப்போய் விட்டார்கள். அதனுல் வந்தவினை இது.



பிரண்ட் பிக்சர்ஸ் "தங்கம் மனசு தங்கம்" செட்டில் தயாரிப்பாளர் பிரண்டும் நடிகர் டி.கே.ஆரும்

பயனீர் பிலிம்ஸார் டி. பி. சுந்தரம் டைரக்ஷனில் தயாரிக்கும் "கேப்டன் ரஞ்ச"னில் வரும் காட்சி இது. காமசுந்தரம் என்ற பணக்காரக் குடிகாரனுக டி. பி. எஸ். ராஜா



ரேணு பிலிம்ஸ்—செந்தி பிக்சர்ஸ் கூட்டாகத் தயாரித்துவரும் ''சைனு பஜார்'' பட செட்டில் எடுத்த படம்.

நடித்தார். கதாநாயகியாக நடித்தவர் ஜூனியர் ஸ்ரீரஞ்சனி இந்தக் கட்டத்தில் ஒரு கார் டிரைவராக வித்யாவதியும், க்ளீனராக காகா ராதாகிருஷ்ணனும் வந்து ஸ்ரீரஞ்சனியைக் காப்பாற்றுகின்றனர். முகவை ராஜமாணிக்கம் வசனம் எழுதியுள்ள இதில் ரஞ்சனே கதாநாயகனுக நடிக்கிருர்.

*   *   *

கோல்டனிலிருந்து திரும்பி காரியாலயம் வரும்போது,

எஸ். பி. எஸ். பிக்சர்ஸ் ''தெய்வமே துணை'' செட்டில் எடுத்த படம்

கீழே தென்னந்தோப் பொன்றில் ஒரு வாலிபர் களைத்துப் போய் தரையில் கிடப்பதைக் கண்ணுற்றதும் அங்கேயே இறங்கிவிட்டேன். பாவம்! சங்கர். வாழ்ந்து கெட்டவன்; நொடிந்து போயிருந்தான். சாப்பாடில்லாமல் ஒட்டி உலர்ந்து போயிருந்தான். அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

நான் அவனுக்கு உதவலாம் என்று நினைத்தபோது யாரோ, ஒரு நண்பர் அவனைப் பார்த்து, எடுத்து, ஆறுதல் சொல்லித் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, உணவளித்து அவனைத் தேற்றினர்.

விஜயா பிலிம்ஸாரின் 'புனர் ஜென்மத்'தில் வரும் இக்காட்சியில் சிவாஜி கணேசன் சங்கராகவும் எம். ஆர். சந்தானம் நண்பர் ரகுவாகவும் நடித்தனர். ஸ்ரீதர் வசனம் எழுதியுள்ள இக்கதையை ஆர்.எஸ். மணி டைரக்ட் செய்கிறார். 'தாக்' என்ற ஹிந்திப் படத்தின் தழுவல் இது.

இதைப் பார்த்து ஓரளவு நிம்மதியுடன் திரும்பிய என் காதில் இனிமையான பாட்டு ஒன்று ஒலித்து என்னைத் தன் திசையில் இழுத்தது.

''பாடு பட்டாப்
பலனை யாரும்
பார்க்கலாமே கண்
ணுலே!
பாலை வனம் உருமாறி
டுமே
பசுஞ்சோலைபோலத்
தன்னுலே!!''

என்று ஆடிப்பாடிக் கொண்டிருந்தாள் அழகு கொழிக்கும் நாட்டுப்புற நங்கை ஒருத்தி.

மருதகாசியின் இந்தப் பாட்டைப் பின்னணியில் ஜமுனுராணி பாடியிருந்தார். கே. வி. மகாதேவனின் இசைக்கேற்ப இப்பாட்டிற்காக சரோஜா தேவியை ஆட்டுவித்தார் ஹீராலால். 'வாழவைத்த தெய்வம்' படத்தில் வருகிறது இக்காட்சி.

ஆரூர்தாஸ் வசனம் எழுதியுள்ள வாழ வைத்த தெய்வம் படத்தை எம். ஏ. திருமுகம் டைரக்ட் செய்கிறார். தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான இதில் ஜெமினி கணேஷும் சரோஜா தேவியும் பிரதான பாகங்களில் நடிக்கிறார்கள்.



''தங்கம் மனசு தங்கம்'' செட்டில் டி. கே. ராமச்சந்திரன் — ஈ. ஆர். சாந்தகுமாரி.

BREAK SEAL
BI-COLATES
STEARNS
MARTIN & HARRIS (PRIVATE) LIMITED CALCUTTA, INDIA
பித்தநீர் ஊற்றை அதிகமாக்குகிறது
லிவருக்கு ஊக்கமளிக்கிறது
பை-கொலேட்ஸ்*
ஸ்டேர்ன்ஸ்
கல்லீரலின் குறைவு
வழக்கமான மலச்சிக்கல்
பித்தப்பையில் உண்டாகும் கட்டி
இவைகளின் சிகிச்சைக்கு
* REGISTERED USERS OF TRADE MARK AND SOLE AGENTS.
MARTIN & HARRIS (PRIVATE) LTD.
CALCUTTA - BOMBAY - MADRAS - DELHI

நான் ரஸித்த காட்சி

மனைவியே மனிதனின் 'மாணிக்கம்

அவன் ஒரு உத்தமன். நல்ல குடும்பத்தில பிறந்தவன். அவனுடைய நண்பன் கலிவரதன் ஒரு சண்டாளன். ஆனால் கலிவரதனை — யார் சொன்ன போதிலும் — கொடியவன் என்று ஏற்க மறுக்கிறான். அவனது நய வஞ்சகத்தால் கெட்டலைகிறான். ஒரு நாள் அவன் தன் ஆசை நாயகியுடன் நடனத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் போது, அவன் சொந்த மனைவியை கலிவரதன் ஏமாற்றி எங்கோ அழைத்துச் செல்வதாக வேலையாள் மூலம் அறிந்து ஓடி வருகிறான். கலிவரதன் தன் நண்பன் என்பதை மறந்து, தனக்கே உரிய தன் மனைவியை மீட்க ஓடி வருகிறான். அங்கே தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தன் மனைவியைக் காக்க கலிவரதனுடன் போராடுகிறான். நல்ல குடும்பத்தில் பிறந்தவன் சகவாசதோஷத்தால் சில நாள் தவறான வழியில் சென்றாலும் அவன் திருந்து



இந்தக் கட்டத்திலே பாகவதர் ஒரு அருமையான பாடலைப் பாடுவார் என்று எதிர்பார்க்கலாம். முத்தமிழ் பிக்சர்ஸ் ''சிவகாமி'' படத்தில்.

“என்னைப்பார், என் அழகைப் பார்” என்று இப்போது இந்த யுவதி பாடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!—முத்தமிழ் பிக்சர்ஸ் தயாரிப்பான “சிவகாமி”யில் ஜெயஸ்ரீ.

வான். மனைவிமேல்கொண்ட வெறுப்பு மாறி அன்பு ஏற்படும் என்பதை விளக்கும் இந்த ரசமான காட்சியை நான் ரசித்தேன்.

இரா. பத்மினி,
விருதுநகர்.

அல்லி பெற்ற பிள்ளை

குழந்தை பாலில்லாமல் துடிக்கிறது. இதைக்கண்ட அல்லி வருந்துகிறாள். பின்னர் தெளிந்து தனது குதிரை ராஜாவிடம் சென்று, அதற்கு தான் ஆகாரத்துடன் திரும்பி வரும் வரை, குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிப் போகிறாள். அவள் சென்றதும் குழந்தையைத் தாலாட்டிப் பாடுகிறது ராஜா. இந்தக் காட்சியில் குதிரை பாடுவது இயற்கைக்குப் புறம்பானது. இருந்தாலும் குழந்தையைக் குதிரை தாலாட்டுவதும், ஜி. ராமனாதனின் பாட்டும் கண்ணுக்கும் உள்ளத்துக்கும், செவிக்கும் விருந்தளிக்கின்றன.

எஸ். திருமேனி,
பேரளம்.

பாழும் குடியால் பகுத்தறிவிழந்த கண்ணன், பருவப் பெண்ணொருத்தியை வீட்டுக்கு அழைத்து வருகிறான். அபலை அவன் அறையிலே; அங்கே அந்தக் காமுகனும் இருக்கிறான். கற்பைக் காக்கக் கன்னி போராடுகிறாள். அந்த அலறல் கேட்டோ என்னவோ அங்கு வருகிறாள் அல்லி. கதவு மூடப்பட்டிருந்தும்கூட, அதை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து அபலைப் பெண்ணைக் காக்க முற்படுகிறாள். அவளை அழைத்துக் கொண்டு போய் வண்டியில் ஏற்றுகிறாள். ஆனால் காமுகனான கண்ணன் தாயையும் மதியாது வார்த்தைகளை அள்ளி வீசுகிறான். பேதை பெண்ணைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டவுடனே அல்லி தன் குதிரை ராஜாவுக்கு



ஹிமாலயா
புக்கே
டால்கம்
பவுடர்
Himalaya
நாள் முழுதும்
புதுமலர்ச்சி
யுடன்
விளங்க
ERASMIC
Himalaya
Bouquet
TALCUM POWDER
MADE IN INDIA BY HINDUSTAN
• நறுமண-
மோங்குவது
• சிக்கனமிகுந்தது
• குடும்பத்தினர்
அனைவருக்கும் உகந்தது
லண்டனிலுள்ள இராஸ்மிக் சார்பாக, ஹிந்துஸ்தான்
லீவர் லிமிடெட்டினுல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

ஆணையிடுகிறாள். வண்டிக்குள்ளே அபலையும் அல்லியும். குதிரையைத் தடுக்கிறான் கண்ணன். போகச் சொல்கிறாள் அல்லி. கண்ணனை தூக்கித் தள்ளிவிட்டு ஓடுகிறது ராஜா. பெற்ற மகனென்றும் பாராமல் நியாயத்திற்குப் போராடும் ஒரு உத்தமியின் நிலையைச் சித்திரிக்கும் அருமையான காட்சி இது.

கே.வி. கிருஷ்ணையன்,
தஞ்சாவூர்.

பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்

'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்' படத்தில் செக்கிழுத்த சிதம்பரனாரின் சரித்திரத்தை பாடல் மூலமாகச் சிறுவர்களைக் கொண்டு நாடகமாக நடத்தியிருக்கிறார்கள். சிறுவர்கள் நடிக்கிறார்கள் என்பதாலும் நாட்டுப் பெருமையை விளக்குகிறது என்பதாலும் இதை மிகவும் ரசித்தேன். இந்திய சர்க்கார், 'சுதந்திர யாத்திரை' என்ற செய்திப் படம் தயாரித்த போது விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் நாட்டவர்களைப் பற்றிக் காட்டாமல் விட்டுவிட்டார்கள். இந்தக் குறையைப் போக்கும் விதத்தில் கவர்ச்சிகரமான முறையிலே படத்தில் காட்டப்படும் சிதம்பரனார் பற்றிய நாடகம் இப்படத்தில் இடம் பெற்றிருப்பது பாராட்டத் தக்கது.

எஸ். முத்துக்குமரன்,
தாம்பரம்.

நாட்டுக்கொரு நல்லவள்

ராமையாவைப் பழிவாங்க முத்தையா கோர்ட்டுக்குக் கிளம்புகிறார். அவர் மகள் கௌரி தடுக்கிறாள். ஆனால் பிடிவாதமும் பழிவாங்கும் ஆத்திரமும் கொண்ட முத்தையா வண்

எந்தப் பெண்ணைப் பார்த்ததால் இவர் (டி. ஆர். மகாலிங்கம்) முகத்தில் இந்த மாறுதல் ஏற்பட்டிருக்கிறதோ?...

டியில் கிளம்புகிறார். கௌரி வண்டிக்கு முன் நின்று தடுக்கிறாள். 'குடும்ப கௌரவம் கோர்ட்டுக்குப் போவதில்தான் இருக்கிறதா?' என்று கேட்டு வழிமறைத்து நிற்கும்போது வண்டி கிளம்பவே அடிபட்டு விழுகிறாள் கௌரி. முத்தையா

தன் தவறை உணருகிறுர். பெற்ற பாசம்தான் வெல்லும், பெண்ணுலாகாத தொன்று மில்லை என்பதை விளக்கும் இக்காட்சியில் இளைஞர் இரணியல் ரவியின் அழகான வசனமும் விஜயகுமாரியின் அருமை

அந்தப் பெண் இவளாக (எம். என். ராஜம்) இருக்கலாமோ? எஸ். டி. எஸ். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு 1-ல்.

யான நடிப்பும் காட்சிக்குப் பெரிதும் சுவையூட்டுகின்றன.

தெ. முருகன்,
தலைக்குளம்.

கௌரியை தன் வீட்டுக்கு இழுத்துவரச் செல்லும் அவள் தகப்பனர் முத்தையா, தன் மகள் கழுத்திலே தாலியிருப்பது கண்டுத் திடுக்கிடுகிறுர். சங்கர் அவரிடம் மன்னிப்பு கேட்கிறுன். தனக்கும் கௌரிக்கும் திருமணம் நடத்தத் தீர்மானித்த பெற்ருேர்கள், பிறகு ஏற்பட்ட குடும்பத் தகராறுகள் காரணமாக தங்களுக்குள் திருமணம் நடத்த மறுத்ததைக் கண்டு கௌரி தற்கொலைக்குத் துணிந்ததால், அவளை வாழவிடும் பொருட்டு, தானே தாலி கட்டி விட்டதாகக் கூறுகிறுன் சங்கர். வீராவேசமாக முத்தையாவிடம் கோபங்கொண்டிருந்த சங்கர், தன் ரகசியம் வெளிப்பட்டவுடனே தலைகவிழ்ந்து உண்மையைச் சொல்லுகிறுன். ரகசியம் அம்பலமாகும் போது யாரும் தலை கவிழவே செய்வார்கள். பெற்ருேர்களின் வரட்டுப் பிடிவாதத்திற்குப் பலியாகக்கூடிய இளம் காதலர்களின் நிலையையும் அவர்கள் வாழத் திட்டமும்—போன்ற நற்கருத்துக்களையும் உண்மை நிலையையும் பிரதிபலிக்கும் இக்காட்சி மிகவும் நன்ருக இருக்கிறது. இதே காட்சியில் தோன்றும் இலட்சிய நடிகர் ராஜேந்திரனின் நடிப்பும், பீர்முகமதின் நடிப்பும் சிறப்பாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இக்காட்சியை நான் மன்மார ரசித்தேன்.

பி. தங்கம்,
மதுரை.

ளம் பூரித்
னி, கல்பனு
தயாரிக்கப்
லாம் ராமனுத்
கிடையாது.
ஐம்பதடி
ஒத்திகை
த பத்து
அப்படியே
தயாரா
ால்
பாய்
யைத்

றக் கூடியவா...
மேதைகளை இலக்குவல
கொள்ள முடியாததில் வியப்பில்லை.

*

*

*

சென்னை கோடம்பாக்கத்தில் நடிகை பண்டரிபாய் பாண்டுரங்கன் கோயிலொன்றைக் கட்டி, சமீபத்தில் அதற்குக் கும்பாபிஷேகமும் செய்து வைத்தார். ஓய்வு கிடைக்கும் நேரத்தில் எல்லாம் பண்டரிபாய் இங்கேதான் காணப்படுகிறார். பண்டரியின் பக்திக்கு இச் செயல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறதல்லவா?

பண்டரி கூறுகிறார்:

நாங்கள் கதறினோம்—
குழந்தை அசையாமல் கிடந்தது—
அப்பா ஓடினார், முடிவில்—
தெய்வத்தின் அருள் கண்டோம்...

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

—குறள்

அன்று ஒரு நாள் கோல்டன் ஸினி ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தேன். சுதர்சனம் பிக்சர்ஸாரின் "அவள் யார்" படத்தின் கதாநாயகி பண்டரிபாயுடன் பேசிக்கொண்டிருந்தேன். பேச்சுக்கிடையே ஒரு ருசிகரமான, மெய்சிலிர்க்கும்படியான சம்பவம் பற்றிக் கூறினார் பண்டரிபாய்.

நாங்கள் சுமார் ஏழெட்டுப் பேர் அங்கேயிருந்தோம். அவர் கூறிய விவரம் எல்லோருடைய உடல்களையும் புல்லரிக்கச் செய்தது. அவர் பேசி முடிக்கும் வரை எல்லோரும் மூச்சுவிடும் சப்தம்கூடக் கேட்கவில்லை. உணர்ச்சிப் பெருக்கோடு பண்டரிபாய் பேச ஆரம்பித்தார்.

அவர்கள் வீட்டில் ராஜி என்கிற ஒரு சிறுமி வளர்ந்து வருகிறாள். சுமார் ஏழு வயதுள்ள அந்தச் சிறுமியிடம் அவர்கள் வீட்டில் யாவரும் பேரன்பு செலுத்தி வருகிறார்கள்.

அந்தப் பெண்ணுக்கு வலிப்பு வந்தது. டாக்டர்களிடம் காட்டினார்கள். போகப் போக அந்தச் சிறுமி பலவித நோய்களால் மேன்மேலும் தாக்கப்பட்டுத் துடிதுடித்து வந்தாள். யாவரும் அவள் நிலை கண்டு மனமுடைந்து போனார்கள். டாக்டர்கள் இன்றைய நாகரீக வியாதிகள் பலவற்றின் பெயர்களைச் சொல்லி வைத்தியம் செய்து வந்தார்கள். ஆனால் நாளடைவில் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது.

ராஜி பண்டரிபாயின் நெருங்கிய உறவுப்பெண் அல்ல. இருந்தாலும் அவள் அவர்கள் வீட்டின் வளர்ப்புப்பெண். "ராஜி ராஜி..." என்று எல்லோருமே அவளிடம் மிகவும் அன்பும் பரிவும் காட்டி வருகிறார்கள். எல்லோருடைய அன்பையும் பெற்று வளர்ந்த சிறுமி, துடிக்கிறாள் என்றால் வளர்த்த பாசம் சும்மா இருக்கவிடுமா? பண்டரி வீட்டில் பணம் கரைந்தது. குணம் ஏற்படவில்லை. டாக்டர்கள் ராஜியின் நிலை பற்றி நிச்சயமாக எதுவும் சொல்ல முடிய

எழுதியவர்: "ஸ்ரீநிவாஸ் குமார்"

வில்லை. நிலைமை மிகவும் மோசமாகி, ராஜியை இழந்து விடுவோமோ என்ற கவலையால் யாவரும் அளவிட முடியாத வேதனைப்பட்டார்கள். அந்த வீட்டில் துக்கத்தின் சாயை படர்ந்து வீடே களையிழந்து கிடந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் உட்கார்ந்து மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டிருந்தார்கள். வேளா வேளைக்குச் சரியான சாப்பாடே கிடையாது.

மனித முயற்சிக்கு மீறிய நிலை வந்த போது எல்லோரும் கதறி விட்டார்கள். அவர்கள் நடுவே ஒருவர் மட்டும்,கவலைக்கிடையே சிந்திக்கும் ஆற்றல் பெற்ற அனுபவஸ்தராக இருந்தார். ஆமாம், பண்டரிபாயின் தகப்பனாரைத்தான் குறிப்பிடுகிறேன். அவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ, பண்டரியிடம், "அம்மா! ஆச்சார்யாள் அதிருஷ்டவசமாகச் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். அவரிடம் போய் விபூதி பிரசாதம் வாங்கி வரலாம். குழந்தை குணமாகி விடுவாள்" என்றார்.

மரண வாயிலல் நிற்கும் சிறுமி ராஜியை விட்டுவிட்டு அங்கிருந்து நகர மறுத்து விட்டனர் யாவரும். தகப்பனார் மட்டும் நேரே கிளம்பிச் சென்று சங்கராச்சாரியாரின் பாதங்களில் விழுந்தெழுந்து விஷயத்தைக் கூறிக் கண்கலங்கியபடி நின்றார். ஆச்சார்யாள் புன்சிரிப்புடன் அவரிடம் விபூதி பிரசாதம் கொடுத்தார்கள். வீட்டுக்குப் பறந்து வந்தார் கிழவர். விபூதி பிரசாதம் வாங்கிய தெம்பில் அவரே இருபது வயது காளையைப்போல் ஓடி வந்தார்.

சிறுமி துடித்துக் கொண்டிருந்தாள். கிழவர் அவள் நெற்றியிலே விபூதி பூசினார்; சிரசிலே தூவினார்; கழுத்திலே தடவினார்.

சில வினாடிகள் சென்றன. தன் நினைவின்றிப் புழுவாகத் துடித்த சிறுமி ராஜியின் துடிப்பு அடங்கியது; வலிப்பு நின்றது; கண்களை லேசாகத் திறந்தாள்! ஏதோ பேச முயன்றாள். மெதுவாகப் புன்முறுவல் பூத்தாள். சிறிது நேரம் சென்றதும் பேச ஆரம்பித்தாள் அவள். நரகவேதனை அனுபவித்த அலுப்புகூட அவளிடம் இப்போது காணப்படவில்லை. யாவரும் ஆனந்த மிகுதியால்—உணர்ச்சிப் பெருக்கால் அழுதபடி நின்றனர். உடனே ஆச்சார்யாளிடம் ஓடினர். ஆனால் அன்புருவான அவர்கள்-தெய்வப் பிறவியான அவர்கள்—உள்ளே சென்று விட்டார்கள். எல்லாவற்றையும் அறிந்த—எல்லாவற்றையும் கடந்தவர்களல்லவா அவர்கள்?

கடவுள் இல்லை என்று சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள் சிலர். நாங்கள் கடவுளை நம்பினோம். அவரது சக்தியைக் கண்கூடாகக் கண்டோம். இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால்,ராஜிக்கு அதற்குப்பின்-அடிக்கடி வரும்- வலிப்புகூட வருவதில்லை. அவளைக் காப்பாற்றிய கடவுளின் அருளால் அவள் பூரண தேக சுகத்துடன் இருக்கிறாள்...

பண்டரி இந்த நிகழ்ச்சியைக் கூறி முடித்ததும் தெய்வத்தின் திருவருளை வியந்தோம். இன்னும்கூடச் சிலர் தெய்வமில்லை என்கிறார்களே!



பாத்திரம் பிறந்தது

"அவள் யார்" கதாசிரியர், தயாரிப்பாளர், டைரக்டர் கே. ஜெ. மகாதேவன், தன் படத்தின் கதாநாயகனை நம் முன்னால் நிறுத்த, எடுத்துக் கொண்ட பிரயாசையை விளக்குகிறது இக்கட்டுரை.

Varan

கே. ஜே. எம்.!

பி.ஏ., எம்.ஏ. போல, படவுலகில் எல்லாம் தெரிந்தவருக்கு இந்தப் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முதலாவது கே. ஜே. எம். என்றால் எல்லாம் தெரிந்தவர் என்று பொருள்.

கே. ஜே. எம். என்று படவுலகினரால் செல்லமாக அழைக்கப்படும் கே. ஜே. மகாதேவன், கே. சுப்ரமணியம் அவர்கள் தயாரித்த 'தியாக பூமி'யில் கதாநாயகனாக நடித்தார். கல்கி எழுதி முதன் முதல் படமாக்கப்பட்ட கதை 'தியாக பூமி'தான். அதன் பிறகு மகாதேவன் இவ்வாறு துறையிலும் ஈடுபட்டு ஜெமினியில் டைரக்டராகப் பணியாற்றினார். அவரது கைவண்ணத்தில் தயாரானதுதான தாரத்தில் உயர்ந்தது' என்று அதிராக எல்லோராலும் பாராட்டப்பட்ட 'ஜீவனாம்சம்'.

மகாதேவன் நீண்டகால சேவைக்குப் பின் ஜெமினியிலிருந்து விலகி, சுதர்சனம் பிக்சர்ஸ் ஸ்தாபனத்தை ஆரம்பித்து "அவள் யார்" படத்தைத் தயாரித்து வருகிறார். இதன் தயாரிப்பு, கதை, டைரக்ஷன் மூன்று பொறுப்புக்களும் இவரிடமே இருக்கின்றன.

"அவள் யார்" படத்தில் வரும் 'அவள்' இருக்கிறாளே, அவள் எதனைக் குடும்பப் பெண்களைப் போன்றவளா? ஆனால் அந்த அவளுடைய அவன்?...

இந்த 'அவன்'தான் படத்தைப்போல் இந்தப் படத்திலும் கதாநாயகன்.

மகாதேவனுக்கு அப்போது எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கலாம். "ஒரு தனி மனிதனின் வாழ்க்கையில், அவன் ஏற்றிருக்கும் பதவியைப் [illegible] செய்வது போன்ற அனுபவங்களை [illegible] இதைப் போன்றமொழிகளே. சென்னையின் பிரபல வழக்கறிஞர்களில் ஒருவரும் மகாதேவனின் தகப்பனாருமான திரு கே. எஸ். [illegible] அய்யர் [illegible] போல மகாதேவன் மனதில் இடம் பெற்றிருந்தது. சில ஆண்டுகளில் ஒரு நீதிபதியின் [illegible] அவர் மகிழ்ச்சி அடைய முடியாமல், [illegible] சம்பவம் நடைபெற்றது.

மகாதேவன் [illegible] சென்ற வருடம், தன் மனதில் அமைந்து கொண்டிருந்த இந்தச் சம்பவங்களைக் கொண்டு கதையை உருவகப்படுத்த ஆரம்பித்தார்.

சிவாஜி கணேசன்!

மகாதேவன் கதை, பாத்திரம் இரண்டுக்கும் முன்னதாகச் செய்த முடிவு, சிவாஜி கணேசனை ஒப்பந்தம் செய்வது. அது நடக்காவிட்டால் இந்தக் கதையே வந்திருக்காது. அவர் மனதில் சில சம்பவங்கள் [illegible]. அவற்றைக் கோர்த்து, சக துக்கங்களை ஏற்க ஒருவனை உருவகப்படுத்தினர் மகாதேவன். "சிவாஜி கணேசன்தான் இதை ஏற்கமுடியும். அவரை வைத்துத்தான் இந்தக் கதையை எழுதியிருக்கிறார் கே.ஜெ.எம்." என்று யாவரும் கூறப்போகிறார்கள், 'அவன் யார்' படம் பார்த்துவிட்டு.

நாற்புறங்களிலிருந்தும் என் மனக்குதிரையை நான்கு பக்கம் இழுக்கும் சக்திகள் விசுவரூப மெடுத்து நின்றன. இவைகளை விரட்டியதுபோல் என் மனக்குதிரையை இழுத்து நிறுத்தியது ஒரு உருவம் என் மனத்திரையில். இங்கே நீங்கள் பார்க்கும் கணேசனின் படமே நிலைத்து நின்றது. நானும் பன்முறைச் சிந்தித்தேன். ஆனால் நான் படைத்த எனது இப்பாத்திரத்தை ஏற்று நடிக்கத் தக்க திறம் படைத்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்தான் என்பதை என் உள் மனம் சொல்லிக்கொண்டே இருந்தது.



கதை எப்படி உருவாகிறது? கதாநாயகன் கிடைத்து விட்டான். அவன் நல்லவன், உத்தமன், சந்தேகி, கொடியவன், இந்த மாறுதல்களை அவன் அடையும்போது அவனால் ஆட்டிப் படைக்கப்படும் அவள் தேவையல்லவா? கணவன் இழுத்த இழுப்பிற்கெல்லாம் வளைந்து கொடுத்து பொறுமையின் பூஷணம் என்று பாராட்டப்படுபவளாக 'அவள்' அமைய வேண்டுமானால் பண்டரிபாயை போட வேண்டும். இப்படிப் பாத்திரங்களின் அமைப்பு தொடருகிறது.

சம்பங்களை விட்டாரிடம் சொன்னார் மகாதேவன். நீதிஸ்தலக் காட்சிகள் மனதிலே உதயமானபோது மகாதேவன் மரியாதையோடு ஜெயராம அய்யரை சரணடைந்தார்! ஆமாம், நீதிஸ்தலக் காட்சிகள் கண்டபடி படமாக்கப்படும் இந்த நாளில் சென்னை

ஹைகோர்ட் முதல் நடவடிக்கை வரை தத்ரூபமாக இருக்கின்றன என்று நீங்கள் பாராட்டப்போகிறீர்கள். திரு. கே. எஸ். ஜெயராம அய்யர் தான் அதற்குக் காரண கர்த்தா. கதையைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்த மகாதேவன் ஒரே மாதத்திற்குள் 'ஷூட்டிங் ஸ்கிரிப்ட்' டுடன் தகப்பனார் முன் நின்று ஆசி கோரினார்,

கதாநாயகன் சதாசிவம் ஒரு இளைஞன்.

அவன் வழக்கறிஞனாகிறான். அவன் மகாலக்ஷ்மியை மணக்கிறான்; ம்கிழ்ச்சி ததும்புகிறது அவன் உள்ளத்திலே. குழந்தை பிறக்கிறது அவனுக்கு. குதூகலமடைகிறான். மனைவிமேல் சந்தேகம் ஏற்படுகிறது; அமைதி குலைகிறது அவன் வாழ்விலே. வீட்டைவிட்டுத் துரத்துகிறான் அவளை; விதி அவனை அப்போதும் அமைதியுடனிருக்க விடவில்லை. சந்தேகப்பேய் ஒழிகிறது; வேதனைதாங்க முடியவில்லை. தன் இல்லற வாழ்க்கையைச் சீர்தூக்கிப் பார்த்து நீதி வழங்கத் தவறி விட்ட அவனைத்தேடி நீதிபதி பதவி வருகிறது!





இன்று அவன், அவன் அல்ல. ஆண்டுகள் பல ஆகிவிட்டன. வயோதிகராதலால் அவர் என்றே அழைப்போம். அவர் புகழ் பெற்ற நீதிபதி. குற்றவாளிக் கூண்டிலே கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு வயதான

‘என் பாத்திரம் உயிருடன் உலவுவதை மனத்திரையில் நான் மட்டும் பார்த்து ரசித்தேன்; சபரி ராமனுக்குத் தர பழங்களைச் சுவைத்ததுபோல்

ஸ்திரீ. நிரபராதிபோல் தோன்றுகிறுள் அவள். அந்த ஸ்திரீக்காக வாதாடுகிறுன் ஒரு இளம் வழக்கறிஞன். முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறுள் ஒரு அழகி. நீதிபதி யார், அவள் யார், வழக்கறிஞன் யார், அழகி யார்? என்றெல்லாம் வெளிப்படும்போது நீங்கள் திடுக்கிட்டுப் போய் விடுவீர்கள். கண்களில் வழியும் நீரை, அப்படியும் இப்படியும் பார்த்து விட்டுத் துடைத்துக் கொள்வீர்கள். நான் இதற்கு மேல் சொல்லி விட்டால் உங்களுக்குச் சுவாரஸ்யம் குறைந்து விடும்.

மகாதேவன் அமைத்திருக்கும் சதாசிவம் பாத்திரமும் ஒப்பந்தம் செய்திருக்கும் சிவாஜி கணேசனும் அவரது முதல் முயற்சியிலேயே அவரை வெற்றியடையச் செய்திருக்கிறார்கள்.

நடிப்பு, இசை, கவர்ச்சி, நடனம், வசனம், காட்சி அமைப்பு, ஒளி, ஒலிப்பதிவுகள், டைரக்ஷன் எல்லா அம்சங்களிலும் சிறந்ததாக 'அவள் யார்' உருவாகி வருகிறது.

''அவள் யார்'' படக் கதையின் ஜீவன் சதாசிவம். இது கே.ஜெ. எம். வைத்த பெயர் தான். அவன், தன் வாழ்வில் கண்டதெல்லாம் வெறும் ஏமாற்றம்தான். அவன் கொண்ட ஆசையெல்லாம்



மண்கோட்டையாகப் போய்விட்டது. உள்ளத்திலே வேதனையைச் சொத்தாகக் கொண்டு அவன் வாழ்ந்தான். ஏமாற்றம் நிறைந்த அவன் வாழ்வு சந்தேகப் பேய் பிடித்த மனித மனங்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும்.

கே. ஜெ. எம்., தான் கேள்விப்பட்ட ஒரு சம்பவத்திற்கு உயிர் கொடுக்க ஒரு கதையை அமைத்தார். அவர் மனதிலே முதலில் பாத்திரதாரிதான் நின்றார். சிலருக்கு இது விசித்திரமாகத் தோன்றினாலும் உண்மை இதுதான். சிவாஜி கணேசன், மகாதேவனின் மனதில் தோன்றிய கற்பனைக் கதாநாயகனை கே. ஜெ. எம். முன்பே நிறுத்திவிட்டார்.

மகாதேவன் நடிகரை வைத்து பாத்திரத்தை கற்பனை செய்தார். அவரே தயாரிப்பாளராதலால் சிவாஜி கணேசனை ஒப்பந்தம் செய்தார். அவரே டைரக்டராகவும் இருப்பதால் தன் மனப்பாத்திரம்போல் இயக்கி வருகிறார். நாளை வெள்ளித் திரையிலே ''அவள் யார்'' படம் பார்க்கும் ரசிகர்கள், மகாதேவன் பாத்திரம், நடிகர், டைரக்ஷன் இவற்றில் எதைச் சிறப்பாக அமைத்திருக்கிறார் என்பதைச் சொல்ல மிகவும் சிரமப்படப் போகிறார்கள்!

வெட்டுங்கள் / வெட்டுங்கள்

அல்லி பெற்ற பிள்ளை

லாடக்காரர் பொன்னன் மகன் பலவேசம் பாவாயி வீட்டுக்கு வருகிருன். அங்கு ஒரு தேள் வருகிறது. அவன் பயந்து ஓடுகிருன். நாம்சிரிப்பதற்காகக் கோலப் பொடியைத் தன் தலைமேல் கொட்டிக் கொள்ளுகிருன். பிறகு அதே பலவேசம் மகுடியை வைத்துக்கொண்டு பாம்பைக் கையினல் பிடிப்பதாகக் காட்டுகிருர்கள். தேளைக்கண்டு பயப்படுபவன் பாம்பை மட்டும் தைரியமாகப் பிடித்துவிடுவாளு? ஆகவே தேளை கண்டு பயப்படும் காட்சியை வெட்டி விடவேண்டும்

எம். முத்துசாமி,
கல்லிடைக் குறிச்சி.

தன் மகன் ஒரு பெண்ணிடம் ஒழுக்கம் தவறி நடந்து கொள்ள முற்பட்டதைத் தடுக்க முயற்சிக்கிருள் அல்லி. அதற்காக கதவை உடைத்துக் கொண்டு நுழைகிருள். தன் மகனிடம் வாதாடும்

'இதோ பாருங்கள். இனி நமக்கு நல்லகாலம்தான்' என்கிருளா இந்த அம்மாள்?—''சிவகாமி''யில் எம். கே. தியாகராஜ பாகவதர் - ஜி. வரலக்ஷ்மி.

போது, அவன் தகப்பனுர் ஒரு பெண்ணைக் காப்பாற்றும் பொருட்டு தன் உயிரையே அர்ப்பணித்தார் என்று குறிப்பிடுகிருள். இந்த வசனம் தயக்கமின்றி வெட்டப்படவேண்டும். அவள் கணவன் ஒரு பெண்ணைக் காப்பாற்றத்தான் உயிர் கொடுத்தார் என்பது இவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. சொன்னவர் யாருமில்லை. மேலும் அவள் இந்நிகழ்ச்சியைப்பற்றிப் போலீஸாருக்குப் புகார் செய்தோம் என்றும் கோர்ட்டில் கூறுகிருள். ஆகவே இந்த வசனம் வெட்டப்பட வேண்டும்.

கிறிஸ்டியன் டிவோட்டா,
புதுப்பேட்டை.

பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்

ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்தின் தகாத செயல் குறித்துக் கண்டித்தும், அச்செயல்களை மறைமுகமாகக் கண்காணிக்க மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் அதிகாரி வரப்போவதாகவும் அறிவிக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஹோட்டலில் சந்திக்கும் சிகாமணியை அதிகாரியாக எண்ணுகிருர்கள். அவருக்கு உடைகள் வாங்கிக் கொடுத்ததாகவும் ஹோட்டல் செலவு முதலியவைகளைக் கொடுத்ததாகவும் கூடச் சொல்லப்படுகிறது. எஞ்சினீயர், டாக்டர் மற்றும் கற்றவர் புடை சூழ இருந்தும் சம்பந்தமற்ற ஒரு மனிதனை, அவர் பிரசிடெண்ட் வீடு எது என்று கேட்டதால் மட்டும் அதிகாரியாகத் தீர்மானித்துக் கூத்தடிப்பது காணச் சகிக்கவில்லை. ஜில்லாபோர்டு விவகாரத்தில் மத்திய அரசாங்கம் தலையிட வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இதுபோன்று அதிகாரிகளை அவமதிப்பதாகவுள்ள காட்சிகளையும் அரசாங்கத்தின் தலையீடுகளையும் தெரிந்துகொள்ளாமல் தரமற்ற சூழ்நிலையை உண்டாக்கியிருப்பதும், கற்றவர் குழாத்தை அவமதிப்பதும் போன்ற வேதனை தரும் கட்டங்களை வெட்டி விடுவதில் தவறொன்றுமில்லையே.

நாராயணன்,
சீதார்குண்டா.

சிவகெங்கைச் சீமை

சிவகெங்கைச் சீமைக்குள்ளே நுழையும் வீரன் ஊமைத்துரையை யாரென்று அறியாமலேயே சந்திக்கிருன் முத்தழகு. அவனுல் ஊமைத்துரையை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்பதே சரியல்ல; உருவகம் சரியில்லை. பிறகு அவன் பெரிய மருதுவுக்குத் தெரியாமல் சின்ன மருது அந்த அரண்மனையிலே வைத்துக் காப்பாற்றுவது தாங்க முடியாத அவமானமாகும். கட்டபொம்மனை கொள்ளைக்காரன் என்று சொல்கிறவர்கள்கூட, ஊமைத்துரையை வீரன் என்கிருர்கள். ஆனுல் இதிலே ஊமைத்துரை பேடிபோல் மறைந்து வாழுகிருன் என்று சித்தரிக்கப்படுகிறது. இப்படி வீரபரம்பரையினரை இழித்துக் காட்டுவதால் என்ன பலன்?

ஆர். ஆர். நாதன்,
கடலூர்.

பெரிய மருதுவின் வீரம் திறமை காரணமாகவே, வேலுநாச்சியார் அவனிடம் நாட்டை ஒப்படைத்ததாக வரலாறு கூறுகிறது. ஆனுல் 'சிவகெங்கைச் சீமை' மன்னர் பெரிய மருது, சிவகெங்கையின் எல்லைக்குள்ளேயே ஊமைத்துரை வரக்கூடாது என்கிருர். இது வீரத்திற்குக் களங்கம் விளைவிப்பதாக இருக்கிறது. இதை வெட்டி விடலாம்.

எஸ். பி. ராமன்,
சென்னை.

நாளொரு மேனியாய், பொழுதொரு வண்ணமாய்...

ரெக்ஸோனா சோப்

உங்கள் சருமத்தை எழிலோங்கச் செய்கிறது

ரெக்ஸோனாவில் 'கேடில்' என்ற விசேஷப் பொருள் அடங்கியுள்ளது; எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமே 'கேடில்' என்பது.

உங்கள் எழிலுக்கு...ரெக்ஸோனா



என் டைரியில் எழுபது நாட்கள்





வைஜயந்திமாலா வுடன் மேல்நாடு சென்றிருந்த 'மேக்-அப்' சிவராமன் அங்கு நடந்த சம்பவங்களை தனது டைரியிலிருந்து அப்படியே தந்திருக்கிறார்.



மே. 15

நானும் நண்பர் திரு கே. டி. கோபாலும் மாலையில் சென்று எனக்கு 'பாஸ்போர்ட்' வாங்கி வந்தோம். கோபால், திரு. ராம் கோபாலுடன் மேல் நாடு சென்று நடனமாடி வந்தவர். தற்போது எங்களுடன் வருபவர். இவரது மயிலாட்டம் பிரசித்தி பெற்றது.

எங்கள் பிரயாணத்தில் கொண்டு போவதற்காக ஜெமினி ஸ்டுடியோவில் இரவு ரிக்கார்ட் செய்த ஜதிப் பாட்டுக்கு நான் பம்பை வாசித்தேன்...

ரிக்கார்டு செய்த பாட்டைக் கேட்டு ''எல்லோருடைய பேரையும் நீ தட்டி விடுவாய்'' என்றார் மாலாவின் பாட்டியார் யதுகிரி தேவி, புன்சிரிப்போடு. அவர்கள் வார்த்தையில் எப்பொழுதுமே நம்பிக்கை யுடையவன் நான்.

மே-16 பகல்: நடிகர் சங்கத்தில் எங்கள் எல்லோருக்கும் மேல் நாடு செல்வதற்காக வழியனுப்பு விழா நடந்தது. அதில் பேசிய நடிகர் திரு. முஸ்தபா அவர்களும் திரு. டி வி. நாராயணசாமி அவர்களும் முதன் முதலாக மேல் நாடு செல்லும் தமிழ்நாட்டு ஒப்பனையாளன் (மேக்கப் மேன்) சிவராம் என்று சொன்னார்கள். ''முதல் ஒப்பனையாளன்'' என்று சொன்னதைக் கேட்கப் பூரித்துப் போனேன்.

இரவு: நானும், திரு. கோபாலும், மாலா விட்டில் வேலை பார்த்துவரும் ஐயங்காரும் மேல் நாடு போவதற்காக உடைகள் தயாரிக்க கதர் கடைக்கு துணியெடுக்கச் சென்றோம்.

மே-17 மாலையில் மாலா விட்டில் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டத்தில் நடிகர் சிவராம், மேல்நாடு செல்லும் எங்கள் கோஷ்டியினரை அறிமுகப் படுத்தி வைக்கும்போது, 'என் பெயருடைய மேக்-அப் சிவராமனும் மேல் நாடு போவதுபற்றி மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்'' என்றார். சிரிப்பு வந்தது எனக்கு.

மே-18 மாலையில் மாலாவை வழியனுப்ப மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குச் சென்றிருந்தேன். மப்பும் மந்தாரமும் சூழ ரமணியமாக இருந்தது சீதோஷ்ண நிலை. அங்கு ஜூபிலி கோவிந்தராஜன். குப்தாஸ், 'உமா பிக்சர்ஸ்' உரிமையாளர், 'ஒளவை' டி. கே. சண்முகம் மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

மே-19 மேல் நாடு செல்வதற்கு வேண்டிய உடைகள் எல்லாம் என் விட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

இரவு பம்பாய் மெயிலில் டி. கே. எஸ். சகோதரர்கள் மற்றும் ஏனைய நண்பர்களுடைய வாழ்த்துக்களோடு பம்பாய்க்கு வண்டியேறினேன். சென்டிரல் மறைறது. கொஞ்சம் கொஞ்சமாக. என் பிரயாணமும் ஆரம்பமாகி விட்டது. ஆசைக் கனவு ஒன்று நிறைவேறப் போகிறதோ?

மே-21 இன்று முழுவதும் சந்தோஷமாக ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். எங்கள் மேல்நாட்டுப் பயணத்தைப் பற்றியே சம்பாஷணை பெரிதும் சுற்றி வந்தது.

மே-22 காலையில் மாலாவின் மானேஜர் சர்மா பம்பாய் ரயில் நிலையத்தில் எங்களை வரவேற்றார். உடனடியாக சிக்ரீன் ஹோட்டலுக்குச் சென்று சாமான்களை வைத்துவிட்டு, வைஜயந்திமாலாவுக்குச் சொந்தமான ''சாந்திபவ''னுக்கு சென்றேன், நண்பர்கள் நாகப்பா, கோபாலுடன். அன்று இரவு நடன ஆசிரியர் திரு கே. என். தண்டாயுதபாணி பிள்ளை, டைரக்டர் திரு கே. சுப்பிரமணியம், டைரக்டர் திரு. கே. ஜானகிராம் முதலியவர்கள் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது மேல் நாட்டில் நான் தெரிந்து கொள்ள வேண்டிய மேக்கப். மற்றும் இதர தொழில் நுணுக்க விஷயங்களைப் பற்றி திரு டி. கே. சண்முகம் அவர்கள் பிரத்தியேகமாக தன்னிடம் சொல்லி அனுப்பியிருப்பதாக திரு சுப்பிரமணியம் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். என்பால் பேரன்பு கொண்ட திரு ஷண்முகம் அவர்களின் உள்ளன்பு என்னை நெகிழ வைத்து விட்டது.

மே-23 மாலையில் பம்பாய் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நாங்கள் எல்லோருமாக விமானத்தில் ஏறினோம்.

மே-24 எல்லோரும் நலமாக காலை சுமார் பதினொரு மணிக்கு பாரிஸ் நகருக்கு வந்து சேர்ந்

தோம். விமானத்தில் நண்பர்களுடன் பிரயாணம் செய்வது மகிழ்ச்சிகரமாக இருந்தது. என் வாழ்க்கையில் இது ஒரு அபூர்வ சம்பவம்.

மே-25 மாலையில் "ஷாரா பர்னுடட்" தியேட்டரில் ஒத்திகை நடந்தது.

மே-26 இரவு ஒன்பது மணிக்கு 'ஷாரா பர்னுடட்' தியேட்டரில் நாட்டியக் கச்சேரி ஆரம்பமாகியது. கச்சேரிக்கு வந்திருந்த பாரிஸ் நகரின் மூக்கியஸ்தர்களும் பத்திரிகாசிரியர்களும் அன்றைய நடனத்தை நன்கு ரஸித்தார்கள்.

மே-27 மாலையில் தியேட்டர் மாடியில் பத்திராதிபர்கள் கூட்டமொன்று நடந்தது. பத்திரிகை ஆசிரியர்களுக்கு கலைக்குழுவினர் அனைவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார் டைரக்டர் சுப்பிரமணியம். இரவு ஒன்பது மணிக்கு கச்சேரி ஆரம்பமாகியது வழக்கம் போல. நான் குறத்தி நடனத்தில் பம்பை வாசித்தேன். திருமதி யதுகிரி அம்மாவுடையவும் குமாரி மாலா அவர்களுடையவும் வேண்டுதலின் பேரில். ஒரு காட்சியில் தனியாகவும் பம்பை வாசித்து பாரிஸ், மக்களின் கர கோஷத்தைப் பெற்றுக் கொண்டேன்.

மே-28 காலையில் இந்தியக் கலைஞர்களை பாரிஸ் முக்கியஸ்தர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் பொருட்டு ஒரு விருந்து நடந்தது. அதில் நான் கலந்து கொண்டேன். இரவு எப்பொழுதும் போல் கச்சேரி நடந்தது.

மே-29 காலையில் நண்பர்களுடன் புறப்பட்டு நெப்போலியன் ஸ்தூபி, யூனஸ்கோ மாளிகை, எபில் கோபுரம் முதலியவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தேன். மாலை ஏற்படுத்தப்பட்டிருந்த சினிமாதயாரிப்பாளர்கள் தேநீர் விருந்தில் கலந்துகொண்டேன். இரவு வழக்கம்போல் கச்சேரி நடந்தது.

மே-30 காலையில் பாரீஸ் நகரில் "ஆக்பா" பிலிம் கம்பெனியில் பணியாற்றிவரும் ஒரு ஜெர்மன் பெண்மணிக்கு இந்தியப் பெண்மணிபோல் ஒப்பனை செய்தேன். அதற்காக இந்திய உடை அணிவித்தேன். டைரக்டர் ஜானகிராம் அவர்கள் புகைப்படம் பிடித்தார் அம்மங்கையை. அன்று பகவிருந்து எனக்கு தலைவலியும், ஜுரமும் அதிகமாக ஏற்பட்டும் இரவு நடைபெற்ற கச்சேரியில் கலந்து கொண்டேன். பம்பையும் வாசித்தேன்.

மே-31 உடல் நலம் சரியில்லாத காரணத்தால் வெளியே எங்கும் செல்லாமல் ஹோட்டலிலேயே தங்கியிருந்தேன்.

ஜூன்-1 பிற்பகல் திருவாளர்கள் கே. சுப்ரமண்யம், தண்டாயுதபாணிப்பிள்ளை ஆகியோருடன் சினிமா சென்டிரலுக்குச் சென்றேன். அதன் மானேஜரிடம் என்னைப் பற்றியும் தண்டாயுதபாணிப் பிள்ளையைப் பற்றியும் சொல்லி அறிமுகப்படுத்தினார், திரு கே. சுப்ரமண்யம் அவர்கள். அத்துடன் சினிமா டெக்னிக் முறைகளைச் சொல்லிக் கொடுக்கும் யூனிவர்ஸிடியைப் பார்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. மாலையில் பாரிஸ் ரேடியோவில் பேசப் போன திரு கே. சுப்பிரமணியம் அவர்களோடு ரேடியோ நிலையத்திற்கு நானும் சென்றேன்.

ஜூன்-2 பாரிசிலிருக்கும் ஏர் இந்தியா இண்டர்நேஷனல்" சார்பாக நாட்டியக் கச்சேரி நடந்தது.

ஜூன்-3 திரு கே. சுப்பிரமணியம் தண்டாயுதபாணிப்பிள்ளை, மாலாவின் தகப்பனார் ராமன், ஜானகிராம் முதலியோருடன் பிரஞ்சு பிலிம் இன்ஸ்டிட்யூட்டுக்கு சென்றேன். அங்குள்ள மானேஜர் இன்ஸ்டிட்யூட்டின் எல்லா பிரிவுகளுக்கும் அழைத்துச் சென்று காண்பித்ததோடு அவற்றைப் பற்றிய விளக்கமும் கூறினார். பின்பு விருந்துண்ணச் செய்து, அங்கு உருவாக்கப்பட்ட 36 ஷாட்டுகள் கொண்ட ஒரு

படத்தையும் காண்பித்து, மகிழ்ச்சியோடு எங்களை வழி யனுப்பினார்.

மாலையில் ஏர் இந்தியா இண்டர் நேஷனல் தேநீர் விருந்தில் கலை ஞர்கள் எல்லோருடன் நானும் கலந்து கொண்டேன்.

ஜூன்-4 நானும் திருமதி யதுகிரி யம்மாள், குமாரி மாலா, திரு வாளர்கள் கே. சுப்பிரமணியம். சர்மா, ஜானகிராம் முதலியோர் அய்டா என்ற பிரபல பெண் மேக்கப் ஆர்ட்டிஸ்டிடம் சென்றிருந்தோம். அவரது ஒப்பனையகத்தையும் பார்த்ததாடு அமெரிக்காவிலிருந்து அவா கற்று வந்திருக்கும் பிளாஸ்டிக் மேக்கப்பையும், அதன் விவரங்களையும் கேட்டறிந்தேன். அன்று மாலையில் யூனஸ் கோவில் மிகவும் நல்ல முறையில் இதுவரையில் எவருமே ஆடாத இடத்தில் நாட்டியம் நடந்தது. அங்கும் பம்பைக்கு மகத்தான வரவேற்பு!

ஜூன்-5 மாலையில் நானும் மற்றும் நண்பர்களும் பாரீஸ் நகரத்தின் சில முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்தோம்.

ஜூன்-6 காலையில் நான் ஒரு சில நண்பர்களுடன் ''சமாரிடன்'' என்ற பெரிய கடைக்குச்சென்று, புதுமையான சில மேக்கப் சாதனங்களை வாங்கி வந்தேன்.



லண்டனில் தமிழர் ஒருவர் நடத்தும் விடுதியின் முன்பாக ஏனைய தமிழர்களுடன். கழுத்தில் மப்ளரைக் கட்டியிருப்பவர்தான் மேக்-அப் சிவராமன்.

ஜூன்-7 காலை பதினோரு மணிக்கு பாரிஸிலிருந்து லண்டனுக்கு புறப்பட்டோம் எல்லோருமாக. மாலை மூன்று மணிக்கு லண்டன் மாநகரை அடைந்தோம். அப்பப்பா! எவ்வளவு பெரிய விமான நிலையம்! எத்தனை விமானங்கள்! பிரமை அடங்கவே இல்லை!

ஜூன்-8 நானும் திருவாளர்கள் கே. சுப்பிரமணியம், தண்டாயுதபாணிப் பிள்ளை மற்றும் சில கலைஞர்களும் லண்டன் நகரின் சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு மாலையில் ''சினிரமா'' என்ற, உலகம் முழுவதுமுள்ள கலாச்சாரம், மற்றும் நாட்டு அமைப்பு இவைகளைக் காட்டும் முழு நீள கலர்ப்படத்தைப் பார்த்தோம். இந்தப்படத்தில் திரு கே. சுப்பிரமணியம் அவர்களின் மகள் பத்மா நாட்டியம் ஆடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கண்முன் நடப்பதைப்போல் அவ்வளவு தத்ரூபமாக இருக்கிறது சினிமா காட்சிகள்! இரவு நானும் தோழர்கள் சிலருமாக

லண்டன் நகரின் இரவு அழகை சுற்றிப் பார்த்தோம்.

ஜூன்-9 மாலையில் திரு. சுப்பிரமணியம், தண்டாயுதபாணிப் பிள்ளை மற்றும் கலைஞர்கள் எல்லோருடன் நானும் லண்டனிலுள்ள ஒய்.எம் சி.ஏ. கட்டிடத்தில் நடந்த விருந்தில் கலந்து கொண்டேன். இதன் மானேஜராகிய அலெக்ஸாண்டர் என்பவர் அங்குள்ள ஒய் எம்,சி.ஏ. மெம்பர்கள் அனைவரையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மானேஜர் அலெக்ஸாண்டர் மலையாள கிறிஸ்துவ வகுப்பைச் சேர்ந்தவர். சென்னை கோடம்பாக்கம் டிரஸ்ட்புரத்தில் சொந்தத்தில் வீடு வைத்திருப்பவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன்-10 பகல் உணவிற்குப் பின் நான் கோபால் மற்றும் நண்பர்கள் எல்லோருமாகப் புறப்பட்டு லண்டனிலுள்ள "டவர் பிரிட்ஜ்", "சக்கரவர்த்தி கோயில்," புராதனக்கோட்டை மற்றும் இவர்களைச் சுற்றிப் பார்த்து வந்தோம்.

செக்கோஸ்லோவகியா நடனப் பெண்களுடன் 'மேக்–அப்' சிவராமனும் (காமிராவுடனிருப்பவர்), நடனம் கே. ஜி. கோபாலும்.

ஜூன்-11 காலையில் நானும் திரு சுப்பிரமணியம் அவர்களும் லண்டனிலுள்ள இந்திய ஸ்தானிகரிடம் சென்றிருந்தோம்.

ஜூன்-12 காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை "ஸ்காலா" என்னும் பெரிய தியேட்டரில் ஒத்திகை நடைபெற்றது.

ஜூன்-13 லண்டனிலிருந்து தொண்ணூறு மைலுக்கு அப்பாலுள்ள "கெவண்டிரி" என்ற ஊருக்குப் புறப்பட்டுச் சென்றோம் எல்லோருமாக. இரவு அங்கு நடனக் கச்சேரி நடந்தது.

ஜூன்-14 தமிழ்ச் சங்கம் சார்பில் ஒய். எம். சி. ஏ. வில் நடந்த வரவேற்பு விருந்தில் கலந்து கொண்டோம் எல்லோரும். தமிழ் பேசும் அன்பர்கள் அனைவரும் ஒருங்கு திரண்ட இவ் விருந்தில், தமிழ் நாட்டில் இருப்பது போன்ற பிரமையே எனக்கு இருந்தது.

ஜூன்-15 நாங்கள் தங்கியிருந்த பர்னர்ஸ் ஹோட்டலைவிட ஒய். எம் சி. ஏ. ஹாஸ்டல் வசதியாக தென்பட்டதால் கோபால், நான் மற்றும் சிலரும் அங்கு சென்று தங்கினோம். அன்று இரவு "ஸ்காலா" தியேட்டரில் இந்திய ஸ்தானிகர் விஜயலட்சுமி

மாஸ்கோவில் உள்ள பெரிய மணியின் முன்பு
நமது கலைமணிகள்.

பண்டிட் அவர்கள் முன்னிலையில் கச்சேரி ஆரம்பிக்கப்பட்டது.

ஜுன்-16 இரவு வழக்கம்போல் ஸ்காலா தியேட்டரில் கச்சேரி நடந்தது.

ஜுன்-17 காலையில் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இரவு வழக்கம்போல்கச்சேரி நடந்தது.

ஜுன்-18 நானும் திரு கே சுப்பிரமணியம் அவர்களும் விச்சினர் மேக்கப் ஸ்டுடியோவுக்குச் சென்று அங்குள்ள மானேஜரைக் கண்டு பேசியதுடன், அங்கு செய்யப்படும் மேக்கப் சாமான்களைப் பற்றியும் ஆராய்ந்தோம். சில புதிய விஷயங்களை நான் தெரிந்து கொண்டேன். இரவு கச்சேரி நடந்தது.

ஜுன்-19 காலையில் லண்டனிலிருந்து இருபது மைலுக்கு அப்பாலிருக்கும் கோடக் பிலிம் பேக்டரிக்கு கலைஞர்கள் எல்லோரும் கோடாக் காரிலேயே புறப்பட்டுச் சென்று, அங்குள்ள அனைத்தையும் பார்த்தோடு அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்த விருந்திலும் கலந்து கொண்டோம். இரவு கச்சேரி நடந்தது.

ஜுன் - 20 காலையில் திரு கே. சுப்பிரமணியம் அவர்களுடன் எல்லோருமாக குழந்தைகள் படச்சங்கத்திற்குச் சென்றிருந்தோம். அங்கு மேயர் தலைமையில் எங்களுக்கு வரவேற்பு நடந்தது. அங்கு குழந்தைகள் படம் ஒன்றும் எங்களுக்குக் காட்டப்பட்டது. இரவு கச்சேரி நடந்தது.

ஜுன்-21 நானும் திரு முகுந்தனும் கிளாஸ்கோ புறப்பட்டோம் அழகான ரயிலில். முகுந்தன் யார் என்பதை சிறிது விளக்குகிறேன். இவர் பெங்களூரைச் சேர்ந்தவர். இன்ஜினியர் படிப்புக்காக ''கிளாஸ்கோ'' வந்திருப்பவர். இவர் வீணை வாசிப்பதிலும் பழக்கமுடையவராதலால் லண்டனில் நடக்கும் சில தமிழ் நிகழ்ச்சிகளுக்கு இவர் வீணை வாசிப்பது வழக்கம். குமாரி மாலாவுக்கும் வீணை வாசிப்பதற்காக இவர் லண்டனில் நியமிக்கப்பட்டார். இவர் லண்டன் முதல் மாஸ்கோ வரை அனைத்துக்கும் கூடவேயிருந்து வீணை வாசித்தார்.

ஜுன்-22 மாலை ஏழு மணிக்கு கிளாஸ்கோவிலுள்ள ஒய். எம். சி. ஏ. தியேட்டரில் கச்சேரி நடந்தது.

ஜுன்-23 காலை பத்து மணிக்கு நானும் திரு. முகுந்தனும்

கிளாஸ்கோவிலிருந்து அழகு ரயிலில் புறப்பட்டு மாலை 5-30க்கு லண்டன் வந்து சேர்ந்தோம்.

ஜூன் - 24 காலையில் நானும் நண்பர்களுமாக லண்டனிலுள்ள வீதிகள் சிலவற்றைச் சுற்றிப் பார்த்தோம்.

பஸ்ஸில் பிரயாணம். 'வேண்டும்' என்ற பாட்டு இங்குதான் பாடப்பட்டது.

ஜூன்-25 இரவு ஸ்காலா தியேட்டரில் நாட்டியக் கச்சேரி நடந்தது.

ஜூன்-26 காலையில் லண்டனை விட்டு எல்லோரும் புறப்பட்டு விமானம் மூலம் செக்கோஸ்லோவக்கியா சென்றோம். விமான நிலையத்தில் நாங்கள் இறங்கியதும் அங்குள்ள குழந்தைகளும் பெரியோர்களும் எங்களிடம் காட்டிய அன்பை விவரிக்க இயலாது. சில குழந்தைகள் அவர்களிடமிருந்த அந்நாட்டு காசையும் சில பெண் குழந்தைகள் தலையில் கட்டியிருந்த ரிப்பன் முதலியவற்றையும் பரிசாகத் தந்தார்கள் எனக்கு. என் உள்ளமே கலங்கி விட்டது அப்போது. ஏனென்றால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்திய சாமான்களோ, நாணயமோ இல்லை என்னிடத்தில். அப்படியும் என்னிடமிருந்த லண்டன் நாணயங்களை அவர்களுக்கு வழங்கிவிட்டு வந்தேன். அன்றிரவு மாஸ்கோவா என்னும் ஹோட்டலில் தங்கினோம். அங்கு ஹோட்டலுக்கு வந்ததும் அதன் வாசலில் ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தினர் செய்த அபிநயத்தில் நான் ஆச்சரியப்பட்டு விட்டேன். அது நாட்டிய அபிநயமில்லை. அவர்களுடைய பாஷையே அந்த அபிநயம். இதைப் பார்க்க அதிசயமாகவே இருந்தது, எனக்கு. இதைப்பற்றி நான் விசாரித்தேன் மற்றவர்களிடம், அவர்கள் அனைவரும் யுத்தத்தில் பீரங்கியால் தாக்கப்பட்டு ஊமையானவர்கள் என்றும் அத்துடன் உண்மையான ஊமைகளும் சேர்ந்திருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இவர்கள் தொழில் செய்வதற்காகவே ஒரு பெரிய மில் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜூன்-27 ஸ்திராஸ் நிட்ஸ்சே என்ற ஊரில் நடக்கும் நாட்டியத் விழாவில் எல்லோரும் கலந்து கொண்டோம். அங்கு நடனத்திற்கென்று பல மேடைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மேடை ஒன்றில் குறத்தி நடனம் ஒத்திகை பார்த்தோம். மாலையில் அங்கு எல்லா நாட்

கிரெம்லின் மாளிகை முன்பாக, மாஸ்கோ பள்ளி மாணவிகளுடன்

டினரும் அவரவர்களது கிராமிய நடனத்தை ஆடிக் காட்டினார்கள் மேடையில் நமது நாட்டுப் பண்பைக்காட்டும் குறத்தி நடனமும் அதில் இடம் பெற்றது. அன்று நடந்த நடனங்களில் நமது குறத்தி நடனத்திற்குத் தான் முதல் பரிசு.

ஜூன்–28 முன் தினம் நடந்தது போல் அதே மேடையில், அதே நேரத்தில் எல்லா நாட்டினரும் நாட்டியமாடினர் நமது குறத்தி நடனமும் ஆடப்பட்டது. இங்கு ஒரு புது அனுபவம், விழா முடிவில் எல்லா நாட்டு கலைஞர்களுக்கும் பூச்செண்டு வழங்கப்படும். உடனடியாக அவர்கள் நாட்டு பாடல் முழங்கும் ஒலி பெருக்கியில். எல்லா கலைஞர்களும் ஆண்களும் பெண்களுமாகக் கலந்து ஆங்கிலேய நடனம் ஆடவேண்டும். முதன் முதலாக ஆங்கிலேய நடனம் நான் ஆடியது இங்கு தான். இது ஒரு புதிய அனுபவமாகத் தான் இருந்தது எனக்கு.

ஜூன்-29 காலை பதினொரு மணிக்கு ''ஸ்திராஸ் நிட்ஸ் சே''யிலிருந்து புறப்பட்டு எல்லோருமாக ''ஸ்திவியாட்ச்'' என்ற நகருக்கு மாலை ஆறு மணிக்கு வந்து சேர்ந்தோம். இரவு எட்டு மணிக்கு நாட்டியக் கச்சேரி நடந்தது.

ஜூன்-30 பகல் ஒரு மணிக்கு ஸ்திவியாட்சைவிட்டு புறப்பட்டு ''ஞாஸ்னக்'' என்ற ஊருக்கு காரில் சென்றோம். இரவு எட்டு மணிக்கு கச்சேரி நடந்தது. இங்கு நான் தினப்படி வாசிக்கும் பம்பையை மட்டுமல்லாமல், எங்கள் குழுவில் மிருதங்கம் வாசித்துக் கொண்டிருக்கும் திரு. நாகப்பனும் நானுமாக மிருதங்கமும் டோலக்கும் முதன் முதலாக தனி யாவர்த்தனமும் வாசித்தோம். இதற்கு மக்கள் பாராட்டு மேன் மேலும் உயர்ந்தது இரவு கச்சேரி முடிந்து நான் வெளியில் வரும் சமயம் எதிரே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அங்கு ஒரு அதிசயம். நம் நாட்டிற்கு அதிசயம்தான். அங்கு சர்வ சாதாரணம். அப்பெண்மணி அன்போடு என்னைக் கட்டித்தழுவி முத்தம் கொடுத்தாள். எதிர்பாராத நிகழ்ச்சி!

ஜூலை-1 பகல் ஒரு மணிக்கு எல்லோருமாக அழகிய காரில் கோஷிஸ்ஸே என்ற ஊருக்குப் புறப்பட்டோம். போகும் வழியில் காரிலேயே அமைக்கப்பட்டிருந்த மைக்கில் ஒவ்வொருவரும் பாடவேண்டுமென ஏற்பாடாகியிருந்தது. அதன்படி ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணும் பாட ஆரம்பித்தார்கள். முடிவில் நான் பாடவேண்டுமென குரல்கள் எழும்ப ஆரம்பித்தன. மைக்கின் முன்னால் சென்றேன். சென்று பிரசங்கம் செய்வது போல், ''பெரியோர்களே! தாய்மார்களே மன்னிக்கவேண்டும். எனக்குப் பாடத்தெரியாது'' என்றேன் உடனடியாக குமாரி மாலா அவர்கள் ''பொய் சொல்லக்கூடாது'' என்று எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் பாடித்தான் ஆகவேண்டுமென்றார்கள். இரண்டொரு நிமிஷத்திற்குப்பின் ''வேண்டும் நமக்கு வேண்டும்'' என்ற பல்லவியை ஆரம்பித்தேன். இரண்டு முறை அதையே பாடினேன். மற்ற கலைஞர்கள் ''எது வேண்டும்?'' என்று பொறுமையை இழந்து கத்தினார்கள். ''நல்ல பண்புள்ள பெண்கள் பாரத நாட்டிற்கு வேண்டும் - கண்ணெனக் கணவரைக் கருதிடல் வேண்டும்- அன்புடன் அன்னை போல ஆதரவுதர வேண்டும்'' என்ற அடிகளைப் பாடி முடித்துவிட்டு எழுந்ததும் எல்லோருக்கும் அளித்ததுபோல் எனக்கும் பூச்செண்டு அளித்தார்கள். உடனடியாக யதுகிரி அம்மாள் அவர்கள் ''கற்பனை மிக அபாரம்'' என்றார்கள். பிறகு ஹோட்டல் 'எவரோப்பா'வில் வந்து தங்கினோம்.

ஜூலை-2 பகல் இரண்டு மணிக்கு கோஷிஸ்ஸேயிலிருந்து புறப்பட்டு மாலை 5-30 மணிக்கு சார்

நண்பர்கள் சூழ சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் கோலாகலமாக கலைஞர்கள் வாழ்த்தி, வழி யனுப்பப்பட்டார்கள்.

நதிஸ்ஸா என்ற ஊர் ரயிலடிக்கு ஸ்பெஷல் ரயிலில் புறப்பட்டோம் ரஷ்யாவிற்கு. இடையில் 'ஜோப்பு' என்ற ரஷ்ய எல்லையில் இறங்கி இரவு அங்கேயே தங்கினேம்.

ஜூலை-3 இரவு பதினேரு மணிக்கு ஜோப்பிலிருந்து திருப்பும் ரயிலிலேயே ரஷ்யாவிற்குப் புறப்பட்டோம்.

ஜூலை-4 அதே அழகு ரயிலில் ''சோவியத் டூரர்'' குழுவுடன் அன்பாகவும் சந்தோஷமாகவும் உரையாடிக்கொண்டு பிரயாணம் செய்தோம்.

ஜூலை-5 மாலை சுமார் நாலு மணிக்கு எல்லோரும் மாஸ்கோ வந்தடைந்தோம். இரவு பதினேரு மணிக்கு லெனின், ஸ்டாலின் கல்லறைக் காவலர்களின் அற்புதத்தைப் பார்த்தோம். இரவிலும் பகலைப்போல் காட்சியளித்தன அவை.

ஜூலை-6 பகல் பதினேரு மணிக்கு எல்லோருமாக அழகிய காரில் புறப்பட்டுமாஸ்கோ யூனிவர்சிடி முதலிய பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். பகல் ஒரு மணிக்கு இந்திய ஸ்தானிகராலயத்தில் எல்லோரும் விருந்தருந்தினேம். இரவு எட்டு மணிக்கு ரஷ்ய சர்க்கஸைப் பார்த்தோம். வர்ணிக்க முடியாத செயல்கள் பல செய்தனர் அந்த சர்க்கஸ் நிபுணர்கள், மகத்தான சாதனை!

ஜூலை-7 சுற்றிப்பார்க்கும் வாய்ப்புக்கு தடங்கல்ஏற்பட்டுவிட்டது. மாலையில் மாஸ்கோ ரேடியோவில் பணியாற்றி வரும் நம் நாட்டு திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளை என்பவரைக்கண்டு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். இரவு மாஸ்கோ நகரில் முதன் முதலாக ஆர்ட் ஒர்க்ஸ் சென்டிரல் ஹவுஸ் என்ற தியேட்டரில் எட்டரைக்குக் கச்சேரி ஆரம்பமாகியது.

ஜூலை-8 பிற்பகல் டூஷி என்ற ரஷ்யப் பெண்மணியோடு சென்று லெனின், ஸ்டாலின் சடலங்களைப்பார்வையிட்டோம். பின்பு மியூஸியம் மற்றவைகளைப் பார்வையிட்டோம். இரவு வழக்கம்போல் கச்சேரி நடந்தது.

ஜூலை-9 காலையில் எல்லோருமாக 'சோவியத் இந்தியா பிரண்ஷிப்' கழகத்திற்குப் போனேம். அங்கு எல்லோரையும் கண்டு பேசிவிட்டு, அவர்கள் அளித்த சிறிய விருந்திலும் கலந்துகொண்டோம். விருந்துக்குப் பின் மாஸ்கோவிலிருக்கும் இந்திய ஸ்தானிகர் மேனன் அவர்களின் மாளிகைக்குச் சென்ளேம். விருந்துக்குப்பின் மாலையில் மாஸ்கோ எக்ஸிபிஷனைச் சுற்றிப் பார்த்தோம். இரவு ஏழுக்கு எக்ஸிபிஷனில் கச்சேரி நடந்தது. கச்சேரி முடிந்து இரவு ஒரு மணிக்குப் பிறகு மாஸ்கோ சுரங்க ரயில் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தோம் உலகின் பெரிய அதிசயங்களில் இதை ஒன்ருகச் சொல்லலாம். பூமிக்கடியில்தான் எவ்வளவு பெரிய ரயில்வே நிலையத்தைக் கட்டியிருக்கிருர்கள்!

ஜூலை-10 காலை பத்து மணிக்கு மாஸ்கோ விமான நிலயத்திற்கு வந்தோம். பிற்பகல் ஒருமணிக்கு 'ஜெட்' விமானத்தில் புறப்பட்டு, மாலை நான்கு மணிக்கு தாஷ்கண்டு வந்தடைந்தோம். அங்கு உஸ்பெக் நாட்டியக் கலைஞர்கள் நல்லதொரு வரவேற்பை எங்களுக்கு அளித்தனர்.

ஜூலை-11 'தாஷ்கண்டு மியூஸிக் ஹால்' என்னும் தியேட்டரில் பகல்ஒரு மணிக்கு ஒத்திகைநடந்தது. ஒத்திகைக்குப்பின் எனக்கும் உஸ்பெக் டேப் வாத்தியக்காரருக்கும் அன்பாக வாத்தியப் போட்டி நடந்தது. அதாவது பம்பையும் டேப்பும். என் வாசிப்பில் அங்கு கூடியிருந்த மக்களனைவரும் திருப்தியைச் செலுத்தினுர்கள். உடனடியாக உஸ்பெக் டேப் வாத்தியக்காரர் அவர்கள் வழக்கப்படி தான் அணிந்திருந்த குல்லாவைக் (உஸ்பெக் தொப்பியை) கழற்றி எனக்கு அணிவித்து மகிழ்ந்தார்.

இதற்குப்பின் கூட்டத்தில் நின்று ரஸித்துக்கொண்டிருந்த கங்கா என்னும் அழகிய உஸ்பெக் நடனமாது என்னை ஒரு நந்தவனத்திற்கு அழைத்துச் சென்ருள். ஸ்டாலின் உருவச் சிலை முன்பு அவள் விருப்பப்படி இருவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். இரவு ஒன்பது மணிக்கு மேற்படி தியேட்டரில் வழக்கம்போல் கச்சேரி நடந்தது.

ஜுலை-12 தாஷ்கண்டு நகரைச் சுற்றிப் பார்த்தோம். எல்லோருமாக. இரவு வழக்கம் போல் அதே தியேட்டரில் கச்சேரி நடந்தது.

ஜுலை-13 மாலை கடைவீதியைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். இவ்விடத்தில் பணியாற்றி வரும் முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்த ஒரு கிராமப் பெண் உஸ்பெக் பாடல் ரஷ்யப் பாடல் பாடியுள்ள மூன்று ரிக்கார்டுகளும், டைரி, பர்ஸ், லெனின் எம்பளம் போன்ற பல சாமான்களை எனக்குக் கொடுத்தாள். பண்பும் கலா ரசனையும் மிக்க மக்கள் இவர்கள். இந்தியர் என்ருல் அவர்களுக்கு அத்தனை ஆசை. இரவு கச்சேரி நடந்தது.

ஜுலை-14 பகல் பனிரெண்டு மணிக்கு மொழிபெயர்ப்பாளரோடு நான், திரு முகுந்தன், எங்கள் குழுவில் ஆர்மோனியம் வாசிக்கும் சேதுபதி மூவரும் உஸ்பெக் மியூசிக் இன்ஸ்டியூட்டிற்குச் சென்ருேம். அங்கு சிலர் அவர்களது வாத்தியங்களை வாசித்துக் காண்பித்தார்கள். மாலையில் நகரத்தை அழகு செய்யும் ஒரு நிலையத்துக்குச் சென்று நகரத்தை அழகு செய்யும் முறையெல்லாம் அறிந்து கொண்டு வந்தேன். இரவு வழக்கப்படி கச்சேரி நடந்தது.

ஜுலை-15 இரவு நடந்த கச்சேரியில் முதன் முதலில் குமாரி மாலா அவர்கள் ஒரு பாட்டுப் பாடினுர்கள். மக்களின் விருப்பத்

உலகப்பிரசித்தி
பெற்ற தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்கு
குணமளிக்கும்

பெப்ஸ்
வில்லைகள்
உட்கொண்டு
பிராங்கைடிஸ்
விரைவில் அகன்றது.

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப். புண். பிராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.

பெப்ஸ்
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளு
க்குக் குணம்
அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-56-TAM

சோல் ஏஜெண்டுகள்:

தாதா & கோ.,
86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

திற்கிணங்க மூன்று முறை அப் பாட்டைத் திருப்பிப் பாடினார்கள். அன்று குறத்தி நடனத்தையும் மாஸ்கோ ஸ்டுடியோக்காரர்கள் படம் பிடித்தார்கள், வர்ணத்தில்.

ஜுலை-16 மாலையில் 'நடனமாடினார்' என்ற பதத்தையும் 'சாரி' நடனத்தையும் படம் பிடித்தார்கள் மாஸ்கோ ஸ்டுடியோக்காரர்கள். இரவு நடந்த முழு கச்சேரியும் 'டெலிவிஷன்' மூலம் பதிவு செய்யப்பட்டு, அப்பொழுதே அந்நாட்டு மக்கள் அனைவரும் பார்க்கும்படியாகச் செய்தனர்.

ஜுலை-17 தாஷ்கண்டில் இரவு எட்டு மணிக்கு உஸ்பெக் நாடகம் பார்த்தோம். அது சமயம் நான் தனியே ஒப்பனை அறைக்குச் சென்று அங்கு செய்யும் ஒப்பனைகளைப் பார்வையிட்டதோடு, அந்த ஒப்பனையாளரிடம் நெடுநேரம், ஒரு ஆங்கிலம் தெரிந்த பெண்மணியின் உதவியால், பேசிக்கொண்டிருந்தேன். பிறகு அந்த ஒப்பனையாளர் தன் அன்பளிப்பாக பல மாஸ்கோ ஒப்பனைப் பொருள்களை எனக்குத் தந்தார். அன்பு கனிந்த உள்ளத்தோடு நடிகர்களனைவரும் விடை தந்தனுப்பினர் எனக்கு. இரவு பனிரெண்டு மணிக்கு சமர்கண்டிற்கு, தாஷ் கண்டிலிருந்து விமானம் மூலம் கிளம்பி ஒரு மணிக்குச் சென்றோம் இரவு ஒரு மணி ஆகியும் சமர்கண்டு மக்கள் பூச்செண்டோடு விமான நிலையத்தில் எங்கள் வருகைக்காகக் காத்திருந்து வரவேற்பளித்தனர். என் நெஞ்சில் இந்தக் காட்சி என்றுமே மறையாது.

ஜுலை-18 பிற்பகல் பனிரெண்டு மணிக்கு எல்லோருமாகப் புறப்பட்டு சமர்கண்டில் சரித்திர சம்பந்தப்பட்ட தைமூர் மாளிகை மற்றும் பலவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஹோட்டலுக்கு வந்தோம். இரவு திறந்தவெளி அரங்கில் கச்சேரி நடந்தது. கச்சேரி முடிந்ததும் உடனே விமான மூலம் தாஷ்கண்டை அடைந்தோம்.

ஜுலை-19 இரவு நவாய் என்னும் தியேட்டரில் நடைபெற்ற ரஷ்யன் பேலே நடனத்திற்கு எல்லோருமாகச் சென்றோம். அங்கு நடனமத்தியில் நான் தனியாக கிரீன் ருபிற்குச் சென்றேன். அந்த பேலே முதலாளியிடம் ஆங்கிலம் தெரிந்த ஒருவரின் துணையோடு அறிமுகப்படுத்திக் கொண்டேன். என் விருப்பத்திற்கிணங்க முதலாளியே என்னை அன்போடு அழைத்துச் சென்று ஒப்பனைத் தளம, உடை அணியும் அறை டோப்புகள் செய்யுமிடம் எல்லாவற்றையும் காண்பித்தார். அவர்கள் டோப்புகள் செய்யும் முறையிலேயே நானும் செய்து காண்பித்தேன். அவர்கள் மிக்க சந்தோஷப்பட்டு டோப்புகள் செய்யும் ஊசி முதலியவற்றை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்கள்.

ஜுலை-20 தாஷ்கண்டில் நண்பர் பலரைப் பார்த்து இந்தியா திரும்ப விடைபெற்றுக் கொண்டேன். அவர்களும் பிரியா விடை தந்து அனுப்பினார்கள். அவர்கள் கண்களில் நீர் திரையிட்டு நின்றது. இப்போதும் என் கண்முன் தெரிகிறது.

ஜுலை-21 காலை 8-15 மணிக்கு தாஷ்கண்டை விட்டு ஜெட் விமானத்தில் புறப்பட்டோம், தாய் நாட்டை நோக்கி. பகல் பதினோறு மணிக்கு புதுடில்லியை அடைந்தோம். சுங்கப் பரிசோதனைக்குப் பின் ஹோட்டல் ஜனபத்தில் வந்து தங்கி, மாலை ஐந்துக்கு கிராண்ட்ட்ரங்க் எக்ஸ்பிரஸில் சென்னை நோக்கிப் புறப்பட்டோம்.

ஜுலை-22 ரயிலிலேயே இரவும் பகலும் பொழுதைப் போக்கி வந்தோம், பிரயாணத்தின் சிந்தனையோடு.

ஜுலை-23 மாலை மூன்றரை மணிக்குநடிகர் சங்கக்காரியதரிசி திரு. டி. வி. நாராயணசாமி, திரு. கே. சுப்பிரமணியம், எம். ஜீ. ஆர். மன்றத்தினர் மற்றுமுள்ளோர் சென்டிரல் ஸ்டேஷனில் எங்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

★

நீலா புரொடக்ஷன்ஸ்
யானை வளர்த்த
வானம்பாடி
காட்சிகள்
PSR









நீலா புரொடக்ஷன்ஸாரின் 'யானை வளர்த்த வானம் பாடி' திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த வனப்படம். குமாரி, ஸ்ரீராம், நம்பியார், பிரண்ட் ராமசாமி, வி. கே. சரஸ்வதி, எம். எஸ். கருப்பையா, முதலியோர் நடித்திருக்கிருர்கள். மெர்ரிலாண்ட் சுப்பிரமணியம் டைரக்ட் செய்திருக்கிருர்.


அருணாசலம் ஸ்டுடியோஸ்
காவேரியின்
கணவன்
காட்சிகள்



அருணாசலம் ஸ்டுடி
யோஸின் தமிழ்ப்
படத்திற்கு 'காவே
ரியின் கணவன்''
என்று பெயரிட்
டிருக்கிறார்கள்.
கதை, வசனம்,
டைரக்ஷன் ஏ.கே.
வேலன்.

துரைராஜா

நாம் பல ஆங்கிலப் படங்களைப் பார்க்கிறோம். அவற்றில் வரும் சிறு சிறு பாத்திரங்களுக்கும் பிரதான்யமகொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ்ப் படங்களில், கதாநாயகன், கதாநாயகி, வில்லன், வில்லி, ஹாஸ்ய நடிகன், ஹாஸ்ய நடிகை இந்த ஒரு சிலருக்குத்தான் மேக்-அப் முதல் க்ளோஸ்-அப் வரை அக்கறையோடு நடக்கும். ஆனால் சிறு பாத்திர தாரிகளைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அப்படிக் கொடுக்கப் படாததால் ரசம் குன்றிவிடும் காட்சிகளைப் பல படங்களில் நாம் பார்த்திருக்கிறோம். இதனால் பல திறமைசாலிகள் தகுந்தபடி ஸ்தானம் பெறாமலேயே இருந்து வருகிறார்கள். இந்த இதழில் ரசிகர்களுக்கு அறிமுகமாகும் துரைராஜாவும் அவர்களில் ஒருவர்.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் பிழைப்பை முன்னிட்டுச்சென்ற லக்ஷக்கணககான மக்களில் ஜோசப் குமாரசாமி பிள்ளையும் ஒருவர். அவருக்கும் அன்னமரியம்மாளுக்கும் பிறந்த ஏழு குழந்தைகளில் ஒருவராக 1929-ம் ஆண்டில் இலங்கையில்பிறந்தார் துரைராஜா. இலங்கை தேயிலைத் தோட்டத்தில் சுப்பரின்டெண்டெண்ட்டாகப் பணியாற்றும் ஜோசப் குமாரசாமி பிள்ளை, தன் மகன் துரைராஜையும் இலங்கை கூலிகளுக்கான தமிழ்ப் பள்ளியில் படிக்க வைத்தார். 1937-ல் இந்தியா வந்த துரைராஜா இலங்கைக்குத் திரும்ப விரும்பவில்லை. காரைக்குடியில் தனது அத்தையின் கணவரும் ஹோமியோபதி டாக்டருமான தவமணி பிள்ளையிடம் கம்பவுண்டராக வேலைக்கமர்ந்தார்.

பிறகு டி. கே. எஸ். சகோதரர்களின் கம்பெனியிலும் தனி நாடகக் கம்பெனிகளிலும் பணியாற்றிவிட்டு பிறகு மனம் வெறுத்து இலங்கை திரும்பத் தீர்மானித்தார். தூத்துக்குடி சென்று தோணியில் இலங்கைக் கரையை அடைந்தார். ஆனால் டிக்கட் இன்றி பிரயாணம் செய்ததால் மீண்டும் இந்தியக் கரைக்குக் கொண்டுவந்து விடப்பட்டார். அவரது தாயார் காலமாகி விடவே, அவரது இளைய சகோதரியையே மணந்தார் குமாரசாமி. சித்தியுடன் இலங்கை சென்று காட்டில் வேட்டையாடுவதும் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதுமாகக் காலங்கழித்துவந்தார் துரைராஜா.

1942-ம் ஆண்டு காரைக்குடி திரும்பிய துரைராஜா மீண்டும் கம்பவுண்டராக அமர்ந்தார்.

''பதிபக்தி''யில் துரைராஜா

சக்தி பிரசுரத்தை வை. கோவிந்தன் சென்னையில் துவக்கியதும் துரைராஜா அவரிடம் சேர்ந்தார். சுமார் ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். 'ஜெயம் மனதே' படத்தில் அவருக்கு அப்போது தான் சந்தர்ப்பம் கிடைத்தது. பிறகு அவர் தன் முயற்சியால் பதி பக்தி, அன்னையின் ஆணை, திருமணம், தோழன், மணாளனே மங்கையின் பாக்கியம், கன்னியின் சபதம், வணங்காமுடி, தேடிவந்த செல்வம் முதலிய படங்களில் சிறு பாத்திரங்களில் நடித்தார். கத்திச் சண்டை கற்று படங்களில் கத்திச் சண்டைக் காட்சிகளில் நடித்தார்.

சென்னையிலிருந்து யுத்த நெருக்கடி காரணமாக காலி செய்து காரைக்குடிக்குச் சென்றிருந்த 'சக்தி' பிரஸ் முதலாளி வை. கோவிந்தன் அவர்களைச் சந்தித்தார் துரைராஜா. அவரிடம் அச்சகத்தில் ஆறுமாத காலம் பணியாற்றிய பின் வைரம் அருணசலம் செட்டியார் கம்பெனியில் துரைராஜா சேர்ந்தார். நாஞ்சில் நாடு ராஜப்பா அவருக்கு நாடக ஆசிரியராக இருந்தார். நாடகக் கம்பெனியில் இருந்தாரே ஒழிய தகுந்த சந்தர்ப்பம் தரப்படாததால் விலகி விட்டார்.

தற்போது ஸ்ரீவள்ளி, பாரகனின் மூன்ருவது தயாரிப்பு, தாய் மகளுக்குக் கட்டிய தாலி, கொஞ்சும் சலங்கை, அருணசலம் பிக்சர்ஸ் படம், இளையகன்னி, பிறந்த நாள் முதலிய படங்களில் சிறு பாத்திரங்களில் தோன்றி நடித்து வருகிருர் துரைராஜா.

துரைராஜாவுக்கு நிறைய ஆர்வமிருக்கிறது. திறமை இருக்கிறது. தகுந்த சந்தர்ப்பமளிக்கப்பட்டால் கலைவளர்ச்சிக்கு அவரும் ஒரு காரணமாக இருப்பார்.

— ச. கு.

காஷ்மீர்-குஸூம்

சேவல் மார்க்

ஸாண்டலக்ஸ்

நஞ்சன்கூடு பல்பொடி மற்றும் 54. குடும்ப மருந்துகள்

வைத்தியர் உதவி விரும்பினால் எழுதியும் சிகிச்சை பெறலாம்.

கஸ்தூரி பத்தி, சந்தன முகப் பவுடர், அரகஜா, கதம்ப அத்தர், சுவாக் அத்தர், ஜவ்வாது, ப்ளவர் டஸ்டு இவை நறுமணம் ஏற்றி ஆடைகளைக் காக்க உதவுபவை.

சோல் ஏஜண்டு : யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

கேள்வி-பதில்

ஆர். மர்ஸ், பாண்டி

எம்.ஜி.ஆருக்கு எத்தனை வயதுகள் ஆகிறது?

பொன்விழா கொண்டாட இன்னும் ஆறு ஆண்டுகள் இருக்கின்றன.

டி. எஸ். சுகவனம், சேலம்

நமது படாதிபதிகள் அடிக்கடி ஐரோப்பிய பயணத்தை மேற்கொள்கிறார்களே, ஏன் ஆப்பிரிக்க பயணத்தை மேற்கொள்ளவில்லை?

நடிகர்களிலேயே சிலர் ஆப்ரிக்கராக இருப்பதை இங்கேயே அவர்கள் பார்த்து இருக்கலாம்.

இலங்கையிலுள்ள ஸி.ஏ. கார்டினர் படத்தயாரிப்பாளரா, விநியோகஸ்தரா, ஸ்டூடியோ முதலாளியா?

உங்கள் கேள்வியிலிருப்பவற்றுடன் பல தியேட்டர்களின் முதலாளியும்கூட என்பதைச் சேர்த்துக் கொண்டால் சரியாகிவிடும்.

ஏ. நவராஜ், பெல் மதுளை, இலங்கை

இந்தியாவில் திரையிடப்படுவதற்கு முன்பாக இலங்கையில் சர்க்கஸ் சுந்தரி என்ற படம் திரையிடப்பட்டு விட்டதே. எப்படி?

பூ, இதைச் சொல்ல வந்து விட்டீர்கள்! உங்கள் நாட்டில் திரையிடப்பட்ட 'உண்மையின் வெற்றி' பத்து ஆண்டுகளாகியும் இன்னும் இங்கு வரவில்லையே, அது தெரியுமா உங்களுக்கு!

கு. சி. ர. ஸ்ரீநிவாசன், திருக்கணும்பி

எம். என். நம்பியார் ஆங்கிலப் படத்தில் நடித்திருக்கிறார் என்று நானும், என் நண்பர் அல்ல என்றும் சொல்லுகிறோம். பந்தயமும் வைத்திருக்கிறோம். யாருக்கு வெற்றி கிடைக்கும்?

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்துள்ள 'ஜங்கிள்' என்ற வனப் படத்தில் நம்பியார் நடித்துள்ளார்! எனவே வெற்றி உமக்குத்தான்.

எம். தி. பிசிறி, இலங்கை

தங்கவேலுவுக்கு குழந்தைகள் இருக்கிறதா?

சமீபத்தில்தான் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது.

பி. ஆர். சின்னையா, இலங்கை

வைஜயந்திமாலா சுற்றுப் பிரயாணம் செய்யும்போது எதைப் பற்றி நினைத்துக்கொண்டு சென்றார்?

தனது புகழையும் பெயரையும் மட்டும்!

அ. சம்பந்தன், சென்னை

நடிப்புத்துறையில் மூவேந்தர்கள் என்று போற்றப்படுபவர்களில் நடிப்பில் முதல் 'வேந்தன்' யார்?

காட்டுராஜாவின் பெயரைக் குரலில் கொண்டிருப்பவர்.

எஸ். எஸ். நாதன், காரைக்குடி

"கல்யாண பரிசு" படத்தை இளைஞரான ஸ்ரீதர் டைரக்ட் செய்திருக்க முடியுமா?

சந்தேகமில்லாமல். முழுக்க முழுக்க அவர் டைரக்ஷனில் வளர்ந்ததுதான் "கல்யாண பரிசு" ஸ்ரீதர் ஒவ்வொரு துறையிலும் திறமையை வெளிப்படுத்திய பின்தான் டைரக்டரானார்.



''இதோ பார், கோபிக்காமல் சொல்வதைக்கேள்'' — ஸ்ரீஜெய மாருதி பிக்சர்ஸ் ''படிதாண்டா பத்தினி''யில் புதுமுகம் லலிதா, சாந்தா.

கண்ணன், மதுரை

சிவாஜி கணேசனை பற்றி எம். ஜி. ஆர். என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறார்?

தனது நண்பர்களில் ஒருவர் என்றும் இந்தியாவின் நிகரற்ற நடிகர் எனவும் கருதுகிறார்.

'கட்டபொம்மன்' லண்டனில் திரையிடப்பட்டதைப் போல் 'நாடோடி மன்னன்'னும் அங்கு திரையிடப்படுமா?

உங்கள் ஆவல் விரைவில் நிறைவேறும். லண்டனிலுள்ள தமிழ்ச் சங்கத்தின் சார்பில் இப்படத்தை அக்டோபர் மாதம் திரையிட்டுக் காட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வி. துரைராஜா, கண்ணம்பாடி

இந்தியாவிலேயே ஒரு படத்திற்கு அதிகமாகப் பணம் வாங்கும் நடிகர் யார்?

நீர் என்ன வருமானவரி அதிகாரியா, அல்லது......? ஏனென்றால் ஒரு பெண்ணின் வயதையும், ஒரு மனிதனின் வருமானத்தையும் பற்றி விசாரிப்பது அநாகரிகமான வழக்கங்கள். ஆணாகட்டும் பெண்ணாகட்டும்—யாரும் தன்னுடைய உண்மையான வருமானத்தையும் வயதையும் வெளியே சொல்லிக் கொள்ள மாட்டார்கள். என்ன செய்வது? இன்றைய உலகின் 'பேஷன்' அது.

கே. கமலம், குமாரபாளையம்

'சிவகெங்கைச் சீமை'யில் கமலா லக்ஷ்மண் ஆடியது நடனமா? அல்லது பேயாட்டமா?

''ஊழிக்கூத்து அது. ஒரு நாட்டின் அழிவை முன்கூட்டியே காட்டும் வகையில் இப்படிப் படத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது'' என்று கண்ணதாசன் கூறுகிறார்.

வி. எஸ். மணியம், தஞ்சமாலிம், மலாயா

எம். ஜி. ராமச்சந்திரனையும், ரஞ்சனையும் கத்திச் சண்டை போடச் செய்தால் யார் வெற்றி பெறுவார்கள்?

படத்திலானால், இருந்தால், கதாநாயகனாக இதில் யார் நடிக்கிறாரோ அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். படத்திலல்லாது வேறு இடத்தில் இவர்கள் சண்டை போட மாட்டார்கள். பணம் யாரும் தரமாட்டார்களே இதற்கு!

பி. சரோஜாதேவிக்குக் கடிதம் எழுதினால் பதில் எழுதுவாரா?

மாட்டார். புதுப்படங்களுக்கு கையெழுத்துப் போடுவதற்கே அவருக்கு நேரம் கிடைக்கவில்லையே!

வசனகர்த்தா, டைரக்டர் ஸ்ரீதரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

புதுமையும் ஆர்வமும் பூத்துக் குலுங்கும் ஒரு திறமை படைத்த அதிருஷ்டசாலி.

தற்போது அதிகப் படங்களில் நடித்து வரும் நடிகர்கள் யார்?

அதிருஷ்டத்தின் உச்சாணியில் இருப்பவர்கள்!

சினிமா நடிகை பத்மினி படவுலகத்தை விட்டு விலகப் போகிறாராமே, உண்மைதானா?

திருமணத்திற்குப் பிறகு அவர் விலகப் போவது உண்மைதான்.

Agfa

35mm and 16mm
Raw Cinefilm
for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS:
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE
POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B. 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors:

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

கலாநிதி பிலிம்ஸின் ''விநாயக சதுர்த்தி'' படத்தில் என். டி ராமராவ்-ஜமுனா.

என். பரதன், கொச்சி

பிரேம் நஸீரைப் பற்றி சில வரிகள் கூற முடியுமா?

தீட்டப்படாத வைரமாக இன்னும் இருந்து வருகிறார்.

பி. சண்முகம், நிவிட்டிகலை, இலங்கை

சாவித்திரிக்குக் கார் ஓட்டத் தெரியுமா?

கார் ஓட்ட மட்டுமல்ல; ஹாரனையும் ஜோராக அடிக்கத் தெரியும் என்பதை 'அன்னையின் ஆணை'யில் அவர் காட்டவில்லையா?

ஆர். முத்துஸ்வாமி, திண்டுக்கல்

டைரக்டர் கே. சுப்ரமண்யத்தின் விலாசம் என்ன?

முதல் மெயின் ரோடு, காந்தி நகர், சென்னை-20 என்ற விலாசத்தில் அவர் இருக்கிறார்.

பெ. லக்ஷ்மிநாராயணன், திருக்கடையிலூர்

கவிஞர் கண்ணதாசன் முதலில் வசனம எழுதிய படம் எது?

இல்லறஜோதி. மாடர்ன் தியேட்டர்ஸ் படம் இது.

சாமுவேல், திண்டிவனம்

ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் நம் படவுலகில் இருக்கிறார்களா?

பலர் இருக்கிறார்கள். லேனா, ஸ்ரீராமுலு நாயுடு, பி நாகிரெட்டி, நடிகை அஞ்சலிதேவி மற்றும் பலர் ஜோதிடத்தில் அபார நம்பிக்கை கொண்டவர்கள். குறிப்பாக படத்திற்கு பூஜை போடுவது முதல், வெளியீட்டு தேதி வரை ஜோதிடர் குறிக்கும் நாளை ஸ்ரீராமுலு நாயுடு இன்றும் கடைப்பிடிக்கிறார்.

டி. எஸ் பிரான், அய்யம்பேட்டை

வயதில் உயர்ந்த நடிகை, கானத்தில் உயர்ந்த நடிகை, வயதில் குறைந்த நடிகை யார் யார்?

முறையே அங்கமுத்து. கே. பி. சுந்தராம்பாள், பேபி உமா.

எம். ராதாகிருஷ்ணன், பம்பாய்

கட்டபொம்மனில் 'போகாதே போகாதே என் கணவா' என்ற பாட்டை பின்னணியில் பாடியிருப்பது யார்?

நாடகத்தில் அதைப் பாடி வரும் ரத்னமாலாவேதான்.

ஒரு படம் ஏன் தோல்வி அடைகிறது?

படவுலகில் இன்னும் துப்புத் துலக்கப்படாத ரகசியம் இது!

ஏ. பி. நாகராஜன் ஏன் நடிக்கப் பயப்படுகிறார்?

பேனா பிடிக்க நேரம் கிடைக்காதே என்று!

பதில் தெரியாத கேள்வியை நான் கேட்டால்?

பின்னர் இத்தனை கேள்விகளுக்கும் 'பதில் தெரிந்தா' கேட்டிருக்கிறீர்கள்!

கட்டபொம்மன் மீசை மிகையாக இல்லையா?

ம. பொ. சி. அங்கீகரித்தது அது!

தன்னம்பிக்கை என்றால் என்ன?

உழைப்பாளிகளுடன் பிறந்த 'வைடமின்' சத்து இது.

வி. குப்புசாமி, சென்னை

பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற நடன அரங்கத்தில் வைஜயந்திமாலா கலந்து கொண்டாரே, பரிசு அவருக்குக் கிடைத்ததா?

உலகின் எல்லா நாட்டியங்களையும் விட சிறந்தது பரதநாட்டியம் தான். ஆனால் பரதநாட்டியம் ஆடிய வைஜயந்தி அங்கு பரிசைப் பெற முடியவில்லை; கிழக்கு பெர்லினைச் சேர்ந்த கலாசாரக் குழு நடத்திய 'ஹாப்மனின் கதைகள்' என்பதற்கே முதற் பரிசு கிடைத்தது. தவிர, தனிப்பட்ட முறையில் சில கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. வைஜயந்தியின் பெயர் அந்தக் கலைஞர்களின் பட்டியலில்கூட இடம் பெறவில்லை!

ஆர். ஜி. ராஜ், ஈப்போ, மலாயா

பானுமதியை இனி பார்க்க முடியாதா?

யார் அப்படிச் சொன்னது? அவர் நடித்த மணிமேகலை இப்போது வரப்போகிறது. 'கானல் நீர்' என்ற படத்தில் அவரை அடுத்துப் பார்க்கப் போகிறீர்கள். தவிர, எம். ஜி. ஆருடன் கால்டஜன் படங்களில் அவர் நடித்து வருகிறாரே!

ஏ. பி. நாகராஜன் தான் எழுதும் கதைகளுக்கு ஏன் இப்படி நீளமான பெயரைக் கொடுக்கிறார்?

தலைப்பையும் வசனமெழுதுவதாக நினைத்து விடுகிறார் போலும்!

தமிழ் நடிகர்களில் கட்டுடலுடன் இருப்பவர் யார்?

மனோகர். அவருக்குத்தான் இன்னும் 'தொப்பை' விழவில்லை.

ரஞ்சன் நடித்த தமிழ்ப் படங்களில் நடிப்பில் சிறந்த படம் எது? அவர் சங்கீதத்தில் டிப்ளமா வாங்கியவரா?

சந்திரலேகா ஒன்றில்தான் அவர் நடித்திருக்கிறார். சங்கீதத் துறையில் அவர் டிப்ளமா பட்டம் பெற்றிருக்கிறார்.

ஐ. எஸ். ஜோஹருக்கு ஏன் சிவாஜியின் நடிப்பு கசக்கிறது?

இல்லாதவன் இருப்பவனைக் கண்டுப் பொறுமைப்படுவது இயற்கை தானே?

திராவிடத்தின் 'யுல் பிரன்னர்' யார்?

சுமங்கலியில் 'என் தங்கை' நடராஜன் அமெரிக்க நடிகர் யுல் பிரன்னரைப்போல் மொட்டையடித்துக் கொண்டு வந்தார். ஆனால் ரசிகர்கள் அவரை யுல் பிரன்னராக ஏற்க மறுத்து விட்டனர்! எனவே இங்கு யுல் பிரன்னராக இனிமேல்தான் யாராவது தோன்றவேண்டும்!

எம். ஆர். புரொடக்ஷன்ஸ் ''பாம்பை மணந்த பதிவிரதை''யில் நிருபராய்.

இந்த மங்கை இப்படித் திருட்டு விழிவிழிக்கக் காரணம் எதுவாக இருக்கும்? — தேவரின் ''வாழ வைத்த தெய்வம்'' படத்தில் ஜி. சகுந்தலா.

சுயநலம் இல்லாத படாதிபதி உண்டா?

படம் தயாரிக்க ஒருவர் முனைவதே சுயநலத்தில் பிறப்பதுதானே!

உண்மையை அடைக்கும் சிறை எது?

சுயநலம்!

காதலுக்குக் கண்ணில்லை... திருமணத்திற்கு...?

...வேலி இல்லை!

ஏ. கார்த்திகேயன், சிங்கப்பூர்

நாராயணன் கம்பெனியின் படத்தில் ஜெமினி கணேசன் நடித்து வருகிறாரா?

இல்லை.

கு. தங்கராசு, சிங்கப்பூர்

தமிழ்ப் படங்களில் பாட்டுக்கேற்ப இசை அமைக்கப் படுகிறதா, இசைக்கேற்ப கவிதைகள் புனையப் படுகின்றனவா?

பெரும்பாலும் இங்கு செருப்புக்கேற்றபடிதான் கால் வெட்டப் படுகிறது!

பாரதி தாசனுக்கு அடுத்தபடியாக கவிதை புனைவதில் யாரைச் சொல்லலாம்?

பட்டுக்கோட்டையை.

வி. கலாதர், செங்கல்பட்டு

1959-ல் படவுலகின் அதிருஷ்டம் எப்படி உள்ளது?

கானல் நீராக.

ஏ. என். சஹஸ்ரநாமம், பாலக்காடு

விஜயா புரொடக்ஷன்ஸார் அடுத்து என்ன படம் தயாரித்து வருகிறார்கள்?

மூன்று படங்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இவற்றில் ஒன்று பிரம்மாண்ட வர்ணப் படமாக இருக்கும். ஒன்றில் முற்றும் புதுமுகங்களே இருப்பார்கள்.

தி. மாரியப்பன், வீரவநல்லூர்

பத்மினி திரையுலகிலிருந்து விலகி விட்டால், நடிகர் திலகத்திற்கு ஏற்ற ஜோடியாக யார் வருவார்கள்?

சரோஜாதேவிக்கு அந்த இடம் கிடைக்க இடமிருக்கிறது.

விஜயகுமாரியை 'இலட்சிய நடிகை' என்று சில பத்திரிகைகள் கூறுகின்றனவே, இதன் பொருள் என்ன?

அவரும் ஒரு 'இலட்சி'யத்தைப் பின் பற்றிப் போகிறாரல்லவா, அதனால்தான்!

கனக. சுப்பிரமணியம், சென்னை

கொடை அளிக்கும் நடிகர்கள். குடியிருக்க மிகவும் கஷ்டப்படும் ஏழைகளுக்கு குறைந்த அளவில் வாடகை கொண்ட வீடுகளைக் கட்டி விடுவார்களா?

நல்ல யோசனைதான். தங்கவேலு இந்த அடிப்படையில்தான் சென்னையில் சில வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

ஜி. பரிமளா,
பலாங்கொடை, இலங்கை

'கல்யாணப் பரிசு' படத்தில் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய டீ என்னும் பாட்டு ஏன் படத்தில் இல்லை?

படத்தின் விருவிருப்பைக் கூட்ட, வெட்டப்பட்டு விட்டது இது. இதைப் பாடியவர் எஸ். சி. கிருஷ்ணன்; சீர்க்காழி அல்ல.

கமலா லக்ஷ்மண். தன் கணவனை விவாக ரத்து செய்து விட்டு கோபி கிருஷ்ணாவை மணக்கப் போகிறாராமே, உண்மையா?

வட இந்தியப் பத்திரிகை யொன்றில் இப்படியொரு செய்தி வந்திருக்கிறது.

சி. மோகனரங்கம், விருதை

ஐ. எஸ். ஜோஹர் என்ற வட இந்திய நடிகர் தமிழ் நாட்டவர்களை இன்னும் பழிக்கிறாரே, இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

'பேசும்-பட'த்தில் முன்னர் நாம் கூறியுள்ளபடி அவர் நடித்து வரும் படங்களைப் பார்க்காமல் பகிஷ்கரிக்கலாம். தற்போது அவர் நடித்துள்ள 'கூன்ஜ் - உத்தி - ஷெனாய்' என்ற படம் தமிழ்நாட்டில் திரையிடப்பட்டுள்ளது. தன்மானம் பேசும் தமிழர்கள் இதைப் பார்க்கக் கூடாது இம்மாதிரி ஜோஹர் நடிக்கும் படங்கள் சிலவற்றுக்கு நாம் செய்தால் அவரது சித்தமும் தெளிந்து விடும்.

தெய்வலோகத்தில்கூட அப்பனுக்கும் மகனுக்கும் சண்டை உண்டு போலும்! கலாநிதி பிலிம் ''விநாயக சதுர்த்தி''யில்.

கி. வெ. நாராயணன்,
புத்தூர், திருச்சி

ஜெமினி கணேசனை எந்த ஹிந்தி நடிகருடன் ஒப்பிடலாம்?

தேவ் ஆனந்துடன். ஹிந்திப் படவுலகின் ஆணழகர் இவர்.

பி. ஏ. ரம்பண்டா,
மஸ்கெலியா, இலங்கை

''கட்சிக் கண்ணோட்டம் வேண்டாம்'' என்று சொல்லும் சிவாஜி கணேசன், காங்கிரஸ் கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருப்பது ஏன்?

அவர் காங்கிரஸ் கட்சியில் இருப்பதாக யார் சொன்னது? கணேசன் எந்தக் கட்சியிலும் அங்கத்தினராக இல்லை.

கே. ஆர். சிங்கம், கிளிநொச்சி

நீங்கள் ஒரு படத்தை எத்தனை தடவை பார்ப்பீர்கள்?

படத்தின் நீளத்தையும் தரத்தையும் பொருத்தது இது.

விளம்பரம் இல்லாத படம் எதைப் போன்றது?

மேளமில்லாத திருமணம் போன்றது!

சீனிவாசன், சென்னை

'கல்யாணப் பரி'சில் தங்களுக்குப் பிடித்த கட்டம் எது?

பாஸ்கரையும் கீதாவையும் கோவைக்கு வண்டி ஏற்றிவிட்டு வசந்திவரும் கட்டம். அப்போது வரும் பாடலும் படமாக்கப்பட்டிருந்த விதமும் உள்ளத்தை உருக்குவதாக இருக்கின்றன. கோவை ரயில், சென்னை சென்டிரல் நிலையத்தில் கிளம்பியபோது, என் மனமும் கூடவே போய்விட்டது.

பட்டுப் போன்ற மென்மையான
விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர் உங்கள் சருமத்தைப்
பூவிதழ் போன்ற மழமழப்புடன் வைத்திருக்கும்.
இணைபிரியாத அதன் ரோஜா மணம் கமகமவென்று
மணிக்கணக்காக உங்கள் மீது கமழ்ந்திருக்கும்.

விநோலியா ரோஸ் டாய்லெட் பவுடர்

வசீகரிக்கும் ரோஜா மணமுள்ள, வெண்மையான பவுடர்

விநோலியா கம்பெனி சார்பாக, இந்துஸ்தான்

தபால் பெட்டி

* சபாஷ் ரகுநாத்!

தமிழ் நாட்டில், ஏன் இந்தியா முழுவதிலுமே, தாலிகட்டித் திரு மணம் செய்யும் இந்துக்கள். அதைத் தெய்வீகமானதாகக் கருது கிருர்கள். இந்த வழக்கம் தமிழ்ப் படங்களால் பெரிதும் கேலி செய்யப்பட்டு வந்தது. அடிக்கொரு கல்யாணக் காட்சி காட்டப்படுகிறது. கேட்டால் நடிப்பு என்கிருர்கள். தாலி ஒரு புனிதமான அடையாளம். இதை நம் டைரக்டர்களில் நன்கு அறிந்து இருப்பவர் டி.ஆர். ரகுநாத். வணணக்கிளி படத்தில் மூன்று கல்யாணக் காட்சிகள் வருகின்றன. மூன்றிலும் தாலிகட்டுவதைக் காட்டாமல் புத்திசாலித்தனமாகப் புரிய வைக்கிருர் ரகுநாத். நம்மிடம் முன்னேற்றக் கருத்துக்கள் இருக்கலாம், ஆனல் அதற்காக புனித வழக்கங்களை அசட்டை செய்யக் கூடாது. தாலிகட்டிக் கொள்பவள் கணவனை மதிக்காத நிலை வளருகிறது என்ருல், அதற்கு முதற் காரணம், தாலிக்குரிய மதிப்பு குறைக்கப்படுவதுதான். இதனல் சமூகத்திற்குக் கேடு விளையும். டி. ஆர். ரகுநாத், அந்தப் படத்தை ரஞ்சகமானதாக ஆக்கியிருக்கிருர் என்பதற்காகப் பாராட்டும் நாம், அவர் தாலியின் புனிதத்தைக் காக்கத் துணிந்ததற்காகத் தலை வணங்குகிருேம்.

வேதாசலம்,
சிந்தாதிரிப்பேட்டை.

* நடிகர் சங்கம் முன்வருமா?

எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன் போன்ற தனி நபர்கள் ஏராளமான நன்கொடைகள் கொடுத்து வருகிருர்கள். இதனல் பல பொது ஸ்தாபனங்கள் பலனடைகின்றன. இவர்களைப் போல் மற்ற கலைஞர்களும் ஏன் நிதி தரக்கூடாது? நடிகர் சங்கக் கூட்டத்திற்கு நடிக, நடிகையர் வருகின்றனர். அப்போது இதுபற்றி நடிகர் சங்கம் முயற்சி எடுக்கலாம். இன்று பல மாணவ, மாணவியர் ஏழ்மை காரணமாகப் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கின்றனர். அவர்களில் சிலருக்கு அரசாங்கமும், பொது ஸ்தாபனங்களும் உதவுகின்றன. இந்த 'ஸ்காலர்ஷிப்' சிலருக்குத்தான் கிடைக்கும். பெரிய அளவில் இல்லாவிட்டாலும் நடிகர்கள் கொஞ்சம் கொஞ்சம் உதவினுல் நடிகர் சங்கம் 'நடிகர் சங்க ஸ்காலர்ஷிப்' என்ற பெயரில் பல மாணவ மாணவியருக்கு உதவ முடியுமே! சங்கத்திற்கும் நற்பெயர்; மாணவ, மாணவியருக்கும் கல்விச் செல்வம் கிடைக்கும். மக்களுக்கும் இது மிக மிக மகிழ்ச்சிதரும். நடிகர் சங்கம் இது விஷயமாகத் தீவிரமாக முயன்று கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடுமா?

ஜீ. பிரபா,
பெரம்பூர்.

பட்டம் அவசியம்

சென்ற ஆண்டின் சிறந்த நடிகை என்று 'பேசும் படம்' உள்பட யாவராலும் பாராட்டப்பட்டிருக்கும் சாவித்திரிக்கு ''நடிப்பின் ஒளி'' என்ற பட்டமளிக்க விரும்புகிறேன். இப்போதெல்லாம் நடிகர்களில் பலர் பட்டப்பெயர் இல்லா

* இக்குறியிட்ட இரண்டு கடிதங்களுக்கு தலா ஐந்து ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

மல் இருப்பதில்லை. சாவித்திரிக்கு மட்டும் ஏன் அது கூடாது?

வி. கோமளா,
கும்பகோணம்.

[சாவித்திரிக்கு ஈரோடில் 'கலைச் செல்வி' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. படவுலகில் நடிகைகள் அனேகமாகப் பட்டப் பெயரை உபயோகிப்பதில்லை, அதிலும் பட்டம் தேவையில்லை என்று உதறிய ஜெமினி கணேசனையே சாவித்திரியும் பின் பற்றுவார். நீங்கள் சாவித்திரி கணேஷுக்கு கடிதம் எழுதும்போது "நடிப்பின் ஒளி" என்று எழுதுங்களேன்! ஆ-ர்]

தேவையில்லையே

சமீபமாக வந்த படங்கள் பல தோல்வியுற்றன. இதற்கு முக்கிய காரணம், ஒரே நடிகர் இவற்றுள் பெரும்பாலானவற்றில் தோன்றியிருப்பதுதான். கல்யாணிக்கு கல்யாணம், மாமியார் மெச்சிய மருமகள், தலைகொடுத்தான் தம்பி, பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், நாட்டுக்கொரு நல்லவள், சிவகெங்கைச் சீமை போன்ற பெரும்பாலான படங்களில் எஸ். எஸ். ராஜேந்திரன் கதாநாயகனாகத் தோன்றினார். திரும்பத் திரும்ப ஒரே கதாநாயகனை ஒரே மாதிரி நடிப்போடு பார்க்கும்போது அலுப்புத் தட்டத்தான் செய்கிறது. முன்பு இதுபோல ஜெமினி கணேசன் - சாவித்திரி நடித்த சௌபாக்கியவதி, பத்தினித் தெய்வம், மணமாலை, குடும்ப கௌரவம் முதலிய படங்கள் வரிசையாக வந்து விழுந்தன. ஒரே நடிகரை - அவர் எவ்

89694

"என்ன, இன்னும்கூட நான் யாரென்று உனக்குத் தெரியவில்லையா?" — ஸ்ரீராம் புரொடக்ஷன்ஸ் "ஜீவபூமி"யில் பி. சரோஜாதேவி, 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன்.

வளவுதான் புகழ் படைத்தவராக இருந்தாலும் - அடிக்கடி திரையில் பார்க்கும் ரசிகர்கள் அலுப்படையவே செய்கிறார்கள். ஆகவே நடிகர்கள் வருஷத்திற்கு மூன்று படங்களுக்குமேல் திரையிடப்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் அப்படித்தானே செய்கிறார்கள்?

வீராசாமி,
காஞ்சீபுரம்.

இன்றையத் தேவை

இன்று படவுலகில் புகுந்துள்ள பல இளம் நடிகர்களின் நடிப்புத் திறன் குறைவு காரணமாகப் பல படங்கள் ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்கின்றன. ஆகவே கலையுலகினர் ஒரு கலைப் பயிற்சிக் கூடம் நடத்த முற்பட வேண்டும். நவரசங்களையும் ஒவ்வொரு வகுப்பாக அமைத்துப் பயிற்சியளிக்க வேண்டும். கூடவே வசனம் பேசும் கலை, இசைப்பயிற்சி ஆகியவற்றுக்கும் தனி வகுப்பு அமைக்க வேண்டும். சிவாஜி கணேசன், சகஸ்ரநாமம், எஸ். வி. சுப்பையா, பாலையா போன்றவர்களை ஆசிரியர்களாகக் கொண்டு ஒரு நடிப்புக் கல்லூரியைத் தோற்றுவித்து, அதில் பயின்று திறமையுடன் வெளிவருவோருக்கு சந்தர்ப்பமளிப்பதில் தனிச் சலுகை காட்ட தயாரிப்பாளர்கள் தீர்மானித்துக் கொண்டால் படங்கள் சிறப்பாக அமைவதில் யாருக்கும் சந்தேகம் இராது. கலைஞர்களும் தயாரிப்பாளர்களும் தங்களுக்குள்ளேயே நிதி திரட்டி இந்தக் கல்லூரியை அமைக்க முன்வருவார்களா?

டி. கே. ஜே. பாண்டுரங்கன்.
வேலூர்.

போகஸின் கோணல் புத்தி

'சினி அட்வான்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு கேள்விக்குப்

''ஐயோ! நீ வளைக்கற மாதிரி என்னாலே ஒடம்பெ வளைச்சு ஆடமுடியலியே'''—தேவர் பிலிம்ஸ் ''வாழவைத்த தெய்வம்'' படத்தில் பாலையா, முத்துலக்ஷ்மி.

பதிலளிக்கையில், ''எதிலும் முன்னேற்றம் காணும் தென்னகம் எப்படி மோசமான படங்களைத் தயாரிக்கிறது என்று நான் ஆச்சரியப்படுகிறேன். அவைபற்றி எனக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது; என்று குறிப்பிட்டிருக்கிறார் போக்கஸ். (Focus). ஆனால் பிறிதொரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் ''ஜோகர் நல்ல நடிகர்'' என்கிறார் இந்த (Focus) போகஸ் பேர்வழி! உடன் பிறந்தே கொல்லும் வியாதிபோல் அந்தப் பத்திரிகைகளுக் கெல்லாம் ஏன் கேள்விகளை நம்மவர்கள் எழுதி அனுப்புகிறார்கள்?

பி. வி. ரமணி,
பம்பாய்.

இவர் எதற்காக இப்படிச் சுற்றுமுற்றும் நோட்டம் விடுகிறார்? — கிருஷ்ணா பிக்சர்ஸ் ''ராஜா தேசிங்கு'' படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி.

[கேள்வி கேட்கப்பட்டதால் தானே நமக்கு வடநாட்டாரின் மனநிலை புரிகிறது? அது நமக்கு லாபம்தானே? மலை எப்போதும் மலையாகவே இருக்கும். மற்றதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. தென்னாட்டையும் தமிழகத்தையும் தாக்குவதையே பொழுது போக்காகக்கொண்ட புண்யவான் ஜோகர் ஒருவரல்ல. பல ஜோகர்கள் உண்டு. ஆ-ர்.]

வெற்றிப்பாதையில் வீனஸ்

''வீனஸ் பிக்சர்ஸாரின் கல்யாண பரிசு'' ஒன்பது தியேட்டர்களில் நூறு நாட்கள் ஓடியிருக்கிறது. மேலும் ஓடிக்கொண்டும் இருக்கிறது. இந்தச் செய்தியறிந்து தமிழகமே பெருமைப்படுகிறது. சாதாரணமாக இப்போதெல்லாம் படங்கள் திரையிடப்பட்ட ஒரு வார காலத்தில் டப்பாவுக்குள் போய் விடுகின்றன. அப்படியிருக்க முற்றிலும் புதியவர்களும் இளைஞர்களும் முக்கிய பகுதிகளின் பொறுப்பேற்று மகத்தான வெற்றி கண்டிருக்கிறார்கள். கல்யாணப் பரிசு குறைந்த செலவில் மகத்தான வெற்றிபெற்ற படம். வீனஸ் ஸ்தாபனத்திற்கு இது படவுலகில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தை ஏற்படுத்தி விட்டது. ''அமரதீபம்'' அவர்களது முதல் படம். அது நூறு நாட்கள் ஓடி வெற்றி கண்டது. அடுத்து வந்த உத்தம புத்திரன், பயங்கரமான பல எதிர்ப்புகளுக்கிடையேயும் நூறு நாட்கள் ஓடி மகத்தான வெற்றி கண்டது. மூன்றாவது தயாரிப்பான 'கல்யாணப் பரிசு' நூறுநாட்

களுக்கு மேலும் ஓடி ஒரு தனி சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது. கதை, நடிப்பு, படமாக்கும் முறை இம்மூன்றிலும் (தயாரிப்பாளர்கள் மூவர் - பெயர் வீனஸ் என்ற மூன்றெழுத்து - இதனுல்தான் போலும்!) அவர்களது படங்கள் தரமாக அமைந்து வெற்றி தேடித் தந்திருக்கின்றன. எத்தனையோ பெரிய பெரிய கம்பெனிகள், பெரிய பெரிய நடிகர்களையெல்லாம் கொண்டு தயாரிக்கும் போது வீனஸ் பிக்சர்ஸார் மட்டும் வெற்றி பெறும் காரணம் மக்களின் ருசியை அவர்கள் நன்கு அறிந்திருப்பதுதான். மற்றவர்களும் சிரத்தையுடன் இதே போல வெற்றிப் படங்களைத் தயாரிக்க முற்பட வேண்டும்.

நீ. பிரகாசம்,
திண்டுக்கல்.

ஒரு வேண்டுகோள்

படவுலகக் கலைஞர்கள் இப்போது போட்டி போட்டுக் கொண்டு, பல நல்ல காரியங்களுக்குப் பணவுதவி செய்து வருகின்றனர். இதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இவர்களில் சிலர், அரசாங்கம் வயோதிக காலத்தில் கலைஞர்களுக்குப் பென்ஷன்போல ஏதாவதொரு விதத்தில் பண உதவி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இந்தச் சமயம் மக்களில் பெரும்பாலோரிடையே ஒரு அளவிட முடியாத ஆசை. படவுலகில் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த எம். கே. தியாகராஜ பாகவதர் இன்று மிகவும் நொடிந்த நிலையிலிருக்கிறார். கலைஞருக்கு மக்களிடமிருந்து பேராதரவு பெற்றுத்தரக் காரணமாயிருந்தவர்களில் அவர் முக்கியமானவர். அவரது இன்றைய நிலையை உணர்ந்து கலைஉலகினர்-குறிப்பாக நக்ஷத்திரங்கள் நிதி திரட்டி ஒரு பணமுடிப்பு கொடுத்து பாகவதருக்கு ஆதரவுதர முன்வர வேண்டும். இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படுமா?

அ. பரமசிவம்,
சென்னை.

நடிகர் பஞ்சம்

சினிமா ரசிகர் சங்கப் பரிசளிப்பு விழாவின்போது, நிதியமைச்சர் பேசுகையில், ஒரு நடிகர் பல படங்களில் நடிப்பதால் நடிப்பின்தரம் குறைவதாகக் குறிப்பிட்டார். பிறகு பேசிய 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசனும் 'கலைச்செல்வி' சாவித்திரியும், திறமையுள்ள நடிகர்கள் சிலரே படவுலகிலிருப்பதாயும் இதனுல் அவர்களையே படாதிபதிகள் பல படங்களுக்கும் ஒப்பந்தம் செய்வதாகவும் கூறினர்கள். படவுலகில் திறமை மிக்கவர்கள் பலரிருக்கிறார்கள். தவிர நாடக உலகில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நாடகக்கலைக்குச் சர்க்கார் மேலும வசதிகள் செய்து கொடுத்து அந்தத் தாய் ஸ்தாபனத்தை நன்கு வளர்த்தால் ஏராளமான பேர் அதிலீடுபட்டுப் பண்பட்ட நடிகர்களாகத் திரையுலகில் நுழைவார்கள்.

வி. ச. வாசுதேவன்,
செங்கற்பட்டு.

பிறையா? கிரகணமா?

பல படங்களில் பார்த்திருக்கிறேன், பிறைமதியை. ஆனல் அவை உண்மையான பிறைமதிக்குப் பதிலாகக் கிரகணம் பிடித்த சந்திரன் மாதிரித்தான் காணப்படுகிறது. வளர்பிறைக்கும் கிரகணம் பிடித்த சந்திரனுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கலை நிர்மாணஸ்தர்கள் (ஆர்ட் டைரக்டர்கள்) புரிந்து கொள்ளாதது வியப்பாகத்தான் இருக்கிறது.

கலைஞன்,
சென்னை-4.

பகஷிராஜா வின்

மரகதம்

படக்காட்சிகள்

PSR



பக்ஷிராஜாவின் 'மரகதம்' கருங்குயில் குன்றத்துக் கொலை என்ற பிரபல துப்பறியும் நாவலைத் தழுவி எடுக்கப்பட்டிருக்கிறது

கொலை செய்யாதவன் இதில் கொலைகாரனாக, சாட்சிகளின் துணை கொண்டு நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறான்.

கொலைகாரன் கொற்றவனாகிறான். அவனுக்கு உடந்தையாக இருந்தவன் உறுதுணையாகிறான்.

காணாமற் போகும் இளவரசி மரகதம் மாண்டு விட்டதாகக் கற்பிக்கப் படுகிறாள்.

ஆனால் நடந்தது!......

தண்டிக்கப்பட்ட நிரபராதி தப்பிக்கிறான் சிறையிலிருந்து. தான் பெற்ற மாணிக்கமாம் மரகதத்தை எடுத்துச் செல்கிறான்- சந்தர்ப்பம் வழிவிட.

மரகதம் அலமு ஆனாள்- பெயரில்.

மழலை பேசிய அவள் மரகதப் பதுமையாக பேசும் பொற்சித்திரமாக அழகெலாம் தன் அங்கங்களில் பூத்துக் குலுங்க, எழிலரசியாக மாறினாள்.



அவள் விழிகள் பேசாத கதைகள் கிடையாது.

அவளது முத்துச் சரப் பற்களும், தங்கம் நிகர் மேனியும், முழுமதி முகமும் எழுப்பாத காவியங்கள் இடையாது.

அலமு இருந்தாள் சிங்களத்தீவில் — தந்தையின் துணையோடு.

வந்தான் அங்கு வரேந்திரன் — மரகதத்தின் தாய் மாமன் அவன்.

இருவருக்கும்—

எதிர்ப்பாராத! சந்திப்பு!

எதிர்ப்பாராத இடத்தில்!

விழிகள் பார்வையைப் பரிமாறிக் கொண்டன. பெருமூச்சுகள் அடுத்தடுத்துத் தூது சென்றன.

இடையில் முளைத்தது—அவர்களது 'அன்பின் கோயில்'

அதை இடிக்க வந்தான் ஒரு கள்ளன்-உக்ரமசிங்கன்.

கள்ளனிடமிருந்து தப்பித்து தன் உள்ளங் கவர்ந்த கள்வனிடம் சேர துடித்தது அழகுப் பதுமை! ஆனால் எட்டாத இடம் அது!

திசை தெரியாமல் தான்—

அழகுக் கிளியும் தொடர்ந்தது! கடற்பயணத்தை.

துரத்தி வந்தது பூனையும்

சூறாவளி! ஒரே சூறாவளி!!

அலமு அலறினாள்.

அவள் தந்தை அனந்தரர் திகைத்து நின்றார், சிலை போல.

தற்காப்புக்கு—

அனந்தரர் கையிலிருந்த துப்பாக்கி வேட்டுக்களாக உதிர்த்தது, உக்ரமசிங்கன் கோஷ்டியின் மீது.

மறுமுனையிலிருந்தும் வெடிகள் பறந்தன.

அனந்தரர் செயலற்று கடலில் விழுந்தார்.

"அப்பா" — அலமுவிடமிருந்து அலறல்.

துள்ளிக் குதித்த அவளை அலை மோதும் கடல் கரம் நீட்டி அணைத்தது.

அலைமோதும் கடல் அள்ளி அணைத்தது அலமுவை.

மரக்கலத்தில் வந்த மகாராணி, மரகதமோ என எண்ணி அலமுவை வாரி அணைத்துக் கொண்டாள்...

புரியாத புதிராகத்தான் இருந்தது-அலமுவுக்கு.

அருங்கிளிப்புரத்து ராணிக்கு

அலமு ஒரு ஆறுதல் பொருளாக இருந்தாள்.

சிக்கல்கள் ஒன்றன் பின் ஒன்றாகத்
தான் வருகின்றன. ஆனால் சுவையாக
விடுவிக்கப்படுகின்றன இவை
அனைத்தும், 'மரகதம்' படத்தில்

பக்ஷிராஜாவின்

மரகதம்

(கருங்குயில் குன்றத்துக் கொலை)

காட்சி 1

நரிக்குகையில் சிங்கம்

மலைக்கூட்டத்தை முத்தமிடும் மேகக்கூட்டங்கள். அந்த வெண் முகிற் கூட்டத்திற்கிடையே பட்டும் படாமலும் நச்சரவைப்போல் வளைந்து நெளிந்து செல்லும் பாதை. அங்கே நிலவும் சுடுகாட்டு அமைதியைக் குலைக்கும் வகையில் 'டக் டக்'' என்ற குதிரைகளின் குளம்படிச் சப்தம் கேட்கிறது. ஒலியைத் தொடர்ந்து சில குதிரைகள் கண்களுக்குப் புலப்படுகின்றன. குதிரைகள் மீது சவாரி செய்து வருபவர்களில் ஒருவன் - அவன் பெயர் வரேந்திரன் - பேசுகிறான். அவன் கருங்குயில் குன்றத்து இளைய ராஜா.

பாத்திரங்கள்	
சிவாஜி கணேசன்	வரேந்திரன்-வளவன்
பாலசந்தர்	அனந்தரர்
உக்கிரமசிங்கன்	ஓ.ஏ கே தேவர்
பத்மினி	அலமு -மரகதம்
சந்தியா	கற்பகவல்லி

வசனம் ;

முரசொலி மாறன்

டைரக்ஷன் :

எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு

வரே : செக்கர் வானத்திலே தோன்றும் செம்பழுப்பு சூரியன் ஒளியில் தங்கத்தகடு வேய்ந்தவை போன்ற மலைகள். அந்த மலைகளின் உச்சியில் மணி முடியைத் தொட்டுக்கொண்டிருக்கும் அணி அணியான மேகக் கூட்டங்கள். பாரளிக்கும் பரமசிவனின் முடியிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் கங்கையைப் போன்று மலைச்சாரலிலே நெளிந்தோடும் அருவித் தொடர்கள். பாது காவலர்கள் போல நம்மை சுற்றி நிற்கும் நீண்டு வளர்ந்த மரங்கள். கண்ணையும் கருத்தையும் கவர்ந்து எண்ணமெல்லாம் இன்பம் கரும் இந்த இலங்கைத் தீவின் அழகே அழகு தான் நண்பா!

விசுவாசம் : சரிதான் போங்க. நம்ப தமிழ் நாட்லே இந்த மாதிரி இடம் ஏராளமா இருக்குதுங்க. யாருபோய் பாக்கறுங்க?

வரே : இதை யெல்லாம் ரசித்துக் கொண்டு இங்கேயே இருந்து விட்டால்?

விசு : ஐயய்யோ! நீங்க இருக்கலாம். ஆனா நம்மால் முடியாதுங்க. எனக்காக அங்கே எக்கச்சக்கமான ஆளுங்க காத்துக்கிட்டு இருக்குது.

அப்போது அந்த நல்லவர் கூட்டத்தைப்பிடிக்க வருகிறான் உக்கிரமசிங்கன். அவன் பெயரைக் கேட்டால் நாடே நடுங்கும்.

உக் : டேய்! நில் அப்படியே! அசைந்தால் கொன்று விடுவேன். வரேந்திர வர்மரே! நான் யார் தெரியுமா?

விசு : ஏய்யா பிடிக்கறே? யாரய்யா நீ?

வரே : நீ யாராயிருந்தால் எனக்கென்ன? எதற்காக என்னை வழி மறைத்தாய்?

உக் : ஹஹ்ஹா! இப்போது நீ இந்த உக்ரமசிங்கனின் பிரத்யேக விருந்தாளி.

வரே: ஆ! கொள்ளைக்கார உக்ரமசிங்கன் நீதானா?

உக்: ஆம் நான்தான். ஆனால் உன்னிடம் கொள்ளையடிக்கப் போவதில்லை.... டேய்! உன்னை விடுதலை செய்கிறேன். வரேந்திரா! இவனிடம் சொல்லி அனுப்பும். ஏழு நாள் தவணை முடிவதற்குள் எனனிடம் ஒருலட்ச ரூபாய் வந்து சேர வேண்டும். இலலை உங்களையெல்லாம் கண்ட துண்டமாக வெட்டி எறிந்து விடுவேன்.

வரே: சி, கொலைகாரா!

உக்: ஆம், கொலைகாரன் தான், ஆனால் நீ பயப்படாதே. உன்னை நான் கொலை செய்யப் போவதில்லை. டேய்! கொண்டு போங்கள் இவர்களை.

வீட்டில் சினிமா புரொஜக்டர்



இந்த சினிமா புரொஜக்டரைக் கொண்டு உங்கள் வீட்டிலேயே நண்பர்களுக்கும் சினிமாவைக் காட்டி மகிழலாம். இதை மின்சாரம் (ஏ. ஸி. அல்லது டி. ஸி.) அல்லது பாட்டரி விளக்கினால் இயக்கலாம். 35. மி. மீ. பிலிமில் 4'X4' உள்ள திரையில், விதவித வர்ணங்களில், முழுச் சலனத்தோடு படங்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு புரொஜக்டருடனும் 10 கெஜம் பிலிமும் படங்கள் கொண்ட விளக்கப் புத்தகமும் இனாம். ஸ்பெஷல் (டீலக்ஸ்) மாடல் விலை ரூ. 15.50 வி.பி.பி. சார்ஜுகள் ரூ. 4.50 தனியே ஒவ்வொரு கெஜம் பிலிம் விலை 25 நயே பைசே. திரை ரூ. 3.

Anand Industries
Mandi Ramdas Mathura

மலைக்குகையில் சிறை வைக்கப்படுகிறார்கள். வரேந்திரன் கோஷ்டியினர். விசுவாசம் கேட்கிறான்.

விசு: மவராஜா! நாம உடுற மூச்சைத் தவிர வேற காத்தே வராது போலிருக்குங்களே! எந்த அம்மாவாசையிலே புறப்பட்டோமோ, பாம்பு தேளு இருக்கிற இந்தப் பாதாளத்திலே வந்து மாட்டிக்கிட்டோம்.

வரே: உஸ்...உஸ்...அப்பா.

விசு: என்ன உஷ்ணம் என்ன உஷ்ணம்! பாத்திங்களா! உஷ்ணம் தாங்க முடியாம மலையெல்லாம் உருகி ஒழுகுதுங்க.

(யாவரும் பார்க்கிறார்கள்)

காட்சி 2

நரியின் குகையில் பெண் மான்

குகையில் வரேந்திரன் அடைக்கப்பட்டபோது, அவனை மீட்கப் பணம் கொண்டு வரப்போகும் ஆள், சிறுத்தையால் கொல்லப்படுகிறான். ஆகவே பணம் வரவில்லை. உக்கிரசிம்மன் கோபத்துடன் வரேந்திரனிடம் வருகிறான்.

உக்: ஜமீன்தார்! என் சரித்திரத்திலேயே முதல் தடவையாக உமக்குத்தான் கருணை காட்டினேன். ஆனால் இன்னும் மீட்புப் பணத்துடன் உமது ஆட்கள் வரவில்லை என்று என் தூதுவர்கள் திரும்பி விட்டார்கள். இனிமேல் என் வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

வரே: உக்ரமசிங்கா! ஏதோ எதிர்பாராமல் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக என் ஆள் பணத்துடன் வந்து விடுவான். அதுவரை பொறுமையாக இரு.

உக்: ஏன் நிற்கிறீர்கள்? பிடித்துக் கட்டுங்கள் இவனை!

வரே: இப்போது என்னை என்ன செய்யப்போகிறாய்?

உக்: உன் காதுகளை நறுக்கி எடுத்து என் கோரிக்கையை கேட்டும் கேளாமலிருக்கும் உன் உற

வினர்களுக்கு பரிசாக அனுப்பப் போகிறேன்.

வரே: என் காதுகளையா?

உக்: ஆமாம். இல்லாவிட்டால் உன் மூக்கை அறுக்கட்டுமா? அல்லது உன் உதட்டை அறுக்கட்டுமா?

விசு: அதெல்லாம் ஒண்ணும் வேணுங்க. சுலபமா அடையாளம் கண்டுக்கணும்னு அய்யாவோட சுருட்டை மயிரை கொஞ்சம் வெட்டி அனுப்புனு போதுங்க.

உக்: பலே, நல்ல யோசனை! அடுத்தாற்போல் உன் முறை வரும் பொழுது என்னிடத்தில் அதிகப் பிரசங்கம் செய்த உன் நாக்கை நறுக்கி உன் உறவினர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். கவலைப்படாதே! டேய்! அவன் தலையை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

உக்ரமசிங்கன் வரேந்திரனின் காதுகளை அறுக்க நெருங்கும் பொழுது, விக்ரமன் அவன்மேல் பாய்கிறான். உடனே உக்ரமசிங்கன் துப்பாக்கியால் அவனைச் சுட்டு வீழ்த்துகிறான்.

வரே: விக்ரமா!

உக்: ஜமீன்தார் அவர்களே! ஏன் உமது கண்களை மூடிக் கொண்டீர்? இறுதி முறையாக உமது நண்பனை பார்த்துக் கொள்ள உமக்கு இஷ்டமில்லையா? ஹஹ்ஹா! இந்த உக்ரம சிங்கத்தை எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் சரி! கடைசியில் இது தான் கதி.

வர: சீ, கல்மனம் படைத்த காட்டுமிராண்டியே! நேருக்கு நேர் நின்று சண்டை செய்ய முடியாமல் ஒரு சுத்த வீரனை-என் உயிர் நண்பனை ஒழித்து விட்டாயே. பணத்தைப் பெரிதாகவும், மனித உயிரைக் கிள்ளுக்கீரையாகவும் மதித்து விளையாடுவதுதான் உன் பொழுது போக்கா? பணம் போனால் வரும். ஆனால் இந்த உயிரை மீண்டும் திருப்பித்தரமுடி

ரூ. 300 இனாம்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்தவை கை கூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது, இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3.12 நயா பைசே. உடனே பலன் தெரியக் கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)

JULLUNDUR CITY (Pb)

யுமா உன்னால்? பாவி, பணம்தான் உனக்கு உலகமா? பணம்தான் உனக்கு வாழ்வா? பணம்தான் உனக்கு தெய்வமா? பதில் சொல்லேண்டா பணப்பேயே!

உக்: ஜாக்கிரதை! என் கையில் என்ன இருக்கிறது பார்த்தாயா?

(துப்பாக்கியைக் காட்டுகிறான்)

வரே: அதைக் காக்கை குருவிகளிடத்தில் காட்டு, பயப்படும்.

உக்: ஏய், என் ஆத்திரத்தைக் கிளப்பாதே! எனக்குக் கோபம் வந்தால் மிருகமாகி விடுவேன்.

வரே: இப்போது மட்டும் என்ன, மனிதனாகவா இருக்கிறாய்?

உக்: உம், இப்படியெல்லாம் பேசி என் கோபத்தைக் கிளறி விட்டால் உன்னையும் ஒரே நொடியில் சுட்டு வீழ்த்தி விடுவேன் என்று நினைக்கிறாயா? அதுதான் இல்லை. டேய் பிடியுங்கள், அவன் தலையை.

அலமு அங்கே வருகிறாள். எதிர்பாராத வரவு அது.

அல: உக்ரமசிங்கா! நிறுத்து!

உக்: யார் நீ?

அல: என்னைத் தெரியவில்லையா? அதற்குள்ளாகவா மறந்து விட்டாய்?

உக்: ஓ நீயா!...இங்கு எதற்காக வந்தாய்?

அல: நீ அவர்களை சிறைப்படுத்தி வைத்திருப்பதுதான் உலகமறிந்த ரகசியமாயிற்றே! இவர்களை உன்னிடமிருந்து காப்

1959-60-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1959-60க்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நில புலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)

JULLUNDUR CITY (Punjab)

பாற்றுவதற்காகத்தான் வந்திருக்கிறேன்.

உக்: இந்த சிங்கத்தின் குகையில் நுழைவதற்கு உனக்கு என்ன தைரியம்? யாராலும்கண்டுபிடிக்க முடியாத இந்த குகையின ரகசிய வழி உனக்கு எப்படித் தெரிந்தது?

அல: இது ஒரு கஷ்டமா? மீட்புப் பணத்திற்காக வெகு நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருந்த உனது ஆளை ரகசியமாக பின் தொடர்ந்தேன். நீ இவர்களை மன்னித்திருந்தால் உனக்குத் தெரியாமலேயே திரும்பியிருப்பேன். பாவம், நான் வருவதற்குள் ஒரு உயிரை பறித்துக் கொண்டாய். இவர்களுக்கும் அந்தக் கதி ஏற்பட நான் சம்மதிக்க மாட்டேன். தயவு செய்து விடுதலை செய்து விடு.

உக்: ஹூம், சிங்கத்தின் வாயில் சிக்கிய இறையைக்கூட மீட்டுவிடலாம்; இந்த உக்ரமசிங்கத்தின் பிடியில் அகப்பட்ட ஒரு சிறு துரும்பைக்கூட யாராலும் விடுவிக்க முடியாது. பைத்தியக்காரி! நீ மட்டும் ஒரு ஆணாக இருந்திருந்தால் இந்நேரம் உன் வாயைக் கிழித்து பிரத்யேக விருந்தாளியாய் எமனுலகுக்கு ஏற்றுமதி செய்திருப்பேன். ஆகா! நீ பெண்ணாகப் போய்விட்டாயே. மன்னித்தேன். ஓடிப் போ, இனி என் முன் நிற்காதே, ஓடிப் போ.

அல: ஓடி ஒளிந்து கொள்வதற்கு நான் என்ன உன்னைப் போல் திருடனா? மானம் காக்கும் மறவர் குடியில் பிறந்த தமிழச்சி உக்ரமசிங்கா, தமிழச்சி! அன்று நீ எனக்கு கொடுத்த வாக்குறுதியை

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாய மோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவராலும், அல்லது தொலைதூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE.**

(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

இரவில் தனியாக இருக்கும் போதுதான் பார்த்துக் கொள்ள வேண்டும்

KASHMIRI SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

84 படங்களுடன்

விளம்பரததிணல் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப்புரிந்து கொள்வார்கள் பலவிதமான 84 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் மிக நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது. விலை ரூ. 4.

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறை காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 25 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 6.00 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். 12 படங்கள் கொண்ட சாம்பிள் ஸெட் ரூ. 3-50. கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில். அயல் நாட்டிலிருப்பவர் பூரா தொகையையும் பி. பி. ஓ.வில் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (P.P.M.) Amritsar.

காப்பாற்றுவாய் என்ற எண்ணத்தோடுதான் கேட்கிறேன். ஏன் ஊமை போல் நிற்கிருய்? நினைவில்லையா உனக்கு? நன்ருக யோசித்துப் பார்...

உக்ரமசிங்கன் யோசிக்கிருன் முன்பொரு சமயம் அவன் உயிரை அலமு காப்பாற்றியபோது, பதிலுக்கு அவள் வேண்டும் வரம் எதுவாளுலும் தருவதாக உறுதி தருகிருன் உக்ரமசிங்கன். இப்போது, தன்னைக் காப்பாற்றியவள், தன் வாக்குறுதியை நினைவுபடுத்தவே திடுக்கிட்டுப் பின்வாங்குகிருன்.

உக் : ஆமாம் பெண்ணே! இந்த உக்ரமசிங்கன் இதுவரை வாக்குத் தவறியதே இல்லை. இனியும் தவறமாட்டேன். ஆளுல் நான் உதவி செய்வதாகச் சொன்னது உனக்கு. உனக்காக என் உயிரை வேண்டுமாளுலும் தருகிறேன் என்றுதான் சொன்னேன். இவர்களுக்காக அல்ல இது உனக்கு சம்பந்தமில்லாதவிஷயம் உம்... உம் போய்விடு, போய்விடு.

அல : உக்ரமசிங்கா! உன் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளையும் வாய் மூடுகிறது. ஆளுல் நீயோ கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் மூக்கால் அழுவது உனக்கு வெட்கமாயில்லை? இது தாளு நன்றி காட்டுவதற்கு அடையாளம்? இதுதாளு கைம்மாறு செய்வதற்குஅறிகுறி? உம், போயும் போயும் உனக்கு உதவி செய்தேனே! இதை கேவலம் ஒரு சொறி நாய்க்குச் செய்தால் கூட அது காலமெல்லாம் என் காலடியை சுற்றிக் கொண்டிருக்குமே! நீயும் ஒரு மனிசளு? வருகிறேன்.

அலமு கிளம்புகிருள்.

உக் : உம் ... போகாதே நில்... உன் இஷ்டப்படியே அவர்கள் இருவரையும் விடுதலை செய்கிறேன்.

அல : உக்ரமசிங்கா! இப்போது தான் என் மனம் குளிர்ந்தது! ஒரு கொள்ளைக்காரளுலும் கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும் என்பதை நிலைநாட்டி, கொடுத்த வாக்கை காற்றில் பறக்கவிடும்

பல பெரிய மனிதர்களுக்கு வழி காட்டியாகி விட்டாய்!

வரே: பெண்ணே! என் நன்றியை உனக்கு எப்படி தெரிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. வீரச்சுடர் காட்டும் உன் திருமுகத்தைப் பார்த்த பிறகு சாவையும் புன்னகையோடு வரவேற்கும் துணிவு பிறந்துவிட்டது என் நெஞ்சத்திற்கு. உன் உதவியை என்றென்றும் மறக்கமாட்டேன். வருகிறேன்.

விசு: தாயே! நல்ல சமயத்துலே பராசக்தி மாதிரி வந்து எங்களை காப்பாத்தினியே! ஏ ஆயா, உன் காலைத் தூக்கி என் தலையிலே வச்சு என்னை ஆசீர்வாதம்பண்ணு அப்பத்தான் அடுத்த ஜென்மத்திலாவது நான் வீரத்தோட பொறக்கணும், ஏ ஆயா.

உக்: அவர்கள் கண்களை கட்டி இழுத்துச் செல்லுங்கள்.

அல: நன்றி உக்ரமசிங்கா, நான் வருகிறேன்.

காட்சி 3

தந்தையும் மகளும்

அலமு தன் தந்தை அனந்தரிடம் வருகிறாள். அவளைக் காணாமல் தவித்துக் கொண்டிருக்கிறார் அவர்.

அன: அலமு!

அல: அப்பா! என்னப்பா!

அன: அப்பா! இப்போது தாம்மா எனக்கு உயிரே வந்தது. இவ்வளவு நேரம் எங்கம்மா போயிருந்தே?

அல: எங்குமில்லையப்பா. நான் இவ்வளவு நேரம் என்ன செய்தேன் தெரியுமா? ஒரு பெரிய சிங்கத்தோட சண்டை போட்டேன்!

அன: என்ன! சிங்கத்தோடா?

அல: ஆமாப்பா! அது சாதாரண காட்டுச் சிங்கமல்ல; மனித சிங்கம்; உக்ரம சிங்கம்!

இனாம்! இனாம்!! இனாம்!!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.
3 புட்டிகள் (பூராமுறை) ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி வாட்சும், மோதிரமும் (ரியூகோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 ரியூகோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

அன: என்ன உக்ரம சிங்கனா? அவனா உன்னிடத்தில் சண்டைக்கு வந்தான்?

அல: அவன் வரவில்லையப்பா. நான்தான் அவன் குகைக்குள் நுழைந்து அவனோடு சண்டை போட்டேன்.

அன: நீயா? அவன் குகைக்குள்ளேயா? ஐயோ, ஏனம்மா அங்கு போனாய்?

அல: அவன் சிறை பிடித்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்யத்தானப்பா.

அன: ஐயோ, அலமு! ஆபத்தை வலுவில் போய் விலைக்கு வாங்கி கொண்டு வந்துவிட்டாயே அம்மா! இனி நாம் என்ன செய்வது?

அல: என்னப்பா? என்ன சொல்கிறீர்கள்?

அன: அந்தக் குகையின் ரகசியத்தை நீ கண்டுபிடித்து விட்டாய்! நீ நினைத்தால் அவர்களை கூண்டோடு நாசமாக்கி விடலாம். இனி எந்த நேரமும் எந்த விநாடியும் நமக்கு ஆபத்துதான்.

அல: இதற்கெல்லாம் பயந்தால் நான் அவர்களை காப்பாற்றியிருக்க முடியுமா அப்பா?

அன: அதற்காக நாம் அவன் வலையில் போய் சிக்கிக்கொள்வதா? அவன்மட்டும் நமக்கு தொந்தரவு செய்ய நினைத்தால் இந்த இடத்தில் நாம் இருக்கவே முடியாது. வேறு எங்காவது ஓடத்தான் வேண்டும். அய்யோ, பத்து வருஷங்கள் நிம்மதியுடன வாழ்ந்த நமக்கு இப்படி ஒரு ஆபத்து வந்து விட்டதே.

அல: அப்பா! உக்ரம சிங்கன் மறந்தும் நமக்கு தீங்கு செய்ய மாட்டான்.

அன: உனக்கு தெரியாதம்மா, நீ சிறு பிள்ளை.

ரூ. 1500/– இனாம்

டில்லி 'டெய்லி தேஜ்' முன்னாள் மானேஜர் எல். பிரஹ்ம நந்த்குப்தா எழுதுகிறார்:

"உங்கள் 'நேஷனல் கோல்டு' பார்சல் கிடைக்கப் பெற்றேன். வந்தனம். உண்மையான தங்கத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இல்லாததைக் காண நான் மகிழ்கிறேன். மீண்டும் ஆறு தோலாக்களை மறு தபாலில் அனுப்பவும். மேற்கொண்டு தேவைக்கான குறிப்பு தொடரும்". உறைகல்லில் தேய்த்தாலும் உண்மை தங்கத்தைப்போல் இருக்கும் இது. இதை கம்பியாகவும் தகடாகவும் அடிக்கலாம். எல்லாவகை ஆபரணங்களும் இதனால் செய்யலாம். அனுபவம் வாய்ந்த தங்க வியாபாரிகளும் இதற்கும் உண்மையான தங்கத்திற்கும் உள்ள வேற்றுமையை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. மேலே உள்ள சர்டிபிகேட் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1500 இனாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக தற்போது இதன் விலை ஒரு தோலா ரூ. 2.50. தபால் செலவு தனி. மூன்று தோலாக்கள் ரூ. 7. ஆறு தோலாக்கள் ரூ. 13. பத்து தோலாக்கள் ரூ. 20. அங்கீகரிக்கப்படாவிட்டால் பணத்தை வாபஸ் செய்ய உத்திரவாதம் தருகிறோம். கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில்.

PRADHAN KARYALA, P.B. 75 (PPM) AMRITSAR

அல : அப்படி நீங்கள் உண்மையிலேயே பயந்தீர்களேயானால் நாம் நமது நாட்டிற்கே போய் விட்டால் என்ன அப்பா?

அன : அலமு...!

அல : எனக்கும் இந்த ஏகாந்த வாசம் கொஞ்சமும் பிடிக்கவில்லை அங்கேயே போய்விடுவோம்.

அன : ஹஹாம். கூடாது, கூடாது. உயிர் போனாலும் நாம் அங்கே அடிபெடுத்து வைக்க முடியாது. அந்த எண்ணத்தையே மறந்து விடம்மா, அந்த எண்ணத்தையே மறந்துவிடு.

அல : என்னப்பா இது? ஒரு முறையாவது தாய்நாட்டைக் கண்குளிரப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு மட்டும் இருக்காதா? என் உதடு அசையும் முனபே என் உள்ளம் எதை விரும்புகிறது என்று தெரிந்து கொண்டு அதையெல்லாம் அப்படியே செய்வீர்களே! தந்தைக்கு தந்தையாகவும், தாய்க்கு தாயாகவும் இருந்து துன்பமென்பது இன்னதென்று தெரியாமல் என்னை வளர்த்தீர்களே! இப்போது மட்டும் ஏனப்பா இப்படி பிடிவாதமாகப் பேசுகிறீர்கள்?

அனந்தரர் கண்ணீர் விடுகிறார்.

அல : அப்பா! ஏன் வருத்தப் படுகிறீர்கள்? நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா அப்பா?

அன : இல்லையம்மா! நீ ஒரு தவறும் செய்யவில்லை. இந்த பாவி தான் உனக்குத் தவறு செய்து கொண்டே இருக்கிறான். உன் குழந்தை உள்ளத்தின் தணியாத ஆசையை தீர்த்து வைக்க முடியாத துர்ப்பாக்கியனாக இருக்கிறேன். என்னை மன்னித்து விடம்மா.

அல : என்னப்பா இது, உங்கள் மனம் நோகும்படி பேசியதற்கு நீங்கள்தான் மன்னிக்கவேண்டும்.

அன : அலமு!

அல : அப்பா! எனக்கு ஒரு சந்தேகம்.

அன : என்னம்மா?

ரூ. 6-க்கு கைக்கடிகாரம்



செயின் சிஸ்டத்தி வருட இயாரண்டியுடன் அளிக்கப்படும். 15 ஜூவல்ஸ் கைகடிகாரத்தை ரூ. 6க்கு பெறுங்கள்.

தபால் செலவு ரூ. 1.25 தனி.

குறிப்பு: எங்கள் ஹானி மூன் சென்டை பிரபலப்படுத்தவே இத்திட்டம். திட்டம் (Scheme) உங்களுக்கு பிடிக்கவில்லையானால் பணம் வாபஸ் செய்யப்படும்.

London Trading Agency,
(Watch Suppliers-P.P-3)
JULLUNDUR CITY.

அல : என் தாயைப்பற்றி...

அன : அலமு, பேசாதே! அவளைப்பற்றி இனி என்னிடம் ஒரு போதும் பேசாதே! அந்த பயங்கரமான ரகசியத்தை அறிந்து கொள்ள கனவிலும் முயற்சிக்காதே! தயவுசெய்து முயற்சிக்காதே கண்ணே!

வேலாயி வருகிறாள்.

வேலா : எஜமான்.

அன : என்ன வேலாயி?

வேலா : யாரோ ஒரு நோயாளி நம்ப தோட்டத்துக்கு எதுத்தாப் புலே வந்து விழுந்துட்டாருங்க...

அன : அடப்பாவமே!

வேலா : அவரை நம்ப பின் கட்டு வீட்லே படுக்க வச்சிருக்கனுங்க.

அன : அப்படியா! உடனே ஓடிப்போய் வைத்தியரை கூட்டி வந்து பார்க்கச்சொல்.

(அடுத்த இதழில் முடியும்)



பி. என். பிள்ளையின் சுபாஷ் மூவிஸார் தயாரிக்கும் "ஆளுக்கொரு வீடு" படத்தில் சக்யன், எஸ். விஜயலக்ஷ்மி, மாலதி முதலியோர் முக்கிய பாகத்தில் நடித்து வருகிறார்கள்



பிரண்ட் பிக்சர்ஸாரின் "தங்கம் மனசு தங்கம்" தமிழ்ப் படம் மிக விரைவில் திரைக்கு வரவிருக்கிறது. ஹாஸ்ய நடிகர் பிரண்ட் ராமசாமி இதைத் தயாரிக்கிறார்.

பாகவதர் வருகிறுர்....

பாகவதர் வருகிறுர். ஆமாம், தமிழ்ப்படவுலகின் முடிசூடா மன்னராக விளங்கி, தனது கர்ணும்ருதமான கானத்தால் சினிமா ரசிகர்களின் செவிகளில் தேன் பாயச் செய்த, படவுலகின் ஒரே 'பாகவதர்' பல வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் படவுலகிற்கு வருகிறுர்.

பாகவதர் படம் என்ருல் அதற்கு தனி வரவேற்பு. அவரது ஒரு படம் திரையிடப்பட்டது என்ருல் சில மாதங்களுக்குத் தியேட்டர்காரர்கள் கவலைப் படாமலிருப்பார்கள்: படம் மூன்று நான்கு மாதங்களுக்கு ஓடிக் கொண்டிருக்கும். பாகவதரின் அருமையான சாரீரத்திலிருந்து வெளிவந்த கர்நாடக சங்கீதப் பாடல்களைப் பாமர மக்கள்கூடப் பாடிக் கொண்டிருப்பார்கள். இன்னும் பாடிக்கொண்டிருக்கிருர்கள்.

பாகவதர் படவுலகில் தெய்வமாக மதிக்கப் பட்ட காலம் அது. பாகவதர் ஜிப்பா, பாகவதர் கிருப்பு என்று பாகவதரைப் பற்றியே பேசும் அளவுக்கு அவர் ஒரு சக்கரவர்த்தியாக விளங்கினுர். இந்தியப் பட வரலாற்றிலேயே பாகவதர் நடித்த படம்தான் (ஹரிதாஸ்) அதிக நாள் ஓடியது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இடைக்காலம் பாகவதருக்குச் சாதகமாக இல்லை. அவரது சிறைவாசத்திற்குப்பின் வந்த அவரது படங்களும் தோல்வியுற்றன. ஆகவே பாகவதர் படவுலகிலிருந்தே விலக நேர்ட்டது. எல்லோரையும் வாழவைக்கும் நல்லவரான எம். ஏ. வேணுவின் முயற்சியில் "சிவகாமி" என்ற தமிழ்ப் படம் தயாராகி வருகிறது. எம். கே. தியாகராஜ பாகவதர் அதிலே பிரதம பாகத்தில் நடிக்கிருர்.

எம். கே. தியாகராஜ பாகவதர் பாட்டைக் கேட்டுப் பல வருஷங்களாகி விட்டன. எனவே ரசிகர்கள் அவரது கானத்தைக் கேட்க வெகுவாக விரும்புவார்கள் என்பது திண்ணம். இன்றும் சிலர் பாகவதரைப் போல் பாட முயற்சித்து வருவதே பாகவதர் பாடல்களுக்கு மவுசு இருப்பதைப் பறைசாற்றுகிறது. அந்தப் பாகவதரே படத்தில் தோன்றிப் பாடும்போது வரவேற்பில்லாமல் போய் விடுமா என்ன?

"சிவகாமி"யில் பாகவதர் அருமையாகப் பாடியிருக்கிருர் என்கிருர்கள். படவுலகில் ஒருவரது படம் தோல்வியுற்ருல் உடனே அவரை ஒதுக்கி விடுவது வழக்கம். ஆனுல் அதை மாற்றி பமைக்க முயற்சிக்கும் வேணுவைப் பாராட்டுகிருேம். அவர் முயற்சியை வரவேற்கிருேம். எப்படியோ, பாகவதர் வரவு நல்வரவாக இருக்கட்டும் என்று வாழ்த்துகிருேம்.

தமிழ்ப்பட ரசிகர்கள் வரவேற்கத் தயாராகி விட்டார்கள் என்று நம்புகிருேம்.

நக்ஷத்திர மண்டலத்தில் நான்கு வாரங்கள்

'கல்யாணப் பரிசு' தெலுங்குப் பட ஆரம்ப விழாவன்று திருச்சி அருணாசலம், சடகோபன் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ருசிகரமான சம்பவங்களை சடகோபன் சொன்னார். ஒன்றை இங்கே தருகிறேன்.

வீனஸ் பிக்சர்ஸின் 'கல்யாணப்பரிசு' நூருவதுநாள் விழா சில தியேட்டர்களில் நடைபெற்றதல்லவா? ஒவ்வொரு நாள் ஒவ்வொரு மேடையில் நக்ஷத்திரங்கள் தோன்றினார்கள். ஒரு இடத்தில் ஒரு தமாஷ் நடந்தது. ஜெமினி கணேசனும் சரோஜாதேவியும் ஒரிடத்



புகைப்படங்கள்:
திருச்சி கே. அருணாசலம்.



தில் கண்ணாடி ஜன்னலருகே இருந்த
வர். வெளியே ரசிகர்கள் கூட்
டம். சில தீவிர வாதிகள் அவர்
களைப் பார்க்க கண்ணாடியை
உடைத்துவிடப் போகிறார்களோ
என்ற பயம் விடுதிக்காரர்களுக்கு
இருந்தது! அவர்கள் அங்கிருந்து
நழுவ முயற்சிக்கும் போது, புகைப்
படக் கலைஞர் அருணாசலம் இரண்டு
படங்களை எடுத்துக்கொண்டார்
நீங்கள் இங்கே அந்த விசேஷப்
புகைப் படங்களைத்தான் பார்க்கி
றீர்கள். அந்தக் கண்ணாடிகள் இன்
னும் உடையவில்லை!

* * *

'பாண்டித் தேவன்' படத்தில்
"நான் சொல்லறதைச் சொல்
லிப்புட்டேன்...கேட்டால் கேளுங்க
...விட்டால் விடுங்க..." என்றொரு
பாட்டு வருகிறது. இந்தப் பாட்டை
சந்திரபாபு அதில் பாடியிருப்பதும்
உங்களுக்கு நினைவுக்கு வரும்.

இந்தப் பாட்டு பிறந்த கதை
சுவையானது. அப்படத்தின் தயா
ரிப்பாளரும் டைரக்டருமான
கே. சுப்ரமண்யம் இதை என்னிடம்
தெரிவித்தார்.

படவுலகம் சம்பந்தப்பட்ட ஒரு
விழாவுக்கு டைரக்டர் சுப்ரமண்யம்
சென்னை முதலமைச்சர் காம

ராஜரை தலைமை வகிக்க அழைக்கச் சென்றிருந்தார்.

சுப்ரமண்யம் சொன்ன விஷயத்தைக் கேட்டதும் காமராஜர் அவரிடம் "இம்மாதிரி விழாக்களுக்கு என்றுதான் எனது மந்திரி சபையிலிருந்து இரண்டு பேரை அனுமதித்திருக்கிறேனே. தவிர, நான் வந்து பேசுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள் அது நல்லதாக இருந்தாலும், அதைக் கேட்டு, யார் அதன்படி நடக்கப் போகிறார்கள்? நாம் சொல்வதைச் சொல்ல வேண்டியதுதான். கேட்காமல் போகவேண்டியதுதான். இதெல்லாம் எதற்கு?" என்று சொல்லிவிட்டார்.

மந்திரி சொன்ன தத்துவ ரீதியான விளக்கம் சுப்ரமண்யத்தின் இதயத்தைத் தொட்டது. அவர் இதை பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம் அப்படியே சொல்லி, இதே கருத்துக்கள் வரும் வகையில் ஒரு பாட்டை எழுதித் தரும்படிக் கேட்டார். பட்டுக்கோட்டையாரும் எழுதிக் கொடுத்தார்.

இதைத்தான் பாண்டித் தேவனிலும் நாம் கேட்டோம். காமராஜர் மொழிகள் கவிதையாக மாறிவிட்ட இந்தக் கதை ஒரு சிலருக்கே தெரியும்!

* * *

மலாயாவிலிருந்து திரும்பி வந்ததும் வராததுமாக, திருப்பதிக்கருகாமையிலுள்ள ராயல செருவு கிராமத்தில் 'பொன்னு விளையும் பூமி' படத்தின் வெளிப்புறக் காட்சியில் கலந்து கொண்டார் பத்மினி. அப்போது அங்கே அவருக்கு ஒரு ரசமான அனுபவம் ஏற்பட்டது.

பத்மினி அங்கே போனதும் கிராமத்து மக்கள் எல்லோரும் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். சிலர் தாரை, தப்பட்டைகளும், மற்றும் தீப்பந்தங்களையும் கையில் எடுத்துக் கொண்டு பத்மினியையும்,

அன்புள்ள வனஜா,

புஹாரி பூங்காவில் நீ கொடுத்த விருந்தை நான் மறக்கவே இல்லை. அன்று சாப்பிட்ட உணவு வகைகள் போல் இதுவரை எங்குமே கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்பொழுதும் புஹாரியில் அதே பீச்-மெல்பா இன்னும் வைட்டமின் சத்துள்ள பல வெஜிடபிள் உணவு வகைகள் ஏராளமாகத் தயாரிப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தத் தடவை நாம் நிறைய சினிமாப் படங்கள் பார்க்க வேண்டும் என்று எழுதி இருக்கிறாய். சினிமா என்றவுடன் புஹாரியின் பீச்மெல்பா, ஐஸ்-க்ரீம் வகைகள்தான் ஞாபகம் வருகின்றன. முன்னால் பீச்மெல்பாவையும், பின்னால் சினிமாவையும் ஒரு கை பார்த்து விடலாம் அல்லவா?

அன்புள்ள
கமலா

புஹாரி

ஹோட்டல்ஸ்

மவுண்ட் ரோடு, சைனா பஜார், சென்ட்ரல், எழும்பூர் & மெரீனா

துப்பறியும் நாவல்கள்

எஸ். விஜயராகவன்		
வானொலிப் பாடகி	1	50
நா. ரா. நாச்சியப்பன்		
சோமநாதபுரத்து கோரக் கொலை	0	75
ஏ. எம் மீரான்		
கொடுமை செய்யும் திருக்கூட்டம்	1	00
நீலா எங்கே?	1	50
பவழம் திருடிய பட்டுக்கை	1	50
துப்பறியும் குற்றவாளி	1	50
கண்ணம்மாவைக் காணவில்லை	1	50
வி. ராமமூர்த்தி		
'333''	1	00
'666''	1	00
தூக்குக்கயிறு	0	60
ஓய்வில்லாத வீடு	0	75
பயங்கரக் கனவு	0	50
கொலைக்கு விலை	0	75
நாய்கள் ஜாக்கிரதை	0	75
நான் சாகமாட்டேன்	0	75
சூட்சமக் கொலை	0	60
கே. மதுபாலா		
மிஸ்டர் க்யூ	0	60
விருந்துக்குப்போன விமலா	1	25
ஏ. கே. சேஷய்யா		
வெள்ளை ரோஜா மர்மம்	0	75
சாவித்திரி விலாஸ் மர்மம்	0	75
ஜெகசிற்பியன்		
மன்மத பங்களா	2	00
ஏ. சுப்பையா		
நடுத்தெரு மோகினி	0	75
நர்ஸ் நாகமணி	0	50
மோகன விலாஸ் மர்மம்	0	50
சியாமளா		
வலையில் சிக்கிய வனிதை	1	25
சிரஞ்சீவி		
பறக்கும் தட்டு	2	00
கே. ஜி. ராஜ		
கொடியவன்	0	60
டாக்டர் எஸ். ஏ. சஞ்சீவி		
நடு இரவு அலறல்	0	60
பயங்கரப் பார்சல்	0	60

$33\frac{1}{3}$ சதவிகிதம் கழிவு

ரயில்வே, தபால் செலவு பிரத்தியேகம்.

உஷா & கம்பெனி

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

மற்றும் கலைஞர்களையும் வரவேற்க ஆரம்பித்து விட்டார்கள்.

பத்மினிக்கு இதைக் கண்டதும் ஒரே ஆச்சர்யமாகப் போய்விட்டது.

வரவேற்பு முடிந்ததும் பத்மினியையும், மற்றவர்களையும் உட்கார வைத்து அக்கிராம மக்கள் நடனம் ஆட ஆரம்பித்து விட்டார்கள்.

ஆங்காங்கே தீப்பந்தங்கள் எரிய அவர்கள் ஒன்றுகூடி நடனமாடியதைப் பார்க்கப் பார்க்க பத்மினிக்கு ஆவல் பொங்கி எழுந்தது அவரும் உடனே எழுந்து சென்று அவர்களுடன் நடனமாட ஆரம்பித்து விட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் டைரக்டர் பீம்சிங்கும் அவர்களுடன் நடனமாட ஆரம்பித்து விட்டார்.

ஒரே மகிழ்ச்சியின் ஆரவாரம் அங்கு எதிரொலித்தது.

''வெளிப்புறக் காட்சிகளுக்காக நான் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் இந்தக் கிராமத்து மக்கள் எனக்களித்த வரவேற்பையும், ஆடிக்காட்டிய நடனத்தையும் நான் மறக்க முடியாது'' என்றார் பத்மினி.

* * *

'முதலாளி' புகழ் தேவிகா வீட்டில் புதிதாக ஒரு ரேடியோகிராம் இருக்கிறது. ஆனால் அவர் வீட்டின் இரும்பு பீரோவில் அவர் உபயோகித்து வந்த பழைய ரேடியோ இருக்கிறது. இதைப் பற்றி நான் அவரிடம் கேட்டேன்.

''அம்மா இந்த ரேடியோ அதிருஷ்டம் வாய்ந்ததெனக் கருதுகிறார். இதை வாங்கியபோதுதான் எனக்கு ஏவி. எம் மில் காண்டிராக்ட் ஆகியது. அதனால் இதை எடுத்து பத்திரமாக வைத்திருக்கிறார். இதுவரை எத்தனையோ பேர்கள் இதை விலைக்குக் கேட்டுப் பார்த்தார்கள். அம்மா கொடுக்கவே மாட்டேன் என்று மறுத்து விட்டார்'' என்று சொன்னார் தேவிகா.

89694

விரைவில் வருகிறது!
அருணாசலம் பிக்சர்ஸ்
கைதியின் காதலி
தயாரிப்பு & டைரக்ஷன்: A.K. வேலன்
இசை: K.V. மஹாதேவன்
அருணாசலம் ஸ்டூடியோஸ்
சென்னை-26
PSR

பேசும் படம்
REGD. No.
செப்டம்பர் 1959 • 75 காசு
நீலா புரொடக்ஷன்ஸ்...
யானை வளர்த்த
வானம்பாடி
டைரக்ஷன் : சுப்பிரமணியம் * ஸ்டுடியோ : மெர்ரிலாண்
விவரங்களுக்கு : ஸிடி தியேட்டர்ஸ் (பி) லிட்.,
PSR